சைவப் பிரகாச சபை

திருவனந்தபுரம்

நூற்றாண்டு விழா மலர் - 1985

உ

தமிழ்த்தெய்வ வணக்கம்

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்,
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே,
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநல் திருநாடும்;
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே.

பேராசிரியர்
பெ. சுந்தரம் பிள்ளை





Press Secretary to the President

No. F. 2-M/85

President's Secretariat
Rashtrapathi Bhavan
New Delhi-110004
August 29, 1985



Dear Shri Pillai,

Please refer to your letter dated the 12th August, 1985. The President of India is glad to know that the Saiva Prakasa Sabha, Trivandrum, is celebrating its Centenary from September 20-24, 1985. The President sends his greetings and best wishes on the occasion.

Yours sincerely,
K. Suryanarayana.)

Smt. Rajeshwari Tandon
Social Secretary to PM
No 9/10/85-P M P-III

Prime Minister's Office
New Delhi - 110011
September 3, 1985

Dear Shri Pillai,

The Prime Minister Shri Rajiv Gandhi sends his good wishes to the Saiva Prakasa Sabha on the occasion of its Centenary celebrations at Trivandrum from 20th-24th September, 1985.

Yours sincerly,
(Rajeshwari Tandon)



RAJBHAVAN
Trivandrum
October 24, 1985

MESSAGE

I am happy to be informed that the Saivaprakasa Sabha, Trivandrum which celebrated its centenary recently, is bringing out a souvenir to commemorate this historic occasion. I trust the Sabha will continue in its endeavours to shed light on and advance the frontiers of our cultural and literary horizons. My good wishes to the Sabha for decades of purposeful activity.

P. RAMACHANDRAN

MINISTER OF
STATE FOR PLANNING
NEW DELHI-110001
INDIA

August 28, 1985.

MESSAGE

I am happy to learn that the centenary celebrations of the Saiva Prakasa Sabha are being organised in September 1985. During its century long existence the Sabha has served as a forum for religious and literary activities and has also been instrumental in bringing out many outstanding publications on religion, art and culture.

I convey to all members of the Sabha my very good wishes on this special occasion and hope that the Sabha will continue to do its good work in disseminating the cultural heritage of India.

(K. R. Narayanan)

தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி-623 206
இராமநாதபுரம் மாவட்டம்
தொலைபேசி : குன்றக்குடி 27.

வாழ்த்துரை

திருவனந்தபுரம் சைவப்பிரகாச சபை, நூற்றாண்டுவிழாக் கொண்டாடுவது மகிழ்ச்சியைத் தருகிறது.

சைவம் காலங்கடந்த சமயம். சைவத்தின் முதற்பொருளாகிய சிவம் கால தத்துவத்தைக் கடந்த பொருள். ஆயினும் உயிர்க்குலம் உய்தியை நோக்கி விரைந்து செல்ல வேண்டுவது தவிர்க்க இயலாதது. உயிர்க்குலத்தின் வாழ் நாளும் செயற்பாடுறுபணிகளும் கால எல்லைக்குள் நிற்பன.

தமிழின வரலாற்றில் புகழ்பூத்து விளங்கிய சேரநாடே பின் கேரள மாநிலமாயிற்று. கேரள நாகரிகம் தமிழ் தழீஇய நாகரிகமேயாம். திருவஞ்சைக் களத்தைத் தலைமையிடமாகக் கொண்டே சேரமான்பெருமான் நாயனுர் ஆண் டார். இத்தகு புண்ணிய பூமியில் கடந்த ஒரு நூற்றாண்டாக சைவப்பிரகாச சபை அமைத்துத் தொண்டு செய்துவரும் மெய்யன்பர்களுக்கு நமது வாழ்த்துக்கள்.

சைவப்பிரகாச சபை சென்றகாலத்தில் செய்த பழுதிலாப் பணிகளுக்கு நன்றி; கடப்பாடு. இனிவருங்காலத்தில் இயற்ற இருக்கும் பணிகளுக்கும் நமது வரவேற்பு; பாராட்டுக்கள்; வாழ்த்துக்கள். சைவப்பிரகாச சபையின் அரிய பணிகளுக்கு நமது ஒத்துழைப்பு விருப்பவைப்புபோல என்றும் உண்டு.

வாழ்க, சைவப் பிரகாச சபை !
வளர்க, அதன் பணி !

(ஒப்பம்)

சிவப்பிரகாசதேசிக பரமாசாரியசுவாமிகள்
குருமகாசந்நிதானம்
திருவாவடுதுறை ஆதீனம்

திருவாவடுதுறை 609 803
(தஞ்சை மாவட்டம்)

ஆசியுரை

திருவனந்தபுரம் சைவப்பிரகாச சபை நூற்றாண்டுவிழா கொண்டாட இருப்பது அறிந்து மகிழ்கிறோம். இச்சபையானது கடந்த நூறு ஆண்டுகளாகச் சைவ சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துதல், நூல்கள் வெளியிடுதல், நூலகம் அமைத்தல், விழாக்கள் எடுத்தல், ஆய்வுக்கட்டுரைகள் வழங்கல் முதலிய பல வழிகளில் சைவப் பயிர் தழையத் தொண்டு புரிந்து வருகிறது. இச்சபையின் நூற்றாண்டு விழாவின் இனிய நினைவாக மலர் ஒன்று வெளிவர இருப்பது அறிய மகிழ்ச்சி.

நூற்றாண்டு விழா நன்கு நிகழவும் மலர் சைவமணம் பரப்பிச் சிறக்கவும் இதில் பங்கு பெறும் அனைவரும் எல்லா நலங்களும் பெற்றின்புறவும் எமது ஆன்மார்த்த மூர்த்தம் ஸ்ரீ ஞானமா நடராஜப் பெருமானது திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

(ஒப்பம்)

S. RAMANATHA PILLAI B.Sc. (Engg), F.I.E. (Ind.)
Retd. Chief Engineer Kerala P.W.D

Tel: 63688 ''RAMANI'' U.S. Road
Trivandrum-695010

வாழ்த்துரை

சைவ சமயம் பண்டைத் தமிழ்மக்களால் போற்றிப் புகழப்பட்டு வந்தது. சைவநெறி தமிழினத்தின் தலையான நெறி, இணையற்ற இன்ப நெறி. சைவர்கள் இறைவனைச் சிவமெனவும் சோதி யெனவும் போற்றித்துதிப்பர். ஞாலம்உய்ய, நாடுஉய்ய, சைவநன்னெறியின் சீலம் உய்ய, சமயக் குரவர்கள் தோன்றினர்கள். சைவம்வளர, தமிழ்வளர, தருமம் ஓங்கித் தழைத்துவர, திருவனந்தபுரத்தில் 1885ல் சைவப் பிரகாச சபை ஆரம்பமாயிற்று.

சாதிவேற்றுமையைக் கடந்தது சைவம். ஒற்றுமை உணர்வை உலகிற்கூட்டவே பலபெரியார்கள் சன்மார்க்க போதனைகள் செய்தார்கள். இச்சமய வழி பாட்டைத் தமிழ் மொழியில் நடத்தி வருகிறது (சை) வப் பிரகாச சபை. நூற்றுண்டு விழாக் கொண்டாடும் இத்தருவாயில், திருவனந்தபுரம் சைவப் பிரகாச சபையைத் தோற்றுவித்த பெரியோர்கள் அனைவருக்கும் எனது அஞ்சலி. அப்பெரியோர்கள் வகுத்த நன் நோக்கங்களைத் தவருது நடத்தி வந்த, நல்லோர் யாவருக்கும் எனது நன்றி. பலதிட்டங்கள் வகுத்து, சபையை வலியுறச் செய்த, மதிப்பிற்குரிய தமிழ்த் தொண்டர்களுக்கெல்லாம் எனது வணக்கம்.

இத்துடன் வெளியிடுகின்ற நூற்றுண்டு விழாச் சிறப்புமலரைத் தயாரித்து, அச்சிட்டு விளம்புகின்ற பேரன்புமிக்க நண்பர்களுக்கு எனது உளம்கனிந்த பாராட்டுதல். தம்மாலியன்ற சமயப் பணிகளை நாள்தோறும் செய்ய முன்வந்து சபையை ஊக்கப்படுத்தி விளங்கவைத்த தமிழ்ப் பெருமக்களை நான் வாழ்த்துகின்றேன்'

ஓங்குக சைவப்பிரகாச சபை! உயருக செந்தமிழ் நறுமணம்.

திருவனந்தபுரம்,
20—9—1985.

சி. ராமனுத பிள்ளை
தலைவர், சைவப்பிரகாசசபை

மலர் வாழ்த்து

முதுபெரும்புலவர்: செ. சதாசிவம்
(நாகர்கோயில்)

(விருத்தம்)

1. திருமகளும் கலைமகளும் சேர்ந்து வாழும்
சேரலத்தில் எழில்கல்விக் குறையு ளாகித்
திருப்பதிகள் நூற்றெட்டுள் சிறப்புற் றோங்கும்
திருவனந்த புரத்தெம்மான் செங்கண் மாயன்
திருவனந்தன் மேற்றுயில்வோன் அருளி னாலே
தீந்தமிழ்தேர் அறிஞரன்று கழகம் கண்டார்;
பெருவனப்போ டுருத்தாங்கி அந்தச் சைவப்
பிரகாச சபையின்று பிறங்கு மாலோ.

2. செந்தமிழில் சிவநெறியில் திளைத்து மக்கள்
தெய்வவருள் பெற்றுய்ய வேண்டு மென்னும்
முந்தியெழு ஆர்வமது வித்தாய் வீழ
முளையாகிச் செடியாகி மரமு மாகிக்
கொந்தலர்ந்து பூத்ததொரு மலரைக் கண்டோம்;
கோதில்லா மலரின்னும் கோடி பூத்துச்
சந்தமிகு கற்பகமாய்ச் சபையெந் நாளும்
தழைத்தோங்கச் சண்முகன்தாள் தாழ்கு வேனே.

(வெண்பா)

3. சைவம் மணம்பரப்பும்; தண்டமிழும் தேன்பரப்பும்;
தெய்வம் திருவருளைச் சேர்ப்பிக்கும்;— மெய்வகை
ஊட்டும் உரைமணிகள் உள்ளொளிரும் இம்மலரைத்
தேட்டம் எனக்கொள்வோம் தேர்ந்து.

உ

காணிக்கை

வாழ்வாங்கு வாழ்ந்து சைவமும் தமிழும் தழைத்தோங்க, சைவப்பிரகாச சபைநிறுவிப் பணிபுரிந்து நம் இதயங்களில் குடிகொண்டு என்றும் நிலைத்துநிற்கும் சான்றோருக்குச் செய்யும் அஞ்சலியே இம்மலர்.

கந்தன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்க்கும் இந்தத் திருச்சபையின் ஏற்றத்திற்கு இதுகாறும் பாடுபட்ட நல்லுள்ளம் படைத்த எல்லோருக்கும் இம்மலரைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறோம்.

முந்தையோர் திருப்பணியை அடியொற்றிச் சபை சிறந்தோங்க ஆவனசெய்வோம் என்னும் உறுதிமொழியின் சின்னமே இந்நூற்றாண்டு மலர்.

எழுத்தோவியங்களால் இம்மலரை எழிலுறச் செய்த எழுத்துலகச் சிற்பியர்க்கும் விளம்பரங்கள் தந்துதவிய பெருமக்களுக்கும், அழகுற அச்சிட்ட அச்சக அன்பர்களுக்கும் எங்கள் நன்றி.

மலர்க்குழுவினர்

அன்பே சிவம்

திருவனந்தபுரம் சைவப் பிரகாச சபை



‘‘தெய்வம் தொழுவோம்; திருந்தத் தமிழ் கற்போம்.’’ தெய்வத் திருத்தொண்டும், செந்தமிழைப் போற்றும் பெருந்தொண்டும் நாளும் பேணி நூற்றாண்டு கண்டு பொலிவோடு நிற்கின்றது திருவனந்தபுரம் சைவப்பிரகாச சபை. இச்சபையின் தோற்ற வரலாறும், வளர்ச்சிப் பாதையும், ஆற்றிவரும் தொண்டின் திறனும் அளந்து கூறிடின் அளவில் பெருகும். எனினும் சுருங்கக் கூறுதல் கடமை எனக் கொண்டு ஈண்டு குறிப்பிடுகின்றோம்.

கேரளமாய் இன்று விளங்கும் மாநிலத்தின் ஒரு பகுதியே முன்னைத் திருவிதாங்கூர் சமஸ்தானம். அதன் தலைநகராக விளங்கிய திருவனந்தபுரம் தொடர்ந்து கேரளத்தின் தலைநகராகவும் திகழ்கின்றது. இப்பெருநகரில் வழிவழியாக வாழ்ந்துவரும் தமிழ்ப் பெருங்குடியினரின் தாய்மொழியும் அவர் கொண்டொழுகும் சைவத் திருநெறியும், கலை—கலாச்சாரத் துறைகளும் நிலைத்து நிற்கவும் - வளர்ந்தோங்கவும் துணை நின்று தொண்டாற்றும் ஒரே நிறுவனம் திருவனந்தபுரம் சைவப்பிரகாச சபை என்பது மிகையன்று.

சென்ற நூற்றாண்டில் இப்பெருநகரில் வாழ்ந்த சைவ நெறிவந்த செந்தமிழ்ச் சான்றோரின் எண்ணத்தில் எழுந்து புரவலர் பெருமக்கள் பலர்தம் துணையால் வண்ணம் பெற்று வளர்ந்தோங்கி நிற்கும் இச்சபையின் தொடக்க நாள் கி. பி. 1885 (கொல்லம் ஆண்டு 1060) சித்திரைத் திங்கள் முதல் நாள் - தமிழ்ப் புத்தாண்டு தொடக்கத் திருநாள் என்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

திருவிதாங்கூரை ஆட்சி புரிந்த மன்னர் பரம்பரையினரின் நல்லாசியும் ஆதரவும் இச்சபையின் துவக்க காலம் முதல் வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் பயனூட்டி நின்றமை எண்ணிப் போற்றத் தக்கது. தமிழார்வம் மிக்க வள்ளன்மையாளர்தம் துணையுடன் தோன்றியநாளிலிருந்து ஓராண்டிற்குள் சபைக்குரிய மண்டபம் ஒன்று நிறுவுதற்கான மனை வாங்கப் பெற்று அம்மனையிலேயே மண்டபத் திருப்பணியும் துவங்கப்பெற்றது. 1886-ஆம் ஆண்டு தைத் திங்களில் மண்டபத் திறப்புவிழா நிகழ்ச்சியும் இனிது நிகழ்ந்தது.

இச்சபையின் நிறுவனர்களாக விளங்கிய பெருமக்களில் வலியமேலெழுத்து திரு. திரவியம்பிள்ளையைத் தலைவராகவும், பேராசிரியர் மனோன்மணீயம்' - திரு. பி. சுந்தரம்பிள்ளையைத் துணைத்தலைவராகவும், வழக்கறிஞர் திரு. சுவாமிநாதபிள்ளையைச் செயலாளராகவும் கொண்ட நிருவாகக்குழுவே சபையின் முதல் நிருவாகக்குழுவாகச் செயல்படத் துவங்கியது.

இச்சபையின் நிறுவனர்களால் உருவாக்கப் பெற்ற சபையின் நோக்கங்கள்:

1. திருவருள் முன்னிலையில் பிரசங்கம், புராணபடனம், நூலாராய்ச்சி ஆகியன செய்தல்.
2. தமிழ்மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றைப் போற்றி வளர்த்தல்.
3. தமிழ்ச் சமுதாயப் பழக்க வழக்கங்களைச் சீர்திருத்துதல்.
4. தமிழ் மக்களின் பொருளாதார நிலையை மேன்மையுறச் செய்தல்.
5. தமிழ்ச் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தல்
6. தமிழ் மக்களின் உயர்தரக்கல்வி, தொழிற் கல்வி ஆகியவற்றிற்குரிய வசதிகள் அளித்தல்.

இத்தகு சீரிய நோக்கங்களுடன் சபையின் செயல்பாடுகள் தோற்றக் காலந்தொட்டே நிகழத் தொடங்கின. தமிழ்வரலாற்றில் தமக்கெனத் தனியிடம் கண்ட பெருமக்களான பேராசிரியர் மனோன்மணீயம். திரு. சுந்தரம்பிள்ளை, ஆராய்ச்சிப் பேரறிஞர் திரு. கே. என். சிவராஜ பிள்ளை, இசைச் செல்வர் திரு. தி. இலக்குமணப் பிள்ளை. கவிமணி திரு. தேசிகவிநாயகம்பிள்ளை. ஆராய்ச்சி வல்லுநர் பேராசிரியர் திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை ஆகியோர் இச்சபையின் நிருவாகிகளாகவும், உறுப்பினர்களாகவும் விளங்கியதோடு நாடோறும் இச்சபை மண்டபத்தில் கூடிச் சமய இலக்கிய நூற்கள் பற்றிப் பல்வேறு ஆய்வுகளையும் புரிந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். இப் பெரியார்கள் பிற்காலத்தில் தாங்கள் குறிப்பிட்டிருக்கும் செய்திகளில் தங்கள் ஆராய்ச்சித் துறை வளர்ச்சிக்குச் சைவப்பிரகாச சபையில் நடைபெற்ற கலந்துரையாடல்கள் மிகவும் துணை நின்றன எனக் கூறியிருப்பது இச்சபையின் அடிப்படை நோக்கங்களின் வெற்றிப் பாதையைச் சுட்டுகின்றது.

சபை மண்டபம் கட்டப்பட்ட நாளிலிருந்து மண்டபத்தினுள் அமைக்கப்பட்டிருக்கும் நடராஜர் சந்நிதியில் வழிபாடுகள் முறையே நடைபெற்றுவருகின்றன. சமயத் தொடர்பான சிறப்பு நாட்கள், விழாக்கள் முறையே காலா காலங்களில் தமிழ் மக்களின் நல்லாதரவுடன் கொண்டாடப் பெற்றுவருகின்றன.

பல்வேறு துறைகளில் மேம்பட்டு விளங்கிய தமிழ்ப் பெரியார்களும், அரசியல் தலைவர்களும், அறிஞர் பெருமக்களும் இச்சபைக்கு வருகை தந்து பெருமை சேர்த்த வரலாறு குறிப்பிடத் தக்கதாகும். கவியரசர், தேசியக் கவி. சுப்பிரமணியபாரதி திருவனந்தபுரம் வந்த காலை இச்சபைக்கு வருகை தந்துள்ளார். இந்தியக் குடியரசின் துணைத்தலைவராய் இருந்த போது டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், திருவிதாங்கூர் மன்னர் ஸ்ரீ சித்திரைத் திருநாள் பாலராம வர்மா, கேரள மாநிலத்தின் ஆளுநர்களாய் இருந்த டாக்டர். இராமகிருஷ்ணராவ் திரு. வி. வி. கிரி, திரு. வி. விஸ்வநாதன் திருமதி ஜோதி வெங்கிடாசலம், கேரள மாநில முதல்வர்களாய் இருந்த திரு. பட்டம் தாணு பிள்ளை. திரு. ஆர். சங்கர், அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர். திரு. கு. காமராஜ், ஆகிய பெரியோர்கள் அவ்வப்போது இச்சபையின் விழாக்கள் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு வருகை தந்து நல்லுரை வழங்கிப் பெருமை செய்துள்ளார்கள்.

திருவிதாங்கூர் பொது நிறுவனங்கள் பதிவுச்சட்டத்தின்கீழ் 1929-ஆம் ஆண்டு சைவப் பிரகாச சபை பதிவு செய்யப்பெற்றது. அக் காலை சபையின் நிருவாகப் பொறுப்பை இசைச் செல்வர் திரு. தி. இலக்குமணப்பிள்ளை தலைவராகவும், திரு. வி. சுப்பிரமணியபிள்ளை செயலாளராகவும், திரு. ஏ. விஸ்வலிங்கம்பிள்ளை பொருளாளராகவும் இருந்து நடத்தி வந்தனர்.

சபையின் ஐம்பத்தைத்தாம் ஆண்டு நிறைவு பெற்றகாலை 1940-ம் ஆண்டு புதிய நிருவாகக் குழு பதவி ஏற்றது. அக்குழுவின் தலைவராக, ஓய்வுபெற்ற திவான் பேஷ்கார் திரு. ஆர். வைத்தியலிங்கம்பிள்ளை பதவி ஏற்றார். செயலாளராக திரு. எஸ். பிறவிப்பெருமாள்பிள்ளையும், பொருளாளராக திரு. கே. விஸ்வநாதபிள்ளையும் பொறுப்பேற்றனர். 1951-ம் ஆண்டு செயலாளர்களாக திரு. அய்யம்பெருமாள்பிள்ளை திரு. எம். எஸ். குமாரசுவாமிப்பிள்ளை ஆகியோரும், பொருளாளராக திரு. டி. எம். சிவசுப்பிரமணியபிள்ளையும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். 1954-ம் ஆண்டு அரசியல் அறிஞர். திரு. பி. எஸ். நடராஜபிள்ளை சபையின் துணைத்தலைவராகப் பொறுப்பேற்றார். 1957-ம் ஆண்டு திரு. பி. முத்துகிருஷ்ணபிள்ளை சபையின் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். இவ்வாறு பெரியார்கள் பலர் நிருவாகப் பொறுப்பேற்றுச் சபையின் பணிகளுக்கும் வளர்ச்சிக்கும் தொண்டாற்றிவந்தனர்.

இச்சபையின் ஆதரவுடன் 1955-ஆம் ஆண்டு முதல் 1962-ஆம் ஆண்டுவரை திருவாவடுதுறை ஆதீனத்தார் திருவனந்தபுரத்தில் சைவ சித்தாந்தமாநாடுகளை சமய-இலக்கிய-கலைநிகழ்ச்சி

பலவற்றுடன் ஆண்டுதோறும் சிறப்புற நடத்தி வந்தனர். 1957-ம் ஆண்டு முதல் மார்கழித் திங்களில் திருப்பாவை திருவெம்பாவை விழாக்கள் சபையின் சார்பில் நடைபெற்று வந்தன.

இவ்வாறு அவ்வப்போது சபையில் நடைபெறும் விழாக்கள் பற்பல வாயினும் 1952-ம் ஆண்டு முதல் சபையில் நிகழத் தொடங்கிய கந்த சஷ்டி விழா ஆண்டுதோறும் புதுமையும் பொலிவும் பெற்று தமிழ்மொழி, சைவத் திருநெறி, கலை ஆகியவற்றின் பெருமைக்குரிய சிறப்பு நிகழ்ச்சிகள் பலவற்றையும் உள்ளடக்கிய பெருவிழாவாக வளர்ந்தோங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

சபையில் இதுகாறும் நடைபெற்றுள்ள சிறப்பு விழாக்களில் பங்கேற்றுப் பெருமை செய்த அறிஞர் பெருமக்கள் பலராவர். தமிழ்ப் பேரறிஞர்கள், சமயநெறி பரப்பும் சான்றோர்கள், கலைவாணர்கள், அரசியல் மேதைகள் எனப் பல்துறைப் பெருமக்கள் இச்சபையின் விழாக்களுக்கு வருகை தந்துள்ளார்கள்.

பேராசிரியர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், பேராசிரியர் திரு. அ. சீனிவாசராகவன், சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன்: தமிழ் வேள் திரு. பி. டி. இராஜன் தத்துவப் பேராசிரியர் டாக்டர். ஏ எஸ். நாராயணபிள்ளை, பேராசிரியர் டாக்டர். வ அய். சுப்பிரமணியம். பேராசிரியர் திரு, ஆர். வீரபத்திரன், முதுபெரும்புலவர் திரு. செ. சதாசிவம், புலவர். திரு, கீரன், திருக்குறள் திரு. வி. முனிசாமி திரு. அவ்வை. தி. க. சண்முகம் ஆகிய அறிஞர் பெருமக்களும். திரு. என். இ. எஸ். இராகவாச்சாரி. திரு. டி. வி. சுவாமிநாதன். திரு. எம். தண்டபாணி, திரு. உமாசங்கர், திரு. உப்பிலியப்பன், திரு. எஸ். கோபாலன், திரு. கே. சீனிவாசன், திருமதி பத்மா இரரமச்சந்திரன், திருமதி. சரளா கோபாலன். திரு. வி. கிருஷ்ணமூர்த்தி ஆகிய அரசு அதிகாரிகளும், இவ்விழாக்களில் பங்கு பெற்றுச் சிறப்பு நல்கியுள்ளார்கள்.

இசையரசு திரு. எம். எம். தண்டபாணிதேசிகர், சீர்காழி எஸ். கோவிந்தராஜன், மதுரை திரு. எஸ். சோமசுந்தரம். திரு. பித்துக்குளி முருகதாஸ், கொத்தமங்கலம் திரு. சுப்பு திரு. K. வீரமணி, திருமதி ராதா-ஜெயலட்சுமி மற்றும் பெருமை மிகு கலைஞர்கள் பலர் இவ்விழா நாட்களில் இன்னிசை விருந்தளித்துச் சிறப்பித்துள்ளார்கள். முருகன்கோவில் கொண்டருளிய புண்ணியத் திருப்பதிகள் நீங்கலாக சபைகளில்-பிற இடங்களில் நடைபெறும் கந்தசஷ்டி விழாக்களில் திருவனந்தபுரம் சைவப்பிரகாச சபையில் நடைபெறும் சஷ்டிவிழாவே முதன்மையும், பெருமையும் உடையது என்னும் வரலாறு படைத்தது இவ்விழா என்றால் அதுமிகையன்று

இவை தவிர அருள்மாழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் பல்வேறு தலைப்புக்களிலான சமய இலக்கியத் தொடர் சொற்பொழிவுகள் பன்முறை இச்சபையில் நிகழ்ந்துள்ளமை சுட்டுதற்குரிய ஒன்றாகும்.

1960-ஆம் ஆண்டு சபையின் எழுபத்தைந்தாவது ஆண்டு விழா நிகழ்ந்தகாலை, சபை மண்டபத்தோடு இணைத்து திறந்தவெளியரங்கு ஒன்று அமைக்கப்பட்டு பொருளாதாரப் பேரறிஞர் டாக்டர். ப. நடராஜன் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. சபையிலிருந்து ''குகாவதார ரகஸ்யம்,'' பக்தர் பாடிய பாமாலை'' என்னும் பெயரிய நூற்கள் இலவச வெளியீடுகளாக வெளியிடப் பெற்றன. 1961-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் சபையின் துணைத்தலைவராக இருந்த அரசியல் அறிஞர் திரு. பி. எஸ். நடராஜபிள்ளையின திருவுருவப்படம் சபை மண்டபததில் திறந்துவைக்கப்பட்டது.

1961-ம் ஆண்டு பேராசிரியர் திரு. என். சுந்தரம் செயலாளராகவும். திரு. ஏ. சண்முக சுந்தரம் பிள்ளை இணைச்செயலாளராகவும் தேர்தெடுக்கப் பெற்றனர். 1963-ம் ஆண்டு திரு. எம். ஆர். கிருஷ்ணன் செயலாளர் பொறுப்பை ஏற்றார். அவ்வாண்டில் நடைபெற்ற கந்த கஷ்டிவிழாவின்போது தமிழ்ப்பெரியார்களும் சபை வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவர்களுமான வலிய மேலெழுத்து திரு. திரவியம் பிள்ளை, இசைச் செல்வர் திரு. தி, இலக்குமணப்பிள்ளை, திரு. எஸ். பிறவிப் பெருமாள் பிள்ளை. திரு. டி, எஸ். பத்மனாபபிள்ளை ஆகியோரின் திருவுருவப் படங்கள் சபை மண்டபத்தில் திறந்துவைக்கப்பெற்றன. சபையின் பொருளாளராய் நீண்டகாலம் நற்பணியாற்றிய திரு. பி. முத்துகிருஷ்ணபிள்ளையின் திருவுருவப் படமும் சபை மண்டபத்தில் திறந்துவைக்கப்பட்டது.

1962-ம் ஆண்டுமுதல் சபை மண்டபத்தில் வார வழிபாட்டுக் கூட்டங்கள் நடைபெற்று வந்தன. இக்கூட்டங்களில், ஒவ்வோர் ஆண்டும் முறையே பன்மொழிப் புலவர் திரு. ப. ஜனார்த்தனம்பிள்ளை சிவபுராணத்திற்கும். பேராசிரியர் திரு மா. இளையபெருமாள் திருமுருகாற்றுப்படைக்கும். திரு. இ. குற்றாலம் திருவாசகத்திற்கும், டாக்டர். ச. வே. சுப்பிரமணியன்

தேவாரத்திற்கும், டாக்டர். தா. வே. வீராசாமி பெரியபுராணத்திற்கும், வித்துவான் திரு. ச. மீனுட்சிநாதன் திருவிளையாடல் புராணத்திற்கும் விளக்கவுரை அளித்தனர். இவ்வார வழிபாட்டை முன்னிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல் தொகுப்புக்களாக சிவபுராணம், திருமுருகாற்றுப் படை, திருவாசகம், தேவாரம் ஆகியவை அச்சிடப்பட்டு இலவசமாக சபையிலிருந்து வழங்கப்பட்டன.

1166-ம் ஆண்டு சபையின் துணைத்தலைவராக திரு. எம். வைத்தியலிங்கம்பிள்ளை, பொருளாளராகத் திரு. பி. இரத்தினசுவாமி ஆகியோர்தேர்ந்தெடுக்கப்பெற்றனர். அவ்வாண்டு நடைபெற்ற சபையின் பொதுக்குழுவில், பழுதடைந்திருக்கும் சபை மண்டபத்தை அகற்றிவிட்டு, திறந்த வெளியரங்கையும் இணைத்துப் புதிய கட்டிடம் ஒன்று கட்டவேண்டும் என்னும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அதன்படி 'யூனியன்' வங்கியின் கடனுதவியுடன் கட்டிடப்பணிக்கான ஆயத்தவேலைகள் நடைபெற்றன. 1970-ம் ஆண்டு ஜனவரி 19-ம் நாள் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் சபைத்தலைவர் திரு. ஆர்.வைத்தியலிங்கம்பிள்ளை சபையின் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டினர். புதிய கட்டிடப்பணிகளை முறைப்படி நிறைவேற்றுதற்காக பொறியியல் நிபுணர் திரு. எஸ். இராமனுதபிள்ளை, சபையின் பொருளாளரும், என்ஜினியரிங் காண்டிராக்டருமான திரு. எஸ். இரத்தினசுவாமி, சபைச் செயலாளர் திரு. எம். ஆர். கிருஷ்ணன் ஆகியோரைக் கொண்ட மூவர்குழு அமைக்கப்பெற்றது. விரைவிலேயே கட்டிடப்பணிகள் நடைபெற்றன.

திருவருள் துணையுடன், இன்று எழிலுடன் காட்சி தரும் மூன்று நிலைக் கட்டிடம் 1971-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19-ம் நாள் கேரள மாநில ஆளுநர் திரு. வி. விஸ்வநாதம் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. மூன்ருவது நிலையில் சபையின் அலுவலகமும், நடராஜர் சந்நிதியும், கலையரங்கமும அமைந்துள்ளன.

1975-ம் ஆண்டு திரு. எம். வைத்தியலிங்கம் பிள்ளை சபைத்தலைவராகப் பொறுப்பேற்ருர். திரு. பி. குமரேசன் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ருர். ஈராண்டுகளுக்குப்பின் 1977-ல் திரு, க. தி. முத்தையாபிள்ளை சபைத் தலைவராகவும் திரு. பி. ஜனர்த்தனம் பிள்ளை துணைத்தலைவராகவும், திரு. எம். எஸ். பத்மனுபன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். 1978-ம் ஆண்டு, பேராசிரியர் டாக்டர் எம். இளையபெருமாள் சபைத்தலைவராகப் பொறுப்பேற்ருர். அவ்வாண்டு முதல் இலவசத் தமிழ்ப் பயிற்சி வகுப்பு சபையின் ஆதரவில் துவக்கப்பெற்றது. இவ்வகுப்பின் மூலம் மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர் பலர் தமிழ் கற்கும் வாய்ப்பினைப் பெற்றுபயனடைந்தனர்.

1981-ம் ஆண்டு சபையின் பொருளாளர் பொறுப்பினைத் திரு.என். வெங்கடேசன் ஏற்ருர். 1982-ல் சபையின் ஆதரவில் சபை மண்டபத்தில் கலை, இலக்கிய, சமய நிகழ்ச்சிகள் முறையே நடைபெறச் செய்ய, வித்துவான் திரு. எஸ். மீனுட்சிநாதனை அமைப்பாளராகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. கருத்தரங்குகளில் கேரளத்திலும், தமிழகத்திலும் வாழும் அறிஞர் பெருமக்கள் பலர் பங்குபெற்றனர். அவர் தம் கருத்துரைகளைத் திரட்டி கருத்தரங்குமலர் ஒன்று வெளியிடப்பட்டது. 1983-ம் ஆண்டு சபையின் பொருளாளராக திரு. பி. குமரேசன் பொறுப்பேற்ருர்.

சபையின் சார்பில் ஆண்டுதோறும் தொடக்கப்பள்ளி முதல் கல்லூரி ஈருகப் பயின்று வரும் மாணவ மாணவியர்க்கென முறையே பாராயணம், சொற்பொழிவு, இசை ஆகிய போட்டிகள் நடத்தப்பெற்று வெற்றிபெற்ருேருக்குத் தனித்தனியே பரிசுகளும், சிறப்புப் பரிசுகளாகக் கல்வி நிறுவனங்களுக்குச் சுழற் கோப்பைகள்-கேடயங்கள் வழங்கிவருவதுடன் 1983-ம் ஆண்டு முதல் மாநிலத்தில் நடைபெறும் உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வு, பல்கலைக்கழகம் புகுமுக வகுப்புத் தேர்வு, இளங்கலை முதுகலைப் பட்டப்படிப்புத் தேர்வுகள் ஆகியவற்றில் தமிழ்ப்பாடத்தில் முதல் மதிப்பெண் பெறுபவர்க்குப் பரிசு நிதி வழங்கப் பெற்றுவருகிறது.

1985-ம் ஆண்டு, சபையின் தலைவராக திரு எஸ். இராமனுதபிள்ளை தேர்ந்தெடுக்கப்பெற்ருர். திரு. எஸ். சங்கரன் இணைச் செயலாளராகப் பொறுப்பேற்ருர். சபையின் நூற்ருண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடவேண்டுமென்று பொதுக்குழு தீர்மானித்தது. அதன்படி 1985 செப்டம்பர் 20 முதல் 24 வரை ஐந்து நாட்களாக நூற்ருண்டுவிழா புகழோடும் பொலிவோடும் நிகழ்ந்தது.

நூற்ருண்டு விழா நிகழ்ச்சிகளில் கேரள மாநில ஆளுநர்: மேதகு பா, இராமச்சந்திரன், தமிழக அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் கேரள மாநில அமைச்சர் மாண்புமிகு என். சுந்தரன் நாடார். ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். விழாவில். சபையின் சார்பில் கேரளப் பல்கலைக் கழகத்தில் **'பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அறக்கட்டளை'** நிறுவுதற்பொருட்டு

ரூபாய் பதினைந்தாயிரம் வழங்கப்பெற்றது. அத்துடன் சபை நிறுவனர்களான 'வலிய மேலெழுத்து' திரு. மு. திரவியம்பிள்ளை, பேராசிரியர் 'மனோன்மணீயம்' திரு. பி. சுந்தரம்பிள்ளை ஆகியோரின் திருவுருவப்படங்களும், சபையின் வளர்ச்சியில் ஈடுபாடுகொண்டவர்களும் தமிழ்ப் பேரறிஞர்களுமான இசைச் செல்வர், திரு. தி. இலக்குமணப்பிள்ளை, கவிமணி திரு. தேசிக விநாயகம்பிள்ளை, ஆராய்ச்சிப் பேரறிஞர் திரு. கே. என். சிவராஜபிள்ளை, பேராசிரியர் திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை ஆகியோரின் திருவுருவப் படங்களும் திறந்துவைக்கப்பெற்றன. சபையுடன் தொடர்புடைய அறிஞர் பெருமக்களாகிய தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர். டாக்டர். வ. அய். சுப்பிரமணியம், தத்துவப் பேராசிரியர் டாக்டர். எ. எஸ். நாராயண பிள்ளை, பேராசிரியர் திரு. ஆர். வீரபத்திரன், முதுபெரும் புலவர் திரு. செ. சதாசிவம் ஆகியோர் பொன்னாடை போர்த்திப் பாராட்டப் பெற்றனர். ஐந்துநாள் நிகழ்ச்சிகளிலும் தமிழக-கேரள அறிஞர் பெருமக்கள் பலர் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினர்.

நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற பல்வேறு இயல் இசைப் போட்டிகளில் பங்குபெற்று வெற்றிபெற்ற பள்ளி-கல்லூரி மாணவ மாணவியர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன. இசைத்துறையில் முன்னணியில் நிற்கும் இசைவாணர் தம் இசை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெற்றன.

இவ்வாறு புகழார்ந்த நூற்றாண்டு விழாக் கண்டு, தமிழும் சைவமும் வளர்ந்தோங்கப் புது மெருகுடன் தொண்டாற்றிவரும் சைவப்பிரகாச சபையின் அறப்பணிகளும் அருட்பணிகளும் நாளும் சிறந்தோங்க எல்லாம் வல்ல இறையருளைத் துதிக்கின்றோம்.

வாழ்க தமிழ் மொழி.

வளர்க சைவநெறி.

வணக்கமுடன்,

எம். ஆர். கிருஷ்ணன்

(செயலாளர்)

BRIGHT FURNITURE MART

CHALAI, TRIVANDRUM

Buy on Instalment Basis:

MERRITT Sewing Machines,

Steel Furniture - Wooden Furniture

Pressure Cookers, Mattresses

5519
4519

With best compliments from:

Phone: 5409

T. V. R. FUND

(Regd: No. 539)

Karamanai, Trivandrum-2.

PAWN BROKERS

WE ACCEPT CASH DEPOSITS ON ATTRACTIVE INTEREST

Time 10 A. M. to 1 P. M. & 2 P. M. to 6 P. M. (Sunday Holiday)

Partners:

T. VELAYUDHAN, **T. RAJAGOPAL.**

OUR SISTER CONCERNS:

- **T. V. R. Agencies** Phone: 62747
  Bharat Petroleum Corporation Ltd.
  Tanker-Lorry Transporting Service
  (Near) Killippalam, Trivandrum-2

- **T. V. R. Agencies (Food)**
  (R. Stockist Lipton India Ltd.)
  Nutrine Confectionery Company (P) Ltd.
  Jagatjit Industries, Ltd.
  Karamanai, Trivandrum-2

- **T. V. R. Printers** Phone: 62176 (PP)
  (Offset Wing)
  Jagathy, Trivandrum-14

- **Venad Literary & Commercial Enterprises (P) Ltd.**
  Jagathy, Trivandrum-695 014. Phone: 62176

‘குனித்த புருவமும், கொவ்வைச்
செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும், பவளம்போல்
மேனியிற்பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற்
பாதமும் காணப்பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே’

அப்பர்

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை

பேராசிரியர்: சுந்தரம்பிள்ளை

தமிழ் மொழிக்கு, முத்தமிழ் என்ற சிறப்புப் பெயர் விளங்க வந்தபோதிலும், இயல் இசை நாடகம் எனும் மூன்றனுள் நாடகம் வரலாற்றுக்கு முந்திய காலத்தில் வழங்கிவந்தது எனினும். கண்டுணர இயலவில்லையே என்னும் தமிழ் மக்களின் மனக்குறையை நீக்கிய பெருமகன்: மனோன்மணீயம் **சுந்தரம்பிள்ளை.** சைவப்பிரகாச சபையை முன்னின்று நிறுவியவர்.

மனோன்மணீயம் நாடகம், தமிழ்மொழிக்குக் கிடைத்த விலைமதிப்பற்ற இலக்கியம்—குறை தீர்த்த பொற்குவை — ஆங்கிலக் கல்வியின் அளப்பரு பயிற்சியின் பிரதிபலிப்பும் தமிழில் ஆழமான புலமையும், கவித்துவமேன்மையும் ஒருங்கிணைந்த படைப்பு—அரிய கொள்கையாம் அழகிய மணிகளை நிரப்பி வைக்கும் அருங்கலச்செப்பு. இந்நாடகநூல் மட்டுமின்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவும் எழுதிப்புகழ் பெற்ற சுந்தரனாரைப் பெற்றெடுத்த பெருமை அன்றைய திருவிதாங்கூரின் துறைமுகப் பட்டினமாகிய ஆலப்புழையைச் சாரும். கொடுமலையாளக் குடியிருப்பில் கொல்லமாண்டு 1030 பங்குனி மாதம் 28-ஆம் நாள் (5-4-1855) பெருமாள் பிள்ளை என்பார்க்கு மாடத்தியம்மை என்பாளின் மணிவயிற்றில் ஒரு மகனாகப் பிறந்த திருமகனே பேராசிரியர்: பிள்ளையவர்கள்.

ஆலப்புழையிலுள்ள தமிழ் ஆரம்பப் பள்ளியில் கல்வி பயின்று அங்கேயே ஆங்கிலக் கல்வியும் கற்கத் தொடங்கி பின்னர், திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் இளங்கலைப் பட்டத் தேர்வில் முதல்வராகத் தேறிய பிள்ளையவர்களின் திறமையைப் பாராட்டும் வகையில் அக்கல்லூரியிலேயே வரலாறு, தத்துவம் பயிற்றுவிக்கும் விரிவுரையாளராக நியமிக்கப் பெற்றார். பின், திருநெல்வேலி ஆங்கிலத்தமிழ்க் கல்விச்சாலைத் தலைவராகப் பணிபுரிந்து முதுகலைப் பட்டப்படிப்பில் தேறி மீண்டும் திருவனந்தபுரம் அரசர் கல்லூரித் தத்துவப் பேராசிரியராக இறுதிக்காலம்வரை பணியாற்றினார். இதற்கிடையே மன்னர் விசாகந்திருநாள் அவர்களின் ஆணைக்கிணங்க 'பிறவகை சிரஸ்தார்' என்ற உயர் பதவியும் வகித்துவந்தார். பிள்ளையவர்களின் கல்வி நோக்கிற்கும்' கலை உணர்வுக்கும் மனநிலைக்கும் அப்பணி பொருந்தியதாயில்லாததால் சிறிது காலத்திற்குள் கல்லூரிப்பணிக்கே திரும்பச் சென்றார்.

தமிழிலக்கிய வரலாற்றுராய்ச்சியிலும், சமய நூலாராய்ச்சியிலும், திருவிதாங்கூர் பண்டை அரசர் காலஆராய்ச்சியிலும் பெரிதும் உழைத்து அப்பொருள்கள் பற்றிப் பிள்ளையவர்கள் பல ஆங்கில ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிட்டிருக்கிறார்.

நூற்றொகை விளக்கம், மனோன்மணீயம், திருவிதாங்கூர் பண்டைமன்னர்காலவாராய்ச்சி, திருஞானசம்பந்தர்காலவாராய்ச்சி முதலியன பிள்ளையவர்களின் கல்விப்பெருமைக்கும், அறிவாற்றலுக்கும், புலமைச்சிறப்புக்கும், ஆராய்ச்சித்திறனுக்கும் எடுத்துக் காட்டான எழுத்தோவியங்களாம். பழைய திருக்கோயில்களில் பாழடைந்து பாதுகாப்பற்றுக்கிடந்த கல்வெட்டுக்களைப் பிள்ளையவர்கள் ஆராய்ந்தறிந்து பல உண்மைகளை வெளிக்கொணர்ந்தார்.

பிள்ளையவர்களின் ஆராய்ச்சித்திறனைப் போற்றி இலண்டன்வரலாற்றுராய்ச்சிக்கழகத்தார் F. R. H. S. என்னும் பட்டத்தையும், ஆசியத் தொடர்பான ஆராய்ச்சிக்கழகத்தார் M. R. A. S. என்னும் பட்டத்தையும், சென்னை அரசியலார் 'ராய்பகதூர்' என்னும் பட்டத்தையும் சூட்டிபெருமைப்படுத்தினர். திருவிதாங்கூர் பண்டையரசர் காலவாராய்ச்சி எழுதும்பொருட்டு பிள்ளையவர்கள் மேற்கொண்ட பெரும் முயற்சியையுணர்ந்த திருவிதாங்கூர் மன்னர் பரம்பரையினர் பிள்ளையவர்களின் ஒரே புதல்வரான நினைவில் நிற்கும் நடராஜபிள்ளையவர்களுக்கு மாதந்தோறும் இருபது ரூபாய் நன்கொடையாக அளித்து வந்தனர்.

தமிழையே தெய்வமாக வாழ்த்துகின்ற பேராசிரியர் உள்ளத்தின் தமிழன்பே தமிழர் மனத்தில் தமிழ்விளக்கை ஏற்றிவைத்தது எனலாம். மனோன்மணீயம் நாடகநூலில் அமைந்த தமிழ்த் தெய்வ வணக்கப்பாடலைத்தான் தமிழக அரசினர் நாட்டுப்பாடலாக அங்கீகரித்து அரும் பெரும் மரியாதை செலுத்தி வருகின்றனர்.

பெருவாழ்வு பெறப்பிறந்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் 1897-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 26-ஆம் நாள் தமது நாற்பத்து இரண்டாம் வயதில் உலகவாழ்வை விட்டார் என்றாலும் குறைந்த காலத்தில் நிறைந்த சேவை செய்த பெருமகன் ஆவர். இலக்கிய உலகில் பெயரை நிறுவிய பிள்ளையவர்கள் பொதுநலப்பணியிலும் சமயவளர்ச்சியிலும் ஆர்வம் மிக்கார் என்பதற்கு அவரால் உருவாக்கப் பெற்ற திருவனந்தபுரம் **சைவப்பிரகாச சபை** என்றென்றும் சான்றாகத் திகழும்.



திரவியம்பிள்ளை

வலிய மேலெழுத்து திரவியம்பிள்ளை

திருவிதாங்கூர் மன்னர் பரம்பரையினர் தமிழ்ப் பெருங்குடி மக்களிடம் மிகுந்த நம்பிக்கையும், அன்பும் கொண்டிருந்தனர். அதன் எடுத்துக்காட்டு என்றமட்டில் அன்றைய அரசின் மிக உயர்ந்த அதிகாரபீடங்களிலெல்லாம் தமிழ்மக்கள் தங்கள் திறமைகளைச் செயலாற்றல் வழி எவரும் போற்றும் வண்ணம் வெளிக்காட்டி வந்தனர். மாண்புறத்திகழ்ந்த திருவிதாங்கூர் அரசின் அமைச்சர் பதவிக்கு ஒப்பாக மதிக்கத் தக்க உயர்பதவியாகும் வலியமேலெழுத்து எனும் பெரும்பதவி. அப்பதவியை அலங்கரித்து நிர்வகித்தபெருமையும் தமிழர்களையே சாரும். அத்தகைய சிறந்தபதவியில் பரம்பரையாக வீற்றிருந்து புகழேணியில் நின்ற நற்குடியின் தோன்றலே நாம் போற்றும் வலியமேலெழுத்து திரவியம் பிள்ளையவர்கள்.

ஆலப்புழையில் அரசினர் வர்த்தகத்துறை தலைமை அலுவலகத்தில் பணியாற்றி வந்தபண்பு மிக்க முத்துக்குமாரசுவாமி பிள்ளையின் புதல்வராய் 1827-ஆம் ஆண்டு பிறந்தவர் திரவியம் பிள்ளையவர்கள். முதாதையரின் முழுத்திறனையும் விழிப்புணர்ச்சியோடு மன்னர் பரம்பரையினரே வியக்கும் வண்ணம் செயலாற்றிக்காட்டியவர் பிள்ளையவர்கள். சைவப்பிரகாசசபையைத் தோற்றுவித்த சான்றோருள் தலைவராய்த் திகழ்ந்தவர்.

திறம்படகல்விகற்று தேர்வுகளிலெல்லாம் மற்றோர் திகைக்கும்படி வெற்றிபெற்று தந்தையார் பணியாற்றிய அலுவலகத்திலேயேபணியாற்றும் பேறுபெற்றார். உழைப்பாலும், ஊக்கமிகையாலும், ஒப்பற்ற ஒழுக்கத்தாலும், படிப்படியாக உயர்பதவிகள் பலவற்றிலும் பணிபுரிந்து இறுதியில் வலியமேலெழுத்து எனும் மாண்புமிகு பதவியையும்பெற்றவர் திரவியம் பிள்ளையவர்கள். பிள்ளையவர்களின் திறமையைப்போற்றிப் புகழ்ந்தவர்களுள் விசாகந்திருநாள் மன்னர் பிரான் குறிப்பிடத்தக்கவர். சீர் கேடின் சிகரமாகச் செயலாற்றி வந்த நிலவருமானத்துறையைச் சீர்பெடுத்தி,செம்மையாக்கிய செயல்திறன் ஒன்றே போதும் பிள்ளையவர்களின் புகழ் என்றென்றும் நிலைத்திருக்க. நாட்டின் நலன்கருதி பிள்ளையவர்கள் ஆற்றிய நற்பணிகள் பலப்பல.

தேவாரப்பாசுரங்கள் தினந்தோறும் பாடி இறைவனைவழிபடும் இயல்புபெற்று வாழ்ந்துவந்தவர், செந்தூர்முருகனிடம் அளவற்றபக்தி கொண்டவர். மன்னரும் மக்களும் போற்றும் வகையில் நாட்டுத் தொண்டு புரிந்துவந்த பிள்ளையவர்கள் சமயத்தொண்டும் ஒரு சேர ஆற்றிவந்த வழிமுறை எல்லோர் உள்ளத்தையும் ஈர்த்தது எனக்கூறின் மிகையாகாது.

பேராற்றல் கொண்டு பெரும்பணிபுரிந்துவந்த பிள்ளையவர்கள் 1890-ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வினின்றும் மறைந்தாரெனினும் எல்லா நல்ல உள்ளங்களிலும் என்றென்றும் நின்று நிலவுவார்.



பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை

தமிழிலக்கிய வரலாற்று ஆராய்ச்சியில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை தொடங்கிய பணியை வளர்த்துத் தமிழ் நூல்களின் காலங்களை வரையறுத்தற்கு முயன்று வெற்றி கண்டவர் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை. இலக்கிய வரலாறு பற்றித் தெளிவான சான்றுகளுடன் தக்க ஏதுக்களை எடுத்துக் காட்டித் தமிழிலும் ஆங்கிலத்திலும் பிள்ளையவர்கள் எழுதிய வரலாற்றுரைகள் தமிழிலக்கியங்களின் மதிப்பினை உலகிற்கு உள்ளவாறு உணர்த்த வல்லனவாம். தமிழ் ஓலைச் சுவடிகள் பலவற்றைத் தேடித் தொகுத்துத்தம் ஆய்வுக்கும் பயன்படுத்தியவர் பேராசிரியர். திருவனந்தபுரம் சைவப் பிரகாச சபை அப்பெருமகனாரின் ஆய்வுக் கூடமாகவும் அமைந்தது.

பேராசிரியர் பிள்ளையவர்கள் திருநெல்வேலியை அடுத்த சிக்கல் நரசய்யன் கிராமத்தில் சரவணப் பெருமாள் பிள்ளைக்கும் பாப்பம்மாள் என்று பெயர் வழங்கிய பிரம்மநாயகி அம்மையாருக்கும் கொல்லமாண்டு 1064 புரட்டாசி மாதம் 29-ஆம் நாள் (13-10-1888) முதல் மகனாய்ப்பிறந்தார்.

தொடக்கக் கல்வியைக் கணபதிப் பிள்ளை என்பாரிடம் பெற்றார். சுவாமிநாத பண்டிதரிடம் சிலகாலம் தமிழ்ப் பாடம் கேட்கும் பேறும் பிள்ளையவர்களுக்கு வாய்த்தது. திருநெல்வேலி இந்து கலாசாலையிலும் செயின்ட்சேவியர் பள்ளியிலும் ஆங்கிலம் கற்றார். சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் இளங்கலைப் பட்டத்தேர்வில் தமிழில் மாநில முதன்மை பெற்றுச் சேதுபதி தங்கப் பதக்கம் பரிசுபெற்றார். கிறித்துவ கல்லூரியில் இவருக்குத் தமிழாசிரியராய் விளங்கியவர் மறைமலையடிகள். திருவனந்தபுரத்தில் சட்டப் பயிற்சி பெற்று அங்கேயே உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞர் தொழில் புரிந்தார். அப்பொழுது மலையாளம் கற்றதோடு இளமையில் பயின்றிருந்த வடமொழி அறிவையும் பெருக்கிக் கொண்டார்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதிப் பதிப்பாசிரியராகவும், தமிழ்த்துறைத் தலைவராகவும் திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகப் பேராசிரியராகவும் பணியாற்றியவர் பிள்ளையவர்கள். பேராசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் தமிழ்ப்பணிகள் தொடர்ந்தன. முன்பு பல காலங்களில் எழுதிய கட்டுரைகள் எல்லாம் நூலுருப்பெற்று வெளிவந்தது இந்தக் காலத்தில் தான்.

இலக்கியச் சிந்தனைகள், தமிழின் மறுமலர்ச்சி, தமிழ்ச் சுடர்மணிகள், தமிழர் பண்பாடு, இலக்கிய தீபம், இலக்கிய மணிமாலை, இலக்கய உதயம், கம்பன் காவியம், காவிய காலம், சொற்கலைவிருந்து, சொற்களின் சரிதம், இலக்கணச் சிந்தனைகள், திராவிட மொழிகளில் ஆராய்ச்சி என்பன பிள்ளையவர்கள் தமிழகத்திற்குத் தந்த வாடாமலர்கள். பழமையில் பற்றுள்ளவர்போலத் தோன்றும் பேராசிரியர் புதுமைகளையும் வரவேற்கும் பெற்றியவர். புத்திலக்கியப் படைப்பான சிறுகதையில் ஈடுபட்டுப் பிள்ளையவர்கள் எழுதிய சிறுகதைகள் 'சிறுகதை மஞ்சரி' என்னும் பெயரில் வெளிவந்துள்ளன. 'ராஜி' என்ற நாவலும் ஆக்கியுள்ளார். ஏட்டிலிருந்து பதிப்பித்த 'புறத்திரட்டு' இவருடைய புதிப்புத் திறனுக்கு எடுத்துக்காட்டாய் இலங்குகிறது.

தெளிவான இனிய உரைநடை நூல்கள் பல படைத்த பேராசிரியர் கவிபாடவும் வல்லவர். மரபுவழிப் பாடல்கள் பல இயற்றியுள்ளார். 'இலக்கிய உதயம்' நூலில் சேர்த்துள்ள எடுத்துக்காட்டுக் கவிதைகள், இவர்தம் கவிதையாற்றலை நன்கு புலப்படுத்தும். தனித்தனிப் பொருளில் பாடிய வேறு சில கவிதைகளும் உள.

தமிழ் இலக்கியப் பரப்பில் பல்வேறு பணிகளை இடைவிடாது செய்துவந்த பிள்ளையவர்கள் 1956-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17-ஆம் நாள் இவ்வுலகவாழ்விலிருந்து மறைந்தாரெனினும் அன்னாரின் உன்னதமான இலக்கியப் படைப்புகள் வழி தமிழ்மக்கள் நெஞ்சில் நீங்காத இடம்பெற்றவராவார்.



சிவராஜபிள்ளை

பேராசிரியர் சிவராஜபிள்ளை

இலக்கிய இலக்கண ஆராய்ச்சியாளராக வும் கவிஞராகவும் தத்துவ மேதையாகவும் விளங்கித்திகழ்ந்தவர் பேராசிரியர் சிவராஜ பிள்ளை. திருநெல்வேலிமாவட்டத்தில் கங்கை கொண்டான் என்னும் ஊரில் 1879-ஆம் ஆண்டு பிறந்தார். தந்தை நாராயணபிள்ளை. தாயார் முத்தம்மாள். திருவனந்தபுரம் சைவப்பிரகாச சபையோடு தொடர்பு கொண்டு தமிழாராய்ச் சியை நடத்திவந்த மேதை. பிள்ளையவர்களின் இளமைப்பருவம் நாஞ்சில் நாட்டைச் சார்ந்த பீமநகரி என்னும் ஊரில்கழிந்தது.

கோட்டாறு உயர்நிலைப்பள்ளியில் பள்ளிப் படிப்பினை முடித்து பின் சென்னை கிறுத்துவக் கல்லூரியில் பயின்று தத்துவவியலில் இளங்கலை பட்டம்பெற்றார்.

தமது பட்டப்படிப்பினை முடித்த உடனேயே திருவிதாங்கூர் அரசின் காவல்துறையில் ஆய்வா ளராகச் சுசீந்திரத்தில் பணியாற்றினார். மிகுந்த நேர்மையும் கடமையுணர்ச்சியும் கொண்ட பிள் ளையவர்களால் அக்காலத்திய சூழ்நிலையில் தமது பணிக்கடமைகளைச் செவ்வனே செய்ய இயலவில்லை. அச்சூழ் நிலையில் தாமாகவே பத வியிலிருந்து விலகிக் கொண்டார். அரசுப்பணி யிலிருந்து விலகியபிறகு பிள்ளையவர்கள் திருவ னந்தபுரத்தில் தலைமையலுவலகம் ஒன்றைநிறுவி 'நாஞ்சில்நேசன்' என்றவாரப்பத்திரிகையை ஆரம்பித்தார். தமிழாராய்ச்சியோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு திருவனந்த புரத்தில் கிடைத்தது. 'மலபார் குவார்டர்லி ரெவியு' என்ற ஆங்கிலத்திங்கள் இதழையும் நடத்தினார். தமது பத்திரிகையில் இலக்கிய இலக்கண ஆராய்ச்சிக்கட்டுரைகள்பலவற்றைத் தாமே எழுதி வெளியிட்டார்.

பேராசிரியர் திருவனந்தபுரத்தில் இருந்த பொழுது யாழ்ப்பாணத்தில் பொன்னம்பலம் இராமநாதன் தமிழ்ப்பணியாற்றுவதற்காக பிள் ளையவர்களை இலங்கைக்கு அழைத்துச் சென் றார். ஓராண்டு காலம் அங்கு தங்கித் தமது பணி யைச் செவ்வனே நிறைவேற்றித் தாயகம் திரும்பி னார். சென்னைப்பல்கலைக்கழகத் தமிழ்துறைத் தலைவராகப்பணியாற்றி ஒய்வுபெற்ற பிள்ளையவர் கள், திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையை உருவாக்க பெரும் முயற்சி மேற் கொண்டார். ஒய்வுபெற்றபின் நாகர்கோவிலி லேயே தங்கி 'ஜனமித்திரன்' என்ற ஒரு தமிழ்ப் பத்திரிகையை நடத்திவந்தார்

பிள்ளையவர்கள் தமிழிலும், ஆங்கிலத்தி லும் பல ஆய்வுரைகள் எழுதியுள்ளார். கவி பாடும் திறனும் இவருக்கு உண்டு. அருவியின் காதை. மேகமாலை. நாஞ்சில்வெண்பா, இயற் கைநலம் அல்லது அழகுமுப்பது, இயற்கைப் பாவினமும் சில்லறைப்பாக்களும், என்பன இவ ரது கவிதைமுத்துக்களில்சில. இவருடைய உந்து என்னும் சொல் ஆராய்ச்சி அல்லது புற நானூற்றின் பழமை' சில தமிழ்ச் சொல் ஆராய்ச்சி, தொல்காப்பிய உரைச்சொல் ஆராய்ச்சி என்றதமிழ்நூற்களும், 'தமிழ்நாட்டில் அகத்தியர், 'பழந்தமிழரின் காலவரிசை'என்ற ஆங்கிலநூற்களும் ஆராயும் திறனின் அற்புதங் களில் ஒருசிலவாகும். இன்னும் வெளிவராத எத்தனை எத்தனையோ புதையல்கள் உள்ளன.

'கெய்க்குவார்' பரோடாமன்னர் அறிவித்தி ருந்த கட்டுரைப் போட்டியில் உலக அறிஞர்க ளோடு கலந்து கொண்டு பிள்ளையவர்கள் முதற் பரிசையும் பெற்று உலக அறிஞர்களிடையே தமிழன்புகழையும் நிலை நிறுத்திய பெருமைக்கு ரியவரானார்.

தமிழ் இலக்கிய இலக்கண ஆராய்ச்சியில் மட்டுமின்றி கவிதைத்துறையிலும் தத்துவத்துறை யிலும் ஆழ்ந்தபுலமையை வெளிப்படுத்திய பெரு மகனார் சிவராஜபிள்ளை 1941-ஆம் ஆண்டு இவ்வுலகவாழ்வை நீத்தார். ஆராய்ச்சியை அறிவியல் நோக்குடன் வெளிக்கொணர்ந்த பேராசிரியர் சிவராஜபிள்ளை அழியாப் புகழ் பெற்ற ஆய்வு மேதை.



இசைச் செல்வர் இலக்குமணன்பிள்ளை

இசைச் செல்வர் இலக்குமணபிள்ளை

எல்லையில்லாத இன்பம் அளிக்க வல்ல இசைக்கு தமிழ் இசைவுடையதல்ல என்ற பொய்க் கருத்தைத் தகர்த்தெறிந்து உயிரோட்டமுள்ள இசைப்பாக்களைத் தமிழில் தந்து வெற்றிக் கொடி நாட்டிய இசைச் செல்வர் இலக்குமண பிள்ளையவர்கள் திருவனந்தபுரம் சைவப்பிரகாச சபையின் ஒளிக்கதிர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர்.

இசைப் புலவர்களால் போற்றப்பெறும் பேறு பெற்ற இலக்குமணபிள்ளையவர்கள் திருவனந்தபுரத்தில் கொல்லமாண்டு 1039 சித்திரை மாதம் 23-ஆம் நாள் வலியமேலெழுத்து திரவியம் பிள்ளையவர்களுக்கும் பாலராமவல்லி அம்மாளுக்கும் இரண்டாவது புதல்வராய்த் தோன்றினர். ஐந்தாம் ஆண்டில் பள்ளியில் சேர்க்கப்பட்ட பாலன் படிப்படியாக நல்முறையில் படித்துத் தேறி இறுதியில் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் கல்வி கற்று இளங்கலைப் பட்டமும் பெற்றுர். அக்காலையில் திருவிதாங்கூர் திவாணயிருந்த இராமய்யங்கார் அவர்கள் பிள்ளையவர்களின் திறனைக் கேள்வியுற்று மேனட்டுக் கணக்கு முறைகளைக் கற்றுவர அரசாங்கச் செலவில் சென்னைக்கு அனுப்பினர். பின்னர் அரசு அலுவலகத்தில் கணக்குப் பரிசோதகராக நியமிக்கப்பட்டுப் படிப்படியாக உத்தியோக உயர்வு பெற்று இறுதியில் நிதிச்சாலைத் தலைவர் பதவியிலிருந்து ஒப்புபெற்றுர்.

பிள்ளையவர்களின் வாலிபப் பருவம் முழுமையும், அலுவலகநேரம் போக மீதமுள்ள நேரமெல்லாம் தமிழ் வளர்ச்சிக்காகவும் இசை வளர்ச்சிக்காகவுமே செலவிடப்பட்டது. இசைப் பாக்கள் மட்டுமல்ல எண்ணற்ற இயற்றமிழ்ப் பாக்களும் பிள்ளையவர்களின் காணிக்கையாக நமக்குக் கிடைத்ததுண்டு ஞானந்தன் அடிமாலை. விண்ணப்பமாலை, நினைவாட்சி இவையெல்லாம் ஒரே தொகையாக்கப்பட்டு 'செய்யுட் கோவை' என்னும் பெயரால் திருவனந்தபும் சைவப்பிரகாச சபையில் அரங்கேற்றப்பட்டது.

'இரவிவர்மன்' எனும் பெயருடைய சரித்திரத் தொடர்புடைய நாடகம் பிள்ளையவர்களால் எழுதப் பெற்று மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேறியது. இந்நாடகம் மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இயற்கையமைப்பின் அரிய தத்துவங்களை எடுத்துவிளக்கக் கருதி இனிய வெண்பாயாப்பில் 'இயற்கைக் குறிப்பு' என்னும் நூலொன்றை இயற்றியுள்ளார். மேதைத்தன்மை மிகைப்படுந்தோறும் பல பட்டங்கள் பிள்ளையவர்களை நாடிவந்தன. திருநெல்வேலியில் கூடிய தமிழன்பர் மாநாட்டில் மறைமலையடிகளால் 'இசைச்செல்வர்' என்ற பட்டமும், திருவனந்தபுரம் அறிஞர்கூட்டத்தில் 'தமிழ்த்தியாகராஜர்' எனும் பட்டமும் பிள்ளையவர்களுக்குச் சூட்டப்பெற்றன.

பிள்ளையவர்களால் தொடங்கப்பட்ட ஜீவகாருண்ய சபை, கொல்லாமை, புலாலுண்ணாமை என்னும் கொள்கைகளை எங்கும் பரப்பின. பிள்ளையவர்களின் முயற்சியின் பயன்தான் நாடெங்கும் உயிர்ப்பலி ஒழிக்கப்பட்ட மாண்புமிக்க சேது இலட்சுமிபாய் மகாராணியாரின் திருவெழுத்து விளம்பரம் எனக் கூறின் மிகையாகாது.

தமிழில் கீர்த்தனைகள் செய்து அதனை வளர்த்து இசையரசாக விளங்கி, இனிய எளிய செந்தமிழ்ப்பாக்கள் இயற்றி அதனை வளப்படுத்தி, ஜீவகாருண்ய சபை நிறுவி உயிர்ப்பலி ஒழிக்கப் பணிபுரிந்து, வாழ்நாளை உயர்தனிச் செந்நெறியில் செலுத்தி வந்த இசைச் செல்வர் இலக்குமணபிள்ளையவர்கள் கொல்லமாண்டு 1125 ஆடி மாதம் 8-ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தாரெனினும் இசையுருவில் எல்லோர் உள்ளத்திலும்இடம்பெற்றுவிட்டமேதையாவார்.



கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை

கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை

தமிழிலக்கிய வரலாற்றில் இருபதாம் நூற்றுண்டு பெருமையுடன் பேசும் கவிவாணருள் சிறப்பிடம் பெற்றுத்திகழும் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் திருவனந்தபுரம் சைவப்பிரகாச சபையுடன் பல்லாண்டு தொடர்புடைய பெருமகனுர்.

அன்றைய திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் தென்னெல்லை நாஞ்சில் வளநாட்டில் தேரூர் என்னும் ஊரில் கொல்லமாண்டு 1050 ஆடி மாதம் 14-ம் நாள் (8-8-1875) சிவதாணு பிள்ளைக்கும் ஆதிலட்சுமியம்மாளுக்கும் திருமகனுய்த் தோன்றியவர். பள்ளியில் மலையாளமே பாடமொழியாகப்பயின்ருலும் தேரூரை அடுத்திருக்கும் வாணந்திட்டு திருவாவடுதுறை ஆதினமடத்துத் தம்பிரானிடம் தமிழ்கற்றுச் சிறப்புற்ருர்.

தொடக்கப்பள்ளி, உயர் நிலைப்பள்ளி ஆசிரியப் பயிற்சிப்பள்ளி எனப் பல்வேறு பள்ளிகளிலும் பல்லாண்டு பணியாற்றி, பின் திருவனந்தபுரம் அரசினர் மகளிர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராய்ப் பணிபுரிந்து ஒய்வு பெற்ருர். பண்டைய குருகுலப் பயிற்சிக்கும் இன்றைய கல்வி முறைக்கும் ஒப்பமான உயரிய ஆசிரிய மாணவ உறவிற்கு எடுத்துக் காட்டாய் விளங்கிய பெருமகன் பிள்ளையவர்கள் என அவர்பால் பயின்ருேரும் உடன்பணியாற்றிய பெருமக்களும் பெருமையுடன் புகல்வர்.

இளமையிலேயே கவியியற்றும் ஆற்றலைப் பெற்ற பிள்ளையவர்கள் கருவிலே திருவுடையார் என்று தம்பிரானவர்களால் போற்றப்பெற்றவர். வயது வளரவளர பிள்ளையவர்களின் கவித்துவமும் வளர்ந்து தமிழகம் போற்றும் கவிவாணராய்த் திகழ்ந்தகாலை 'கவிமணி' என்னும் பெருமை மிகுபட்டமும் சென்னைமாகாணத் தமிழ்ச் சங்கத்தாரால் சூட்டப்பெற்ருர்.

மலரும் மாலையும், ஆசிய ஜோதி, உமார் கய்யாம், நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம், தேவியின் கீர்த்தனைகள், கவிமணியின் உரைமணிகள் என்பன பிள்ளையவர்களின் எழுத்தோவியங்கள். கல்வெட்டுக்கள், ஒலைச்சுவடிகள். செப்பேடுகள் பலவற்றையும் ஆய்ந்து ஆங்கிலத்தில் பல்வேறு கட்டுரைகள் வெளியிட்டு ஆராய்ச்சி அறிஞராகவும் பிள்ளையவர்கள் விளங்கினர்.

தமிழகப் புலவர்கள், புரவலர்கள், ஆட்சியாளர்கள், ஆதீனகர்த்தாக்கள் எனப் பல்லோராலும் பாராட்டப் பெற்றவர் — பொன்னுடை போர்த்திச் சிறப்பிக்கப் பெற்றவர் பிள்ளையவர்கள்.

உலகில் எங்கணும் தமிழ்பயிலும் மாணவர்களில் கவிமணியின் பாமணிகளின் சுவையுணராதவர் இல்லை என்றே சொல்லலாம்.

பேராசிரியர் பணியினின்றும் ஒய்வுபெற்ற பிள்ளையவர்கள் புத்தேரி என்னும் சிற்றூரில் தம்மனையாள் உமையம்மையாருடன் தமது எழுபத்தொன்பதாம் வயது வரை வாழ்ந்து தமிழ் கூறும் நல்லுலகிற்கு ஒளியூட்டி வந்தார்கள்.

புவியணி கவிகள் பல தந்த கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையவர்கள் 1954-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26-ம் நாள் உலக வாழ்வை நீத்தார்கள் என்ருலும் தமிழ் நெஞ்சங்களில் என்றும் நிலைத்த இடத்தை உருவாக்கி உயர்ந்துள்ளார்கள்.

With best compliments from:

Messrs. P. RATNASWAMY

ENGINEERS & CONTRACTORS

"RAJCOT," THYCAUD,

TRIVANDRUM.

சைவப்பிரகாச சபை, திருவனந்தபுரம்

இயக்குநர் குழு

தலைவர்:

S. இராமநாதபிள்ளை

துணைத் தலைவர்:

P. ஜனார்த்தனம் பிள்ளை

செயலாளர்:

M. R. கிருஷ்ணன்

துணைச் செயலாளர்:

S. சங்கரன்

பொருளாளர்:

P. குமரேசன்

உறுப்பினர்கள்:

P. இரத்தினசுவாமி
M. வைத்தியலிங்கம் பிள்ளை
S, கோலப்ப பிள்ளை
P. மதுசூதனப்பெருமாள்
S. மீனாட்சிநாதன்
S. சந்திரன்
N. T. பிள்ளை
V. S. பெருமாள்
K. சுப்பிரமணியம்
K. குற்றாலம்

மலர்க்குழு

P. மதுசூதனப்பெருமாள் (அமைப்பாளர்)
S. இராமநாதபிள்ளை
M. R. கிருஷ்ணன்
P. குமரேசன்
S. மீனாட்சிநாதன்
T. அனந்தகிருஷ்ணன்
K. சுப்பிரமணியம்
V. வேலாயுதன்
K. குற்றாலம்
V. மந்திரம்

சபை இயக்குநர்குழு 1985

S. இராமநாதபிள்ளை
தலைவர்

M R. கிருஷ்ணன்
செயலாளர்



P. ஜனார்த்தனம்பிள்ளை
துணைத்தலைவர்

S. சங்கரன்
துணைச் செயலாளர்



P. குமரேசன்
பொருளாளர்



P. இரத்தினசுவாமி



M.வைத்தியலிங்கம் பிள்ளை



S. கோலப்பபிள்ளை



P.மதுசூதனப்பெருமாள்



ச. மீனாட்சிநாதன்



S. சந்திரன்

N. T. பிள்ளை



V. S. பெருமாள்



K சுப்பிரமணியம்



K. குற்றாலம்

சபை வளர்த்தோர்களில் சிலர்

N. சுந்தரம்பிள்ளை



A.சண்முகசுந்தரம்பிள்ளை



V. K. சுப்பிரமணியபிள்ளை

T. அனந்தகிருஷ்ணன்



J. குற்றாலம்

N. வெங்கடேசன்

M. S. பத்மநாபன்

சபை வளர்த்தோர்களில்

சிலர்

T. S. பத்மனாபபிள்ளை



S. பிறவிப்பெருமாள் பிள்ளை



A சுப்பிரமணியபிள்ளை

T. M. சிவசுப்பிரமணியபிள்ளை

M. S குமாரசுவாமிப்பிள்ளை



T. முத்தையாபிள்ளை

P. முத்துகிருஷ்ணபிள்ளை



மா. இளையபெருமாள்

திவான் பேஷ்கார்
ஆர். வைத்தியலிங்கம்பிள்ளை



பி. எஸ். நடராஜபிள்ளை
(முன்னாள் நிதியமைச்சர்)

சங்க இலக்கியத்தில் இறைமை

டாக்டர். கு. திருமேனி

சங்க இலக்கியங்கள் எல்லாவற்றுள்ளும் இறைமை காணப்படினும் இறைமை என்பது எது என்பதைக் காண்பதில்தான் அருமை அமைந்துள்ளது.

இறைமையை இறைவனின்றும் பிரிக்க முடியாமைக்குக் காரணம் இறைமை என்பது பண்பு. இறைவன் என்பது பண்பி. பண்பைப் பண்பியினின்றும் பிரிக்க முடியாது. ஆதலால் இறைவனைப் பற்றியே காண்போம்.

தமிழகத்தில் இறைமைப் பற்றிப் பேசப் புகுவதால் அப்பண்பு இரண்டு பண்பியாக சிவன், திருமால் என்ற இருவர் பால் விளங்கக் காணலாம். பிற்காலத்தில்தான் சைவம் வைணவம் என்ற வேறுபாடு வளர்ந்து சமயங்களாயின என்றுலும் இருவேறு கடவுளர்கள் தனித்தனியாகப் பெரியவர்களாய், மூத்தவர்களாய், முழு முதல்வர்களாய்ப் பேசப் பெற்றிருப்பதைக் காணலாம்.

புறநானூற்றில் சிவபிரானைப் பற்றியும், திருமாலைப்பற்றியும் பேசப் பெற்றுள்ளது. சிவன், திருமால் என்னும் போது சைவக் கடவுள், வைணவக் கடவுள் என்று கொள்ள வேண்டும். சைவக் கடவுள் என்னும்போது சிவன், முருகன் இந்திரன் போன்றவர்களைப் பற்றிய செய்தியாகும். வைணவக்கடவுள் என்னும் போது திருமால், கண்ணன், பலராமன் போன்றவர்களைப் பற்றிய செய்தியாகும். இவரன்றியும் அருந்ததி, இயக்கன், இராமன், உலகபாலர், காலன்‘ ஞாயிறு, திருமகள், பிதிரர், பரம தேவர், கூற்றுவன் முதலியோரும் பேசப் பெற்றுள்ளனர்.

சிவனைப் பற்றிப் புறநானூற்றில் 1, 6, 55, 91, 166, 198 என்ற ஆறு பாடல்களில் பேசப் பெற்றுள்ளது. முருகக் கடவுளைப் பற்றி 14, 16, 23 120, 125, 219, 55, 56 போன்றவையும், திருமாலைப் பற்றி 56, 174, 198 என்பவையும், பலராமனைப் பற்றி 56, 58 என்பவையும் பேசுகின்றன.

பல்யாக சாலை முதுகுடுமிப் பெரு வழுதியைக் காரிகிழார் என்ற புலவர் பாடும் போது.

''பணியியர் அத்தை நின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே''

என்ற ஒரு இறைப் பண்பு உணர்த்தப் பெற்றுள்ளது. இங்குமுக்கட் செல்வன் சிவன் என்றும் அவன் முனிவர்களால் வணங்கப்பெறும் தகுதியுடையன் என்றும் அன்னனை வணங்குதற்கு நின்குடை தாழ்வதாக என்று கூறுகருர் இங்குசிவபிரானின் முக்கண்ணுடைமை பற்றியும் அவன் முனிவர்கள் போன்றுரன்றி எளியரால் வணங்கற்குரியன் அல்லன் என்றும் இப்பாடல் சுட்டியிருத்தல் நோக்கத்தக்கது.

இச்சிவபிரானின் சினமும், சுடுதியுறும் இயல் இலக்கணங்களும் பாண்டியன் இலவந்திகைப்பள்ளி துஞ்சிய நன்மாறனை மதுரை மருதனிளநாகனுர் பாடிய பாடலில் விளக்கப் பெற்றுள்ளன.

அவுணர்கட்கும், தேவர்கட்கும், போர் நிகழ்ந்தபோது சிவபிரான் தேவர் பக்கம் இருந்து அவுணருடைய மூன்று மதிலுடைய நகரை அழித்த செய்தியைப் புறப்பாட்டு விளக்குகின்றது.

சிவபிரான் மாமேரு மலையை வில்லாகக் கொண்டு அதற்கு வாசுகி என்ற பாம்பை நாணுக்கி ஒரு கணையால் எய்து நெற்றிக் கண்ணையும் சினத்தால் திறந்து விழித்து அழித்த செய்தியை,

''ஓங்குமலைப் பெருவிழ் பாம்பு
நாண் கொளீஇ
ஒரு கணை கொண்டு மூவெயிலுடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றிதந்த''

என்று பேசப்பெற்றுள்ளது.

இங்கு குறித்த சிவபிரான் செய்த செயலால் விளங்கும் இறைமைக் குணம் ஒன்றுண்டு. அது இறைவன் உலகியலார் போல் இன்றி மலையை வில்லாக்கிப் பாம்பைக் கயிருக்கிச் சினத்தால் நெற்றிக் கண் திறந்து பகையழிப்பதாகும். கண் திறந்தால் சினம் சிறக்கும். அது மூவெயிலையும் அவுணர்களையும் சுட்டு நீருக்கும் என்றுல் அப்பண்பு மனித இயற்கை கடந்த கடவுட் பண்பாகும்.

அப்பாட்டில் இந்த இறைமை மட்டுமன்றி அருட்பண்பும் பேசப் பெற்றுள்ளது.

தேவர்களும் அசுரர்களும் ஒரு ஞான்று அமுதம் வேண்டிப் பாற்கடல் கடைய முற்பட்டனர். அதுபோதும் செல்வத்தாமுடையார் கடல் கடைவதற்கு ஏற்ப மேருமலையை மத்தாக்கி வாசுகியைக் கடை கயிருக்கி அசுரரும், தேவரும் இருதலையுள் நின்று வாங்கிக் கடைந்த காலை பாம்பு நெஞ்சுமிழ அக்கொடுமை கண்டோர் அனைவரும் தலை தடுமாறி ஓடிய காலை உலகழிக்கும் அவ்வருவிடத்தைச் சிவன் அங்கை ஏற்று உண்ண, உமைக்கண்டு அஞ்சிக் கண்டம் பற்ற அந்நஞ்சு மிடற்றிடை நிற்ப அது முதல் இவன் நீலகண்டனான். இந்த நஞ்சுண்டு கண்டம்கருத்த செய்தியை,

''கறை மிடற்று அண்ணல காமர் சென்னிப்

பிறை நுதல் விளங்கும் ஒரு கண் போல''

என்பது அவ்வடி. இங்குக் குறிக்கப் பெறும் இறைமை என்பது தேவர்களோ, அவுணர்களோ மக்களில் எத்துணை வரத்தாலும், ஆற்றலாலும் இறைமைக் குணத்தாலும் உயர்ந்தவர்கள். அத்தகைய பெரியோர்களும் அஞ்சும் அளவில் வெளிப்பட்ட நஞ்சினை எளிதாக உண்டு உயிரிருந்து அனைவர்க்கும் உய்தி அளித்தான் சிவன் என்ற அவனுடைய அருட் பண்பாய இறைமை புலப்படுவதைக் காணலாம்.

இப்பாட்டில் குறித்த மூவெயில் உடற்றியதும் நஞ்சுண்டதும் அரிய நிகழ்ச்சியும் ஆதலால் சிவனின் இறைமைப் பண்பிற்கு இவற்றையே பெரியோர்கள் பெரிதாகப் பேசுவதைக் காணலாம்.

கற்றறிந்தார் ஏத்தும் கலியுள் இறைவன் உலகைப் படைத்தற்குத் துணைக் காரணனாய் இறைவனால் படைக்கப் பெற்ற பிரமன் முதலியாரோடு கூடிய அவுணர் முதலிய பகைவர்தம் ஆற்றலை அமரர்தம் வேண்டுகோட்கிரங்கிப் பொருதற்கு ஒருப்பட்டு அன்னார் செய்யும் மாயம் அத்தனையும் கண்டு வெகுண்டு முகஞ்சிவந்து நெற்றிக் கண்ணைத் திறந்து எரித்தபோது அக்கன் போல் எரித்தது. அப்போது இறைவன் முகம் எவ்வாறு இருந்ததோ அவ்வாறு கதிரவன் காய்ந்து நிலங்களைப் பாலையாக்கினான் என்று கூறுகின்றது. அதனைத்

''தொடங்கற் கட் தோன்றிய முதியவன் முதலா
அடங்கா தார்மிடல்சாய அமரர் வந்து இரத்தலின்
மடங்கல் போல் சினைஇ மாயஞ்செய் அவுணரைக்
கடந்தடு முன்பொடு இக்கணான் மூவெயிலும்
உடன்புக்கால் முகம்போல ஒண்கதிர் தெறுதலின்''

என்று பேசப்பெற்றுள்ளது.

இவ்வடிகளில் இறைவன் அவுணர்களோடு போர் செய்ய முற்பட்டது அறனழி செயல் செய்த அவர்களை ஒறுத்து நன்னெறி நிறுத்தற் பொருட்டே அன்னார் அஞ்சித் திருந்த முற்படாது அகந்தையால் மாயம் செய்து தப்ப முற்பட்டபோது சினஞ் சிறந்து அழித்தான் என்று இறைவனின் இறைமைக்குணம் பேசப் பெறுவதைக் காணலாம்.

பரிபாடலில் சிவபிரான் திரிபுரம் எரித்ததை பற்றி இங்கும் சற்று விளக்கமாகக் கூறப் பெற்றுள்ளது. நான்முகனாகிய பாகன் செலுத்த வேதக் குதிரைகளைப் பூட்டிய பூமியாகிய தேரை ஊர்ந்து நாகம் நாணாகவும், மலை வில்லாகவும் கொண்டு திரிபுரங்களை ஓர் அழலம்பினால் எய்தவன் என்றும், அமரர்களுடைய வேள்விப்பாகம் உண்டவன் என்றும் பேசப் பெற்றுள்ளது. இதுகாறும் சிவன் புரிந்த நெறுதலையும், அருளுதலையும் கண்டோம்.

இனி முருகனைப் பற்றிய இறையைமைக் காண்போம். முருகனும் சிவனைப்போல அவுணர்களிடம் பொருது வென்றகண்ட கடவுளே. சூரபதுமன் வரத்தால் பேராற்றல் பெற்றுக் கடவுளர்களை மதியாது கடமையாற்ற விடாது அடாத செயல் புரிந்தபோது முருகன் உலகு ஏமவைகல் எய்த வேண்டி அவனோடு போர் செய்கிறான், அவன் பல திறப்பட்ட மாயம் செய்கிறான். குன்றாகி நின்றது, மாவாகி நின்றது கடலுள் ஒளிந்தது போன்ற செயல்களைச் செய்கின்றான். முருகன் அம்மாயனை அனைத்தையும் கடந்து அவனை கடல் புகுந்து கொன்று வெற்றியோடுமீண்டுவந்து தங்கிய இடம் இன்று திருச்செந்தூர் என்றழைக்கப் பெறும் திருச்சீரலைவாய் ஆகும். அந்த செய்தியைப் புறநானூற்றில் பாண்டியன் இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறனை மதுரை மருதனிள நாகனார் பாடிய பாட்டில்

''......................................தாழ்நீர்
வெண்டலைப்புணரி அலைக்கும் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறைக்
கடுவளி தொகுப்ப ஈண்டிய
வடு வாழ் எக்கர் மணலினும் பலவே''

என்று பேசப் பெற்றுள்ளது. இந்த நிகழ்ச்சி அகத்துள்ளும்

,திருமணி விளக்கின் அலைவாய்ச்
செருமிகு சேஎய்'' என்று பேசுவதைக்
காணலாம்.

நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் ''அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே'' என்கின்ருர்.

இவற்றைக் கொண்டு பார்த்தால் முருகன் கடவுளாய் இருந்து கடவுட் பண்புடையோர்க்கே காணும் தன்மையனுய் இல்லாமல் தன் தெய்வ இளநலத்தைப் பெரியோரும் காணும் வண்ணம் மாதவம் செய்த தென்திசைக் கண் கோயில் கொண்ட அருளாகிய இறைமைப் பண்பை இங்குக் காணலாம். இந்த நுட்பத்தினைப் பரி பாடலில் நப்பண்ணனுர் என்ற புலவர்.

''நிலவரை அருவத்தான் வானுறை புகல்-
தந்து
புலவரை அறியாத புகழ்பூத்த கடம்பமர்ந்து
அருமுனி மரபின் ஆன்றவர் நுகர்ச்சிமன்,
இருநிலத்தோரும் இயைக என ஈத்த நின்
தண்பரங் குன்றத்து இயலணி என்பதால்
அறியலாம்.

முருகன் கொன்ற சூரபதுமனைப் பற்றிய வருணனை கூட புறத்துள் பேசப் பெற்றிருக்கிறது. அவன் கார் காலத்துக் கடப்ப மரத்துப் பச்சிலையோடு விரவித் தொகுத்த மாலையை அணிந்தவனும்

''கார் நறுங் கடம்பின் பாசிலைத் தெரியச்சூர்''

என்று பேசப் பெற்றுள்ளது. சூர் என்ருல் அச்சம் என்ற பொருள். அச்சமே வடிவமாக உடையன் அவனுதலின் அவன் சூர் என்றே அழைக்கப் பெற்ருன். அவனை அழிக்க உள்ளத்து உரமும் ஊக்கமும் வேண்டும். அது பெற்றவன் முருகன் என்பதைப் புறம்,

''முருகொத்தியே முன்னியது முடிப்பான் முருகன்'' என்ருல் அவனை வழிபடுவோர் முன்னியதும் முடியும்' என்ற முருகனின் இறைமைக் குணத்தைச் சங்க இலக்கியத்துள் ஒன்ருய பத்துப் பாட்டின் திருமுருகாற்றுப் படை ''இன்னே பெறுதி நீ முன்னிய வினயே'' என்று முழங்குவது கொண்டு உணரலாம்.

இம்முருகனின் திருவிளயாடல்களையும் அவன் தமிழோடு தொடர்பு கொண்டு ஒன்றித்த செய்திகளையும் பரிபாடல் விரிவாகப் பேசுகின்றது. அங்குள்ள முருகன் இறைமைக் குணமெல்லாம் இறைவனின் எளிவுறு பண்புகளைக் குறிப்பதாகும்.

முருகன் பிணிமுகமென்னும் யானையை ஊர்தியாகக் கொண்டு வேலாயுதத்தால் சூரபதுமனைக் கொன்றவன் என்றும் மாமரத்தைத் தடிந்து கிரவுஞ்ச மலையை ஊடறுத்தவன் என்றும் ஆறு முகங்களையும் பன்னிரண்டு கைகளையும் உடையவன் என்றும் சங்காரக் கடவுளாய சிவனுக்கும், மலைமகளுக்கும், மகன் என்றும் சால்புடையன் என்றும் தலைவன் என்றும் அவன் உயிர்கட்கும் அருளும் பண்பின என்றும் பேசப் பெற்றதோடு நல்வினையால்சிறப்புடை உயிராய்ப் பிறத்தலும் தீவினயால் இழிந்த உயிராய்ப் பிறத்தலும் நின் ஆணையால் நிகழ்வது என்ற இறைப் பண்பு.

''சிறப்பின் உயர்பாகலும்
பிறப்பின் இழிபாகலும்
ஏனேர் நின் வலத்தினினே'' என்று பேசப் பெற்றுள்ளது,

இனித் திருமாலைப் பற்றிய இறைமை சங்க இலக்கியங்களில் எங்கனம் பேசப் பெற்றுள்ளது என்று காண்போம்.

திருமால் ஆதிசேடனின் ஆயிரம் முடிகளையும் தன்முடிக்கண் கவிக்கப் பெற்றவன் என்றும் திருமகள் தங்கும் மார்பினள் என்றும் பலதேவன் வெண்ணிறமும் ஒற்றைக் குழையும், கலப்பைப் படையும் உடையவனுக இருந்தும் அவனும் திருமாலே என்றும் காயாம்பூ போன்ற மேனியன் என்றும் மார்பில் கௌத்துவ மணியும், பீதாம்பரமும் கருடக் கொடியும் உடையவன் என்றும் பேசப் பெற்றுள்ளது.

இவ்வாறு தோற்றமுடைய திருமால் பேராற்றல் மிக்கவர் என்றும் பேசப் பெற்றுள்ளது. சிவபிரானுக்குப் பழைமை கூறுவது போலப் பதிற்றுப்பத்தில் திருமாலின் பழைமை மிக அருமையாகப் பேசப் பெற்றுள்ளது. திருமால் பல ஊழிகட்டும் முதல்வன் என்றும், அவனுடைய பழைமை அறிவது அருமை என்றும் பேசுகின்றது.

பசும்பொன் உலகமும் மண்ணும் பாழ்பட
விசும்பில் ஊழி ஊழ்ஊழ் செலச்செலக்
கருவளர் வானத்து இசையில் தோன்றி
உருவறி வாரா என்றன் ஊழியும் அவையிற்று
உள்முறை வெள்ளம் முழ்கி அர்தருபு
மீண்டும் பீடுயர்பு ஈண்டி அவற்றிற்கும்
உள்ளீடாகிய இருநிலத்து ஊழியும்
நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்
மையில் காலமும் வெள்ளரும் நுதலிய
செங்குறியீட்டம் கழிப்பிய வழிமுறை
கேழல் திகழ்வரக் கோலமொடு பெயரிய
ஊழி ஒரு வினை யுணர்த்தலின் முதுமைக்கு
ஊழியாவரும் உணரா ஆழிமுதல்வ''

என்று பேசப் பெற்றுள்ளது. இப் பாட்டில் திருமாலின் அனுதியான நிலை பேசப்படுவதைக் காணலாம். வேதத்தில் ''பரம்பொருளினின்றும் ஆகாயம் தோன்றி, அதனினின்றும் காற்று தோன்றி, அதனினின்றும் தீத் தோன்றி, அதனினின்றும் நீர் தோன்றி, அதனினின்றும் நிலம் தோன்றிற்று என்றும் இப்பாட்டில் திருமாலே அப்பரம் பொருள் என்று கூறுகின்றது.

அதோடு நில்லால் திருமாலின் பரத்துவத்தை வலியுறுத்தம் முறையில் அந்தணர்களால் காக்கப் பெறும் அறனும் நீ, நெறியற்றோரைத் திருத்தி ஆட்கொள்ளும் மறக் கருணையும், பகைவர்கட்குச் செய்யும் வருத்தமும் நீ, வானத் தியங்கும் திங்களும் நீ, கதிரவனும் நீ, ஐந்து திருமுகங்களையுடைய ஈசனும், அவன் செய்யும் சங்காரமும் 'நீ வேதம் நீ, பிரமன் நீ, படைத்தலாய தொழிலும் நீ, மேகமும் வானமும், நிலமும், இமயமலையும் நீ என்று திருமாலின் இறைமைத் தன்மை பேசப்பெற்றுள்ளது. இங்குத் தோன்றும் திருமாலின் இறைமைக் குணம் எல்லாப் பொருட்களிலும் இரண்டறக் கலந்திருப்பது. அவனின்றி ஓரணுவும் அசையாது என்பதும் ஆகும்.

சங்க இலக்கியத்தில் வாழ்த்துக்கும், அருளுக்கும் இறைவர்கள் எங்கனம் பேசப் பெற்றுள்ளனரோ, அங்கனமே காலக் கடவுள், கூற்று கொடுமைக்கும் தப்பாது செயலாற்றும் பண்பிற்கும் பேசப்பெற்றுள்ளது,

கூற்றுவனை அறவோன் என்று இலக்கியம் அழைக்கும் அவனுக்கும் உறவில்லை, பகையில்லை, பெரியவர் சிறியவர் என்ற வேறுபாடில்லை. குழவி பெற்றோர் என்ற நிலையில்லை. செல்வர், வறியவர் அரசர், அருளாளர், மற்றையோர் என்றில்லை. எல்லோர்க்கும் இறந்தகாலம் முடிவுழிப் பற்றிப் போதல் அவன் இயல்பு. அவன் இயல்பை மாற்றும் மருந்து உலகத்திலில்லை. இதனைப் புறநானூறு ''மருந்தில் கூற்றம்'' என்றும் 'மருந்தில் கணிச்சி' என்றும்' 'வெந்திறல் கூற்றம் என்றும் அழைக்கும் தொல்காப்பியர்கூட மாற்றருங்கூற்றம் சாற்றிய பெருமையும் என்பார். கூற்றம் என்பது உயிர் கவர்ந்துசெல்வதால் இதனை ''உயிர் உண்ணும் கூற்று' என்றும் அழைப்பர். நயனில் கூற்று என்றும் அழைப்பர். இக் கூற்றுவன் வேறு, எமதருமன் வேறு என்பதைப் பதிற்றுப் பத்து தெளிவாக்குகின்றது. கூற்றுவன் எமதருமனின் ஏவலன். இந்த இருவரையும் பிரித்துக் காட்டும் பரிபாடல் ''தருமனும் மடங்கலும்'' என்னும்.

இந்த நுட்பத்தைப் போலப் பல நுட்பமான கருத்துக்கள் பரிபாடலில் உள்ளன. அவற்றுள் ஐம்பூதங்களைப் பற்றியும், ஞாயிறு திங்களைப் பற்றியும், அசுரர்களைப் பற்றியும், ஆதிப் பிரமரின் நினைவாற்றலால் தோன்றிய ஆதித்தர். பன்னிருவர், வசுக்கள் என்று முப்பத்து மூன்று தேவர்களையும்—பேசும் போது மக்களின் வாழ்நாளை நெறிப்படுத்திமுறை வழங்கும் பன்னிரு கோள்களைப் பற்றிப் பேசும்போது அவை ''விதியின் மக்கள்'' என்கின்றது. இவர்கள் தாம் ஒருவனுக்கும் பிறப்பால் வரும் நல்லது அல்லது கணிக்கவல்லன என்ற சோதிட நூற் கலைக் கூற்றைக் குறிக்கும் முறையில் அவற்றின் இறைமை குறிப்பதைக் காணலாம்.

இவ்வாறு சங்க இலக்கியகங்களில் பொதுவாகவும், புறநானூறு, பரிபாடல், திருமுருகாற்றுப் படை போன்ற நூல்களில் சிறப்பாக்வும், கடவுளர் தம் இறைமை பரக்கப் பேசப் பெற்றமை கண்டு மகிழ்வோமாக.

சைவமும் தமிழும்

டாக்டர். கு. குற்ருலம் பிள்ளை

'சைவ சித்தாந்தம் என்னும் சீரிய பெருமை வாய்ந்த தத்துவக் கொள்கையானது தென்னிந்தியத் தமிழ் மக்களின் (திராவிடர்களின்) பேரறிவின் விளைவாகும். அது இந்திய நாட்டிலுள்ள சமயங்கள் எல்லாவற்றையும்விட மிக விரிவானதும், செல்வாக்குள்ளதும், ஐயத்திற்கு இடமின்றி உண்மையிலேயே மிக உயிர்க்கூறுனதும் ஆகும்'- என்பது மேல்நாட்டறிஞர் டாக்டர் ஜி. யு. போப் என்பார் கருத்து. 'மனிதகுலச் சிந்தனையின் முழு நிறைவானதும் மிகச் சிறந்ததுமாக மதித்துப் போற்றத் தக்கது சைவசித்தாந்தமே' என்பது டாக்டர் கமில் சுவலபில் என்பார் கருத்து. இங்ஙனம் பிறநாட்டார் பலரின் உளங்கவர்ந்த பெருமை சைவசித்தாந்தத்திற்கே உண்டு.

சைவசித்தாந்தம் என்பதற்குச் சிவனே முழு முதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயத்தின் கொள்கை என்பது பொருள். இதனைச் சைவநெறி எனவும் அழைப்பர். இச்சைவநெறி தமிழினத்தின் தலையாய நெறியாகும். இதனை,

''தென்னுடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி''

என்று மாணிக்க வாசகர் திருவாய் மலர்ந்தருளிய அருள்மொழியாலும் அறியலாம். மட்டுமின்றிச் சைவநெறியின் அடிப்படையான சிறந்த கருத்துக்களுக்கெல்லாம் மேற்கோளாக விளங்கும் நூல்கள் அனைத்தும் தமிழகத்துப் பண்டை பெருமக்களாலேயே இயற்றப்பட்டுள்ளன. இன்று சைவநெறியின் இலக்கியங்களாக மதித்துப் போற்றத் தக்கவைகளில் முக்கியமாக இருபத்தெட்டு சைவ ஆகமங்கள், சைவசமயப் பாடல்கள் அடங்கிய திருமுறைகள், நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறுகள் அடங்கிய பெரிய புராணம், மெய்கண்டாரின் சிவஞான போதம், அருள்நந்தி சிவாசாரியரின் சிவஞான சித்தியார், உமாபதி சிவாசாரியரின் நூல்கள் ஆகியவை இடம் பெறுகின்றன. திருமூலருடைய திருமந்திரம் என்னும் அஸ்திவாரத்தின் மீது சைவசித்தாந்தத்தின் பிந்திய அமைப்பு கட்டப்பட்டது என்பவரும் உண்டு. 'சைவத்திருமுறைகள் பன்னிரண்டும், மெய்கண்ட சாத்திரங்கள் பதினுன்கும், அவற்றைத் தழுவிச் செல்லும் ஏனைய பிற நூல்களுமே சைவசித்தாந்தத்தின் அடிப்படை முதன்மை நூல்கள்' என்ற மறைமலையடிகளார் கூற்றும் இங்கு நினைவு கூரத்தக்கது. மேலும் இதனை,

''வேதம் பசு அதன்பால் மெய்யாகமம்
நால்வர்
ஓதுந்தமிழ் அதனின் உள்ளுறும் நெய்-
போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணை
மெய்கண்டான்
செய்த தமிழ்நூலின் திறம்''

-என்னும் தனிப் பாடலும் வலியுறுத்தும். இவற்றையெல்லாம் நோக்கும்போது சைவசித்தாந்தக் கொள்கையானது தமிழ்மொழிக்கும், தமிழ் மக்களுக்கும், தமிழ் நாட்டிற்குமே சிறப்பாக உரியது என்பது புலனுகும்.

சைவசித்தாந்தக் கொள்கைகளை விளக்கும் தமிழ் நூற்களைத் தோத்திரங்கள் எனவும் சாத்திரங்கள் எனவும் இருகூறுபடுத்துவர். தோத்திரங்களாய் மதித்துப் போற்றிப் பாராட்டப் படுவன தேவாரம், திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகள் ஆகும். இத்திருமுறைகள் தெய்வமணம் கமழ்வன. சிவத்தின்மேல் தெய்வம் வேறு இல்லை என்னும் பேருண்மையை மக்களுக்கு விளக்கிக் காட்டும். உலகைப் பண்படுத்துவதற்கென இறைவன் திருவருளால் இவ்வுலகில் தோன்றிய அடியார்களால் பாடப்பட்டன. அவ்வடியார்கள் இறைவன் திருவருளால் தோன்றி வளர்ந்ததோடு மட்டுமல்லாமல், சிந்தையைச் சிவமாக்கி அவர்கள் சென்ற சென்ற இடங்களிலெல்லாம் திருவருளைக் கண்டு அனுபவித்து, அது உள்நின்று உணர்த்த, 'யாம் பெற்ற பேறுபெறுக இவ்வையகம்' என்னும் சீரிய நோக்கத்தோடு பாடிச் சென்றனர். எனவே இவை தோத்திரங்களாகச் சிறந்து விளங்குகின்றன.

மெய்கண்ட தேவரால் இயற்றப்பட்ட சிவஞானபோதம்; அருள்நந்தி சிவாசாரியரால் இயற்றப்பட்ட சிவஞான சித்தியார், இருபா இருபஃது;

உய்யவந்த தேவரால் இயற்றப்பட்ட திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார்; உமாபதி சிவாசாரியரால் இயற்றப்பட்ட சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை உண்மை நெறி விளக்கம், கொடிக்கவி, நெஞ்சு விடுதூது, சங்கற்ப நிராகரணம்; மனவாசகம் கடந்தார் என்பவரால் இயற்றப்பட்ட உண்மை விளக்கம் ஆகிய பதினான்கும் சாத்திரங்கள். இதனை,

'உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம்-வந்தவருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா
நெஞ்சுவிடு
உண்மை நெறி சங்கற்பம் உற்று'- என்னும்

பாடலாலும் அறியலாம். இவை மெய்கண்ட நூல்கள் எனவும் வழங்கப்படும். மெய்கண்டார் முதலிய சந்தான ஆசிரியர்களால் பாடப்பட்டமையாலும், மனிதவாழ்க்கையின் மெய்ம்மைகளை விளக்கிக் கூறுவதாலும் இவை மெய்கண்ட நூல்கள் என வழங்கப்பட்டன.

இவை கூறும் சைவசித்தாந்த கொள்கைகள் வெறும் வரட்டு வேதாந்தமோ, குருட்டு நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றியவையோ அல்ல. இன்றைய நடைமுறை வாழ்க்கையில் காணப்படும் அறிவியல் ஆய்வு நெறியோடு ஒப்ப வைத்து எண்ணத்தக்க பெருமை உடையது. எந்த ஒரு கருத்தையும் கண்மூடித்தனமாக மக்கள் மேல் திணிக்காமல் காரண காரியங்களோடு விளக்கிக் காட்டும் தருக்க இயல் நெறியே சைவ நெறி ஆகும். ஒரு கொள்கையை விளக்கும் போது துணிபொருள், ஏது, காட்டு, இணைத்தல், முடித்தல் என்னும் ஐவகை உத்திகளைக் கடைப்பிடித்தே விளக்கும் நெறி சைவநெறி. நடைமுறைக்கு ஒவ்வாத கருத்துக்கள் ஒன்றும் இந்நெறியின் கண் இல்லை. குறுகிய போக்கு ஒழித்து, பரந்த நோக்கத்தை மேற்கொள்ளும் பண்பார்ந்த நெறியே சைவநெறி, உலகத்தோடு போட்டி போட்டு முன்னேற நினைக்கும் முற்போக்குச் சிந்தனையாளருக்கும் பொருந்தும் நெறியே இந்நெறி. பழமை என்ற காரணத்தினால் நாம் எதனையும் போற்ற வேண்டிய தேவையில்லை; அதுபோல் புதுமை என்ற காரணத்தினால் நாம் எதனையும் வெறுத்து ஒதுக்கவேண்டியதும் இல்லை என்ற முற்போக்குக் கொள்கை உடையது இந்நெறி. இதனை,

'தொன்மையவாம் எனும் எவையும்
நன்றாகா; இன்று
தோன்றுவன எனும் எவையும் தீதாகா'

என்னும் சிவப்பிரகாச வரிகள் பறைசாற்றும்.

சிவபெருமான் முழுமுதற்தெய்வம் என்பதும், ஜீவன் அல்லது தனித்த ஆன்மாசத்தில் அல்லது சொரூபத்தில் சிவனைப்போன்றது என்பதும் ஆனால், ஒருமைப்பாடுடையது அல்ல என்பதும் சைவசித்தாந்த தத்துவத்தின் முக்கிய கொள்கையாகும். பதி (இறைவன்), பசு (ஆன்மா), பாசம் (கட்டுகள்), உலகினை உண்டாக்கும் முப்பத்தாறு தத்துவங்கள் அல்லது சித்தாந்தங்கள் ஆகியவை அனைத்தும் உண்மைகளே என்பதும் சைவசித்தாந்தக் கொள்கையாகும்.

'சைவசித்தாந்த கொள்கைகள் மிகப் பண்டைக்காலந் தொட்டே தென்னாட்டில் பரவியிருந்தது. திருநெல்வேலியும் மதுரையும் சைவசித்தாந்தத்தின் மைய இடங்களாகும். தற்போதுங்கூடச் சைவசமயம் தென்னாட்டில் மிகக் கீர்த்தி வாய்ந்த சித்தாந்தமாக உள்ளது' என்பார் கூற்றும் சைவத்திற்கும் தமிழுக்கும் உரிய நெருங்கிய தொடர்பினை வலியுறுத்தும்.

'உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே'

—திருமூலர்

ஒன்றே குலம்!

தவத்திரு. குன்றக்குடி அடிகளார்.

''ஒன்றே குலம்; ஒருவனே தேவனும்'' என்பது திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம். பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே மனித குலத்தைப் பிரிவினை உணர்வுகளிலிருந்து மீட்டு ஒரு குலமாக்கவேண்டும் என்ற உணர்வு திருமூலருடைய அருள் நெஞ்சத்தில் மலர்ந்துவிட்டது. ஆயினும் நாட்டில் நிலவுவது என்ன?

கடவுள் ஒருவனே! தனக்குவமையில்லாத தலைவன் ஒருவனே கடவுளாக விளங்க முடியும். பிறப்பு இறப்பு இல்லாத ஒன்றே பரம் பொருளாக முடியும். ''பிறவாயாக்கைப் பெரியோன்'' என்று இளங்கோவடிகள் வாழ்த்துகின்றார், என்றும் தலைமைக்குரிய தகுதிகள் அனைத்தும் உடையது பரசிவமேயாகும்.

'விண்ணோர் அமுதுண்டும் சாவ ஒருவரும்

உண்ணாத நஞ்சுண் டிருந்தருள்-
செய்குவாய்'

(சிலப்: வேட்டுவவரி 21)

என்றார் இளங்கோவடிகள், ஆதலால் உலகிற்கு ஒரே கடவுள்! அது பரசிவமேயாம்.

உலகின் மற்றப் பகுதிகளில் வாழும் மக்கள் வேறு வேறு பெயர்களால் ஏத்தி வழிபடும் கடவுளும் பரசிவமேயாம்.

'தென்னா டுடைய சிவனே போற்றி!

என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி!'

என்ற மணிமொழி அறிக! ஆதலால் திருமந்திரம் 'ஒருவனே தேவன்' என்று பாராட்டிப் பரவுவது சிவபெருமானையேயாம். சிவபெருமானே காலந்தோறும் உயிர்களின் நலம்நோக்கிக் கருணையால் எடுத்துக்கொண்ட திருமேனிகள் பல. இவை முருகன், விநாயகர், பைரவர், முதலியன. இந்தத் திருமேனிகள் வாயிலாக இறைவன் ஆட்கொண்டருள் செய்கின்றான். ஆதலால் இவற்றுள் எந்தத் திருமேனியைத் தொழுதாலும் அது இறைவனையே தொழுதது ஆகும். ஆதலால் பரசிவம் ஒன்றே கடவுள் என்று துணிந்து வழிபடும் நெறி மலர்க!

உயிர்க்குலத்திற்குத் தாய் ஒருத்தி; தந்தை ஒருவன். ஐயனாகவும் அவனே இருக்கிறான். ஆக, அனைத்தும் அவனாக இருக்கும் பொழுது மனித குலத்தில் பிரிவினைகள் இருக்க நியாயமென்ன? உயிர்கள் ஒன்றல்ல; பல, உயிர்த் தொகுதியின் பரப்பளவும் எண்ணிக்கையும் அளப்பில. உயிர்கள் படைக்கப்பட்டனவல்ல, இயற்கையின் பரிணாம வளர்ச்சி அல்லது என்றும் உள்பொருள். உயிர்களுக்கு உருவம் இல்லை உருவம் சாராது உடைமை சாராது இலங்கும் உயிர்கள் வேற்றுமைகளைக் கடந்திருப்பதே இயற்கை. உடைமைச் சார்பால்தான் வேற்றுமைகள் உருவாகின்றன அல்லது கற்பிக்கப்படுகின்றன. சிவத்தின் குலம் ஒன்றே இருக்கக் கூடியது, ஆதலால், ஒன்றே குலம் என்பது சைவநெறிக்குலம் என்பதே கொள்ளத்தக்க பொருள். நமது சைவ சமுதாயம் சாதிவேற்றுமைகளை நீக்குக! ஒன்றாக உண்டு உடனுறைந்து பழகுக!

சைவத்தில் கடவுள், வாழ்த்துப்பொருள் அல்ல; வாழ்வுப் பொருள். ''வாழ்முதலே'' என்பர் மாணிக்கவாசகர். கடவுளை வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொண்டு அவன் ஒன்றாகவும் உடனாகவும் வேறாகவும் இருந்து உணர்த்தும் வகையில் வாழ்தல்வேண்டும் என்பது நமது சைவநெறி. கடவுளே நம்மை வாழ்விக்கப் பொன்னும் மெய்ப்பொருளும் தருவான்; போகமும் திருவும் அருளிச் செய்வான்; வாழ்க்கையின் பிழையெலாம் பொறுத்தருள்வான். மீண்டும் பிழைகள் வாராவண்ணம் தவிர்த்துப் பாதுகாத்து வாழ்வாங்கு வாழும் நெறியில் உய்த்துச் செலுத்துவான். ஆதலால் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் சிவத்தை நினைத்து நமது நல்வாழ்வு நிலைக்கு வேண்டுவன அறிந்து முயன்று செய்து வாழ்தல் வேண்டும். இறைவனும் கருத்தறிந்து முடித்துத் தருவான்.

சைவ சமயம் சமுதாயம் தழுவிய சமயமாக உருப்பெறுதல் வேண்டும். சமுதாய மேமாண்மை பெறாத சமயங்களால் முழுநிறைப் பயன் தர இயலாது. சமயம் சமுதாய மேலாண்மை பெறவேண்டுமாயின் குடிகளைத் தழுவிய கோயில்கள் தேவை. கோயில்களைத் தழுவிய குடிகள் தேவை. இத்துறையில் சிந்தித்துச் செயலாற்றுதலே இன்று காலம் நமக்குத் தந்துள்ள கடமை.

With the best compliments from:-

NATARAJAN SONS,

M. G. ROAD, TRIVANDRUM-695 001

Phone No. 4035

Authorised dealers for:

GODREJ Refrigerators
KELTRON TVs, Radios, Stereos, Transistors
MURPHY Radios, Stereos, Transistors
NELCO Radios, Stereos, Transistors
BUSH Radios, Stereos, Transistors
AHUJA Public Address Equipments
RALLI Ceiling, Table, Pedastal fans
ORIENT Ceiling, Table, Pedastal fans
DRY/WET Grinders & all other Electrical Home Appliances

Telephone : Off. 72327, Res. 63727

Telegrams : STEEL

ARUNACHALAM & SONS

HARDWARE AND PAINT MERCHANTS

Chalai, Trivandrum-695 036

STOCKISTS FOR :

Nerolac Plastic Emulsion & Enamel Paints, Dulux Plastic Emulsion and Enamel Paints, Shalimar Plastic Emulsion & Enamel Paints, Jenson and Nicholson Plastic Emulsion and Enamel Paints, Apcolite Plastic Emulsion & Enamel Paints Supercem, Super Snocem, Empeecem Agsarcem & Ravicem-Water Proof Cement Paints, White Cement & Mosaic Chips.

நால்வர் போற்றிய நன்னெறி

ச. மீனுட்சிநாதன் M. A., B.Ed.

''மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்''

உயிர்கள் மீதுள்ள பெருங்கருணையால் சிவபெருமான், அருவம், உருவம், அருவுருவம் ஆகிய திருமேனிகளைக் கொண்டு சகல உயிர்களையும் உலகங்களையும் தாங்கி ஒவ்வொரு உயிருக்கும் தாயாக நின்று அன்பு செலுத்தி முத்தி கொடுக்கிறான்.

இறைவனின் பிள்ளைகளாகிய நாம், நம்மையும் உணராது இறைவனையும் உணராது மயங்கி, மறவழியில் சென்று துன்பப்படுகின்றோம். துன்பத்தில் இருந்து இன்பத்திற்குச் செல்ல, அறியாமையில் இருந்து முழுஅறிவு நிலையை அடைய, மயக்கத்திலிருந்து தெளிவு பெற, இறையருள் வேண்டும். அவன் அருளை அன்புவழி நின்றே பெற இயலும். அன்பே சிவம்; அதுவே சைவம். அன்பே உருவான சிவபெருமானை அன்புவழி நின்று அடைய வேண்டுமென நாயன்மார்கள் நால்வரும் நமக்கு வழிகாட்டுகின்றனர். நாயன்மார்கள் போற்றிய நன்னெறிநின்று இறைவனுடன் ஐக்கியப்படுவதே, சைவசமயத்தின் நோக்கமாகும்.

நால்வர் போற்றிய நன்னெறி, தென்னகத்தின் தலையாய நெறி, நால்வர் நெறி இணையற்ற இன்பநெறி 'நால்வர் சென்றவழி'- என்பது தென்னாட்டு வழக்கு. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர்-என்னும் இந்நால்வரும் தியாக உணர்ச்சியை வளர்த்து, தன்னலமற்ற சேவை செய்தவர்கள்; இன்ப அன்பின் பயனைப் பெற்றவர்கள்; அன்புவழி நின்று இறையருள்பெற்று பல அற்புதங்கள் புரிந்து சைவ நெறியை ஒளிரச் செய்தவர்கள். இந் நால்வரை,

'சொற்கோவும், தோணிபுரத் தோன்றலும்
நம்சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்-
முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல்
தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்து எங்கே'

என்று விதந்து கூறுகிறார் ஒருவர். சைவத்தின் மேற் சமயமில்லை. சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லை என்ற கருத்தை உலகிடை உணர்த்த அக்குரவர்கள் மேற்கொண்ட நெறி, பிள்ளை நெறி, தொண்டுநெறி, தோழமை நெறி, ஞானநெறி என்பனவாம்,

கி. பி. ஏழாம் நூற்றாண்டு முடிவிலும், எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த இப்பெரியார்களுள் முதல் மூவரும் தேனூறும் தேவாரப்பாடல்களையும் நாலாமவர் திருவாசகத்தையும் அருளியவர்கள்.

திருஞான சம்பந்தர்:

சைவம் வளர்த்த இந்நால்வருள் திருஞானசம்பந்தர்பிள்ளை நெறி நின்று, சிவபெருமான் அருள் பெற்று தெள்ளமுதத் தமிழை ஈந்தவர். சோழ நாட்டு அந்தணராகிய சம்பந்தர், பாண்டிநாட்டிற் புகுந்து சைவசமயம் வளர்த்தவர். சைவசமய மறுமலர்ச்சிக்குச் சம்பந்தர் செய்த தொண்டை உணர்ந்த அறிஞர்கள், சைவக் குரவருள் சம்பந்தரை முதல்வராகக் கணக்கிட்டனர். 'நற்றமிழ் ஞான சம்பந்தன்', 'தமிழ் ஞான சம்பந்தன்' 'சம்பந்தன் செய்த தமிழ் மாலை'—என்றெல்லாம் தமிழுடன் சம்பந்தனையும் இணைத்தே காப்புச் செய்யுட்களில் கூறுகின்றனர். சம்பந்தர் பாடல்கள் ஒவ்வொன்றிலும் பெரும்பாலும், இரண்டு வரிகள் இயற்கை வருணனையாகவும் இரண்டு வரிகள் இறைவனைப் பற்றியதாகவும் அமைகின்றன. அவ்வமைப்பு, சம்பந்தருக்கு இயற்கையிலும் இறைமையிலும் ஒரேவகையான ஈடுபாடு இருந்ததை நமக்குக் காட்டுகிறது. தீயவர் எவரும் இறைவனை நினைத்து வழிபட்டால், அவன் அருளைப் பெறலாம் என்பதே சம்பந்தர் கருத்து. திருஞான சம்பந்தர் என்னும் பெயரே, தெய்வீக ஞானத்தோடு தொடர்புடையவர் என்னும் பொருளைத் தருகிறது. ஆளுடைப் பிள்ளையான இவர் வழி, உண்மைச் சமயம் மக்கள் உள்ளத்தில் வேரூன்றியது.

சம்பந்தர் தேவாரப் பாடல்களில் இன்று கிடைப்பவை 384 பதிகங்களே. ஒவ்வொரு பதிகத்திலும் 11 பாடல்கள் உள்ளன. இப் பதிகங்களைக் கொண்டு இவர் 220 சைவத் திருப்பதி

களிற் சென்று பாடியுள்ளார் என்பதை அறிய லாம். இவருடைய பதிகங்களைச் சைவத்திரு முறைகள் பன்னிரண்டனுள் முதல் மூன்று திரு முறைகளாகப் பயின்று வருகின்றனர்.

நீர்வளமும் நிலவளமும் மிக்க திருவையாற் றுத் திருக்கோயிலைப் பாடிய பதிகம் ஒன்று வருமாறு,

புலன் ஐந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி
அறிவு அழிந்திட்டு ஐம்மேல் உந்தி
அலமந்த போதாக, அஞ்சேல் என்று
அருள்செய்வான் அமருங் கோயில்,
வலம்வந்த மடவார்கள் நடம் ஆட
முழவு அதிர மழையென்று அஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறு
முகில்பார்க்கும் திருவையாறே'—

இப்பதிகத்தில், குரங்கு, மழை வருமோ என்று அஞ்சிப் பாதுகாப்பைத் தேடிக் கொள்ளுகிறது. அதுபோல மனிதன் இறக்கும் தருவாயிலேனும் அருள்செய்யவரும் இறையவனின் பாதுகாப் பைத் தேடிக்கொள்ளவேண்டும்-என்னும் குறிப்பு சுட்டப் படுகிறது.

அப்பர்:

'நமசிவாய' என்னும் மந்திரத்தை உயிர்க்கு உறுதுணையாகக் கண்டவர் அப்பர். 'திருநாவுக் கரசு' என்னும் சிறப்பு பெற்ற இவர் மருள் நீக்கி யார் என்னும் பிள்ளைத் திருநாமம் கொண்டவர். உழவாரப் படை ஏந்தி சிவன் கோயில்களில் இறை வழிபாட்டுக்குரிய புறப் பணிகளையெல் லாம் செய்து தமது உடலுழைப்பை இறை வழிபாட்டிலேயே செலவழித்தவர்.

'தொண்டருக்குத் தொண்டு செய்யும்
உமைபாகன் பாதத்தை
தண்மைமிகு 'தாச நெறி'
சென்றுய்ந்தார் வாகீசர்'

என்பது நிறைவாக்கு.

'என் கடன் பணிசெய்து கிடப்பதே'—என் னும் அப்பர் அருள் வாக்காலேயே இது புலப்ப டும். இவரது பாடல்கள் உள்ளத்தை நெக்குரு கச் செய்வன. மகேந்திரவர்ம பல்லவனது ஆணைகளை மதியாமல் 'நாமார்க்கும் குடியல் லோம்; நமனை அஞ்சோம்' -என வீறுகொண் டெழுந்த சைவ சமய விடுதலை வீரர் அப்பர்,

'கற்றுணை பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே'

-என்று ஐந்தெழுத்தைப்பாடி அல்லல் தீர்த்த வர். இவர் பாடிய பதிகங்களில் இன்று கிடைப் பவை 319 மட்டுமே. இவர் பாடிய தேவாரப் பதிகங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற வழிகளில் மக்கள் சாதனை செய்து இறைவனது திருவடி நிழலை அடையலாம் என்பதை விளக்கிக் கூறுகின்றன. சம்பந்த ருக்குமுன் பிறந்து சம்பந்தரின் மறைவின் பின் னரும் வாழ்ந்தவர் அப்பர். இவரது பதிகங் கள் நான்கு முதல் ஆறு திருமுறைகளாக அமைந்துள்ளன.

சுந்தரமூர்த்திகள்:

தேவாரம் பாடிய மூவருள் மூன்றாமவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளாவர். இவரது திரு மண நாளில் இறைவன் இவரைத் தடுத்தாட் கொண்டு அருளியபோது, இவர் இறைவனை, 'பித்தா' - என்று வன்முறையில் விளித்தமை யால் 'வன்தொண்டர்' - எனப்பட்டார். இவர் மனைவியிடம், இவரது தோழரைப்போல இறைவனே தூதுசென்றதால் இவரைத் 'தம்பி ரான் தோழர்-' என்பர். திருவாரூர் பெருமான் அருள் பெற்றமையால் 'நம்பியாரூரர்'- எனப் பட்டார்.

திருவாரூர் கோயிலில் சிவபெருமானே 'தில்லைவாழ் அந்தணர்' - என்று அடியெடுத் துக் கொடுக்க திருத்தொண்டத் தொகை என் னும் தேவாரப்பதிகம்பாடி, அடியாரின் பெரு மைகளை வலியுறுத்தியவர் சுந்தரர். இதன் விளைவே பெரிய புராணம்.

சுந்தரரின் செந்தமிழ்ப் பாடல்கள் நகைச் சுவை பயின்றவை; பொருட்சுவை நிறைந்த வை, உலக இச்சைகளில் சிக்காமல், 'யான் எனது' - என்னும் செருக்கறுக்க வேண்டுகிறார். சம்பந்தருக்கும் அப்பருக்கும் பிற்பட்டகாலத் தில் சமண புத்த சமயங்கள் ஒடுங்கின. ஆகவே, பின்தோன்றிய சுந்தரர் பாடல்களில் புறச்சமயத் தைக் கடியும் பாக்களே இல்லை. இவரைச் சேர மானுடன் கயிலை சென்றார் என்பர்'.

ஆன்மா அடையக்கூடிய மிக உயர்ந்த நிலை திருவருள் ஞானம் எனப்படும் சிவஞா னம் என்பது. சிவபக்தியாகிய அன்பு சிவஞா னத்தால் மேலோங்கும். அவ்வித அன்பே சிவம். அதுவே சைவம் இவரது 1026 பாக்க ளும், ஏழாம் திருமுறையாக விளங்குகின்றன.

மூவர் தமிழ் என்று குறிப்பிடும் தேவாரப் பாடல்கள், இசைக்கருவிகளுடன், பண்ணுடன் பாடுவதற்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. நாளும் இன்னிசையால் பாடி இறையை அடைய வழிவகுப்பவை.

மாணிக்கவாசகர்;

மெய்யான இறைவனிடம் உய்யவென அன்புவைத்து தெய்வீக 'சன்மார்க்க நெறி'-நின் றார் திருவாதவூரர் என்னும் மாணிக்கவாசகர்'

'சித்தமலம் அறுத்து சிவமாகி'—நின்ற செம்மல் இவர். திருவாசகம் அருளிய இவர், திருக்கோவையார் என்ற நூலையும் படைத்துள்ளார்.

'திருவாசகத்திற்கு உருகார்
ஒருவாசகத்திற்கும் உருகார்'—

என்பது நிறைந்த மொழி. திருவாசகத்தைப் படித்துப் பொருளுணர்ந்த அருள்மிகு ஜி. யூ. போப், இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலம் மாணிக்கவாசகராலேயே முதன்முறை குறிக்கப்படுகின்றன. ஞானகுரவனாக வந்து ஆட்கொண்ட இறைவனைப் பிரிந்து ஆற்றொணாத் துயரத்தால் பாடப்பட்ட வாசகங்கள் உள்ளத்தை உருக்குபவை. மாணிக்கவாசகர், ஆதிசங்கரர் நிறுவிய மாயாவாதத்தைக் கண்டிப்பவர். 662 பாடல்களைக் கொண்ட திருவாசகமும், இறைவன் வேண்டப் பாடிய திருக்கோவையாரும்—எட்டாம் திருமுறையாகச் சேர்க்கப் பட்டுள்ளன.

சைவநெறியைப் பேணி வளர்த்த இந்நால்வர் தம் நெறியைக் கடைப்பிடித்து ஒழுகும் வாழ்க்கையே சைவ வாழ்க்கையாகும். சைவசமயப் பண்பாடு சிறக்கத் தேவார திருவாசகங்களைப் படிப்போமாக; இம்மை மறுமைப் பயன்களை இதனால் எய்தலாம் என்பது உறுதி.

வாழ்க நால்வர் நெறி! வளர்க அன்பு நெறி!

திருச்சிற்றம்பலம்

☎ 73294

S. POTTIVELU PILLAI & SONS

TIMBER & PLYWOOD MERCHANTS

POWER HOUSE ROAD, TRIVANDRUM-695023

DEALERS IN:-

COMMERCIAL & DECORATIVE PLYWOODS
FOAM PRODUCTS, LAMINATED SHEETS
MATTERESSES, PILLOWS etc etc:

With best compliments from!

Tel: ROSEWOOD ☎ 72852 / 70532

C. PERUMAL PILLAI SONS

Timber, Paints & Hardware Merchants

POWER HOUSE ROAD, TRIVANDRUM-23

STOCKISTS FOR:

Jenson & Nicholson Paints Asian Paints, Addision paints, I C I paints - Shalimar paints - Blundel Eomite paints - 'NATARAJA' Mortice Locks Padlocks - Plywoods - Formica Decorative Laminates, Hard Boards - Supercem Super Snowcem Cement Paints - Lite Roofing Sheets Etc. All Kinds of Aluminium Fittings and other Building materials Etc.

அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?

பேராசிரியர் R. ஹரிஹரசுப்பிரமணிய ஐயர்

ஒருவருடைய உறுப்பை மற்றவர்க்குப் பொருத்தலாம் என்ற கருத்தை முதலில் எடுத்துச் சொன்னவர் சேக்கிழார்தான். ''கண்ணப்ப நாயனுர் புராணம்'' முதன் முதலாக நடந்த கண் மாற்றுச் சிகிச்சையைத்தான் குறிப்பிடுகின்றது. காளத்தி வேடனுடைய பக்தி கடுமையான பக்திதான் என்பதில் ஐயம் சிறிதும் வேண்டாம். திருத்தொண்டத் தொகை ''கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க்கடியேன்'' என்று குறிப்பிடுகின்றது. பாமாலை சூட்டுவதும் பூமாலை சூட்டுவதும் பக்தி இயக்கத்தில் பரக்கக் காணலாம். கடுமையான விரதங்களை சமணசமயத்தில் பார்க்கலாம். மெய், வாய், கண், மூக்கு, செவி என்று ஐம்புலன்களை இறைவனுக்கு அர்ப்பணிக்கும் அசுர பக்தியைக் கண்ணப்பரிடம் மட்டும்தான் காண வியலும்.

கண்ணப்பருக்கு பெற்ருேர் திண்ணன் என்று பெயர் சூட்டினர். பொத்தப்பி நாட்டைச் சார்ந்தவர். வேட்டைக்குச் செல்கின்ருர். பன்றி ஒன்று தப்பிஓட அதன்பின்னே திண்ணனுர் சென்று அதனை கொல்கிருர். மலைமீது ஏறிச் செல்கிருர். மாகமார்ந்த திருக்காளத்தி மலையில் எழும் கொழுந்தாயுள்ள ஏகநாயகராகிய இறைவரைத் திண்ணனுர் காண்கிருர். பேருவகை எழுகின்றது. அன்பின் வேகமானது மேற் செல்ல மோகமாய் ஓடிச்சென்ருர். இறைவனைத் தழுவினுர். மலர்க் கண்ணீர் அருவி பாய்கின்றது. ''அடியனேற்கு இவர்தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ'' என்று வாய் முணுமுணுக்கின்றது. இறைவன் மலையில் தனியே இருப்பதோ? என்று மனம் புண்ணுகின்றது.

இறைவனுக்கு அமுது செய்ய இறைச்சியும் இடுவாரில்லை. இன்னமுது படைக்கவேண்டும் என்று எண்ணிச் சிறிது தூரம் போவார். மீண்டு, வருவார். காதலால் நோக்கி நிற்பார். கன்று அகல் புனிற்ருப் போலாவார். நாதனே அமுது செய்ய நல்ல மெல்ல இறைச்சி நானே கோதறக் கொணருவேன் என்பார். நீர் பசியோடு இருக்க சோர்தரு கண்ணீர் வார வார்சிலை எடுத்து மலர்க் கையால் தொழுது செல்வார்.

வன்பெரும் பன்றி தன்னை எரியினில் வதக்குவார். இன்புறு தசைகளை வெவ்வேறு அம்பினில் கோர்ப்பார். வாலியசுவைமுன் காண்பான் வாயினில் அதுக்கிப் பார்ப்பார் சாலவும் இனிய தசைகளைச் சருகினில் இடுவார். மஞ்சனம் ஆட்ட உன்னி மாநதி நன்னீர் தூயவாயினிற் கொண்டு, கொய்த தூய நறும் பள்ளித் தாமங்களைக் குஞ்சிமேற்கொண்டார். இனிய எம்பிரானுர் சாலப் பசிப்பர் என்று இரங்கி ஏங்கி நனி விரைந்து இறைவர் வெற்பை திண்ணனுர் நண்ணினுர்.

பசியால் இறைவன் இளைத்துவிட்டார் என்று நினைக்கிருர். இறைவன் மலைமீது தானுய் முளைத்து எழுந்த முதல்வர். சுயம்பு மூர்த்தி. அவருக்குப் பூசை செய்ய முனைகிருர். முற்பிறப்பிற் பூசனை செய்த வாசனைப் பற்றி இவ்வாறு செய்கிருர். அவரது திருமுடிமேல் இருந்த மலர்களைத் தமது காலில் இட்டிருந்த பொற் செருப்பான் மாற்றுகின்ருர். திருவாயிலிருந்த திருமஞ்சன நீரை விளைந்த அன்பினை உமிழ்வார் போல விமலனுர் திருமுடியின் மேல் விட்டார்.

தலைமிசைச் சுமந்த பள்ளி தாமத்தைத் தடங்காளத்தி மலைமிசைத் தம்பிரானுர் முடிமிசை வணங்கிச் சாத்தினுர். இலைமிசைப் படைத்த ஆனின் திருவமுதை எதிரே வைத்தார். ''நாயனீரே அமுது செய்தருளும்'' என்ருர். இரவில் இறைவனை விலங்குகளிடமிருந்து காக்க மனத்தினுள் அன்பு தாங்கி திருக்கையிற் சிலையும் தாங்கி மைவரையென்ன மருங்கு நின்ருர்.

கண்ணப்பர் தாம் அறிந்த நெறியில் பூசிப்பதை இறைவன் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்கிருர். 'திண்ணன் வன்திறல் வேடுவன் அல்லன். அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல். அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும். அவனுடைய செயல் எல்லாம் நமக்கினியன.'' என்று கூறுகின்ருர். ஆகம முறைப்படி அருச்சனை செய்யும் சிவகோசரியாருக்குத் திண்ணன் பரிவிருக்கும் பரிசெல்லாம் காட்டுகிருர்.

பிஞ்ஞகனின் திருநயனத்தில் ஒன்றிலிருந்து துண்ணென உதிரம் பாய்கின்றது. துடைக்கின்றார் குருதியை. வீழ்வது ஒழியவில்லை. செய்வது அறிந்திலர். திசைகள் எங்கும் பார்த்தார். எடுத்தார் வில்லும் வாளியும். மலைச்சாரலில் மருந்து கிடைக்கும் என்று நினைக்கிறார். புனத்திடை மூலிகைப் பறித்து கடிது வந்து கண்ணில் பிழிகிறார். கண்ணில் புண்ணீர் குறைபடாது ஒழுகுகின்றது. ''உற்ற நோய் தீர்ப்பது ஊனுக்கு ஊன்'' என்று துணிகிறார், தன் கண் அம்பால் இடந்தப்பின் தலைவன் கண் அதற்கிது மருந்தாய் புண்ணீர் நிற்கவும் அடுக்கும் என்று மதர்த்தெழும் உள்ளத்தோடு மகிழ்ந்து முன்னிருந்து தங்கண் வாங்கி முதல்வர் தம் கண்ணில் அப்ப செங்குருதி நின்றது கண்டார். திலத்திலிருந்து ஏறப் பாய்ந்தார். தோள்கள் கொட்டினார். கூத்தும் ஆடினார். ஒன்றிய களிப்பில் உன்மத்தர் போலானார்.

இறைவன் இடக்கண்ணில் குருதி பாய்கின்றது. வேடனார் அஞ்சவில்லை. இன்னும் உண்டு ஒரு கண். அந்தக் கண்ணைத் தோண்டி தேவர் கண்ணில் அப்பி அந்நோயினைத் தீர்க்க நினைக்கிறார். தம்பிரான் தன் திருக் கண்ணில் இடக்கால் ஊன்றி நிற்கிறார். மனத்தில் பெருவிருப்போடு ஒரு தனிப் பகழி கொண்டு தோண்ட முற்படுகிறார். காளத்தி நாதர் கண்ணப்பருடைய தொண்டினைக் கண்டுவிட்டார். அம்பு கொண்டு கண்ணைத் தோண்ட முயற்சித்த அவருடைய கையினைத் டுக்கின்றார் ''கண்ணப்ப நிற்க'' என்று குரல் கொடுக்கின்றார். இறைவனின் வலப்பக்கத்தில் இடம் தரப்படுகின்றது.

இறைவனிடம் கொண்ட அருள் நோக்கத்தால் இறைபணி செய்தவர் கண்ணப்பர். காளத்தி வேடன் கண்ணப்பன் காளத்தி நாதரிடம் கொண்ட பக்தி கங்கை வேடன் குகன் இராமனிடம் கொண்ட பக்தியைப் போன்றதாகும், திண்ணப்பர் முற்பிறவியில் அருச்சுனனாயிருந்து தவஞ்செய்து பெற்றவரத்தினால் திருக்காளத்தியைக் கண்டவுடனே பற்றிக்கொண்டு பேறடைந்தனர். சிவனிடத்து அன்பு செலுத்துவது இன்பம் பயக்கும் என்பதற்குக் கண்ணப்பர் சான்றாக உள்ளார். சிவனிடத்து முதிரும் அன்பு சிவமாய் விளைந்து முடிவிலா இன்பமாகிய சிவத்துவத்தை விளங்கச்செய்யும். ''அன்பே சிவமாவது'' என்பது திருமந்திரம். அரிய தவஞ்செய்தும் மலையும் காடும் சேர்ந்தும் தேவர்களாலும் முனிவர்களாலும் காணுதற்கரிய சிவனை ஆராவன்பினில் ஆர்வம் பெருகும் நிலையில் காணலாம் என்பதைக் கண்ணப்பர் கதை காட்டுகின்றது. அன்பு அதன் விளைவாகிய புறச்செயல்களாலேயே அறியப்படுவதாம். கண்ணப்பரும் ஞானசம்பந்தரும் பதினாறும் வயதில் சிவபெருமானை அடைந்தனர். இருவரும் முருகப்பெருமான் திருவருள் பெற்றவர் என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்.

With Best Compliments from:

AMSET STEEL CORPORATIONS

NALANCHIRA, TRIVANDRUM

சைவமும் தமிழும் தழைத்தோங்க
எமது வாழ்த்துக்கள்

திருவனந்தபுரம் காதி பண்டார்

மகாத்மாகாந்தி ரோடு

திருவனந்தபுரம்.

NARMADA

PROVIDES

ALL BUILDING MATERIALS
UNDER ONE ROOF

With a supplementary
STEEL YARD
at Nalumukku, PETTAH.

SISTER CONCERNS

Narmada Steel Constructions
(Private) Limited

Narmada Design Centre
(Private) Limited

Narmada Consumer Stores
(Private) Limited.

Kaudiar, Trivandrum-695003
Phone: 66845, 63547 & 64538

The narmada shopping complex at Kaudiar, Trivandrum is unique in every respect adding new departments in successive stages of development..................................

"THE SHOPS" IN THE "COMPLEX"

AJAN ENTERPRISES	...	Paints, Plywood, Laminates
B. K. ENTERPRISES	...	Hardwares
DEVI ENTERPRISES	...	Electrical fittings
VIJAI INDUSTRIAL COMBINES	...	Glass
JAY SANITATIONS	...	Sanitary equipments
TILES DECOR	...	Glazed and decorative tile
KARTHIK PIPES	...	A.C., G. I. & stoneware pipes
DECORE LIGHTS	...	Chandeliers
HOME MAKERS	...	Home appliances and interior decorations
TOYS 'N' DOLLS	...	Toys and childcare items
SPORTS LAND	...	Sports goods
NAVEENA	...	Sarees and textile goods
WOODCRAFTS	...	Furniture (Wooden aluminium steel)
MOBILE KERALA	...	Bajaj cycles

With Best Compliments:-

TOP IN TEXTILES

ARUNA TEXTILES

CHALAI, TRIVANDRUM

for wedding sarees

ARUNA WEDDING SAREE CENTRE

CHALAI, TRIVANDRUM.

☎ 73538 Resi: 73224

இலக்கியமும் வரலாறும்

டாக்டர். அ. சுப்பிரமணியபிள்ளை

மனிதன் பிறந்தவுடன் அவன் வரலாறும் பிறந்தது. ஐந்து வகையான மூல ஆதாரங்களைக்கொண்டே வரலாறு எழுதப்படுகின்றது. அவையாவன, கல்வெட்டுக்கள். நாணயங்கள், புதைபொருள்கள், இலக்கியங்கள், வெளிநாட்டவர் எழுதிய சான்றுகள் என்பன. நீதி இலக்கியம் இயற்றிய கொடில்லியரும் அர்த்தசாஸ்திரம் எழுதுவதற்கு மூலங்களாகப் புராணங்கள், கதைகள், தர்மசாஸ்திரம், சுயசரிதை முதலியவற்றைப் பயன்படுத்தியிருக்கிறார் (1)

மனிதன் சிந்தித்தபோது இலக்கியம் பிறந்தது. வரலாறும் இலக்கியமும் ஒன்றோடொன்று தொடர்புடையன. வரலாற்றைப்போலவே இலக்கியங்களும் ஆதாரங்களோடு எழுதப்படுவதால், பதிவேடுகளைக் (Records) காட்டிலும், கல்வெட்டுக்களைக் காட்டிலும், இலக்கியமே வரலாற்றாராய்ச்சிக்குப் பயன்படுவதைப் பல்வேறு வரலாற்றாசிரியர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சங்ககால வரலாற்றை எழுதுவதற்குச் சங்க இலக்கியங்களைத்தவிர வேறு பெரிய ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. என். கிருஷ்ணசாமி ஐயங்கார் எனும் வரலாற்றாசிரியர், புதைபொருள், கல்வெட்டுச் சான்றுகளைக் காட்டிலும், இலக்கியமே இந்திய வரலாற்றை ஆராய்வதற்குப் பெரிதும் துணை செய்கிறது என்கிறார். ''பழங்கால வரலாற்றை நாம் ஓரளவு ஆராய்ந்து முடிந்து விட்டோம். பாலி மொழியிலுள்ள இலக்கியங்களும், மற்ற வட இந்திய இலக்கியங்களும் ஐயத்தோடு பார்க்கப்பட வேண்டியவை என்றாலும், அவற்றை அறிவுபூர்வமாக அணுகினால் நாம் எதிர் பார்க்காத அளவுக்குச் சான்றுகளை அளிக்கின்றன'' (2) என எழுதுகிறார். டாக்டர் கே. கே. பிள்ளையும் அதனை உறுதிப்படுத்துகிறார். ''பல சாசனங்களில் குற்றங்குறைகள் உள்ளன. அவைகளை இலக்கியத்தில் வரும் சில ஆதாரங்களைக்கொண்டு உறுதிப்படுத்தலாம்... பல்லவர்களுடைய சாசனங்கள் நந்திவர்மன் காலத்துத் தெள்ளாற்றுப் போரை மட்டிலுமே கூறுகின்றன. ஆனால் நந்திக்கலம்பகமோ, தொண்டி, குருடக்கோட்டை, கடம்பூர், பழையாறை, வெறியலூர் முதலிய இடங்களில் நடைபெற்ற போர்களைப்பற்றிக் கூறுகின்றன'', (3) என்கிறார்.

வேதங்கள், புராணங்கள், நாட்டுப் பாடல்கள், காவியங்கள், கதைகள் போன்ற இலக்கிய வகைகள் அனைத்துமே வரலாற்றாராய்ச்சிக்குத் துணைசெய்யக்கூடியவை. கிறித்தவ, இந்திய வேதங்கள், இவற்றில் வரலாற்றுக்கூறுகள் காணப்படுவதை வரலாற்றாசிரியர்கள் உணர்ந்திருக்கின்றனர். டேவிட். லேண்டர்சும், சார்ல்ஸ் டில்லியும் ''பைபிளின் புதிய, பழைய, ஏற்பாடுகள் இரண்டுமே பழைய உயர்தனி இலக்கியங்களைப்போல் சிறப்பான வரலாறுகள்'' (4) என்கின்றனர். இந்திய வேதங்களை ஆராய்ந்த மாக்ஸ்முல்லர் Kant எழுதிய, Critique of Pure Reason, என்ற நூலின் மூலம் நன்கு வேதங்களில் காணப்படுகிறது'' (5) என்கிறார்.

வேதங்கள் மட்டுமன்றிப் புராணங்களும் தங்கள் பங்கினை வரலாற்றுக்குச் செலுத்தியிருப்பதனை வரலாற்றாசிரியர்கள் பல்வேறு இடங்களில் சுட்டிக்காட்டியுள்ளனர். கு. நம்பியாரூரன் புராணம் என்ற சொல்லிற்கே பழைய வரலாறு என்று பொருள் இருப்பதை எடுத்துக்காட்டுவதோடு, பெரியபுராணம் ஒரு வரலாற்றுக் கருவூலமாக இருப்பதையும் ஆராய்ந்து கண்டிருக்கிறார். (6).

சரித்திர ஆய்வாளர் ஜெயச்சந்திரன் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம் ஒரு சமுதாய பண்பாட்டு வரலாறாக மிளிர்வதைக் காட்டுகிறார். (7)

இலக்கியவகையில், புராணங்களைப்போல, காவியங்களும் வரலாற்றிற்குத் தங்கள் பங்கினைச் செலுத்தி வருகின்றன. கில்பர்ட் முர்ரே என்ற அறிஞர் ''இலியட் காவியம் வரலாற்றிற்காக எழவில்லையென்றால், வேறு எதற்காக எழுந்தது? என்று கேட்கிறார். (8) கார்ல் மார்க்ஸ்'' பழைய கிரேக்கக் காவியப் புலவர்கள் பழங்கால மனித வாழ்க்கையின் படிப்படியான வளர்ச்சியைப் படம் பிடித்திருக்கின்றனர்'' என்கிறார். (9)

காப்பியங்களையடுத்துக் கதைப்பாடல்களும், நாடோடிப் பாடல்களும், நாட்டுப்புறப்பாடல்களும் வரலாற்றுச் செய்திகள் தாங்கி நிற்கின்றன. 'இராமப்பையன் அம்மானை' எனும் கதைப் பாடல் கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் நாயக்கர் காலச் சரித்திரத்தை எழுதப் பேருதவி செய்தது. டாக்டர். ஆர். கே. மஜூம்தார், ஸ்விஸ் நாட்டுக் கதைப் பாடலின் தலைவனான வில்லியம் டெல் (William Tell) என்ற பாத்திரத்தின்மூலம் அக்கால ஸ்விஸ் நாட்டுச் சமூகப் பழக்கவழக்கங்களை அறியமுடியும் என்கிறார். (10) கதைப்பாடல்கள், பெரும்பாலும் அரசனது போர் வெற்றிகளைப் பற்றிச் சொன்னாலும் அவற்றுக்கிடையே அக்கால மக்கள் பேசிய பேச்சுக்கள், உடுத்த ஆடைகள், எண்ணிய எண்ணங்கள் ஆகியவற்றையும் காணலாம்.

கதைப்பாடல்களையும் நாட்டுப் பாடல்களையும் அடுத்து வரலாற்றுக்குத் துணை செய்யக் கூடியன கதைகள். நம் நாட்டின் வரலாறு முறையாக எழுதப்படவில்லையென்றாலும் அவை செவிவழிக் கதைகளாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அக்கதைகளில் காணப்படும் கற்பனைகளை விலக்கிவிட்டுத் தருக்கமுறையில் ஆராய்ந்தால் அவற்றுக்கிடையிலும் வரலாற்றுச் சான்றுகளைக் காணலாம். வின்சன்ட் ஸ்மித் போன்ற வரலாற்றாசிரியர்களும், ''புதினங்களும் வரலாற்று நாவல்களும் வாழ்க்கை முறைகளையும், பழக்க வழக்கங்களையும் பூகோளக்குறிப்புகளையும் விவரங்களையும் அந்தரங்க சமய, சமுதாய வாழ்க்கை விளக்கங்களையும் தருகின்றன'' என்கின்றனர். (11)

அடிக்குறிப்புகள்

1] P. C. Gupta-Editor 'Indian National Congress' XIII Session [Nagpur 1952] Page 5

2] S. Krishnaswamy Iyengar ''The Beginnings of South Indian History'' P. 37

3] ''தமிழக வரலாறும் சாசனங்களும்'' Journal of Tamil Studies.

4] David S. Landers and Charles Tilly, History as a Social Science. P. 6.

5] P. Kodana Rao ''Foreign Friends of India's Freedom'' P. 64

6] கு. நம்பியாரூரன் ''பெரிய புராணச் சொற்பொழிவுகள்'' பக்கம். 96

7] N. Jagadeesan & S. Jayapragasam. Ed: ''Homage to a Historian''- P. 145

8] Gilbert Murray. 'Rise of the Greek Epic' P. 29

9] Marxs and Engels ''Collected Works'' Vol. 3. P. 20

10] R. K Majumdar & A. N. Srivastava, Histriography P. 12

11] Vincent A. Smith. India its Epigraphy, Antiquities, Archaelogy and Architecture P. 19

உ

அன்பே சிவம்

'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவம் என்பதாரும் அறிகிலார்
அன்பே சிவம் என்பதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே'
திருமந்திரம் — திருமூலர்

அகமும் புறமும்

டாக்டர். தே. ஆண்டியப்பபிள்ளை

எல்லா வீட்டுக் குதிரையும் வந்தன. தன் வீட்டுக் குதிரை வரவில்லை. தாயும் மகனும் வாசலில் நின்றனர். அம்மா! அப்பா எப்ப வருவாங்க! இது மகனின் வினு. வருவாங்க அப்பா! இது தாயின் விடை. ஏதோ மீண்டும் குதிரையின் காலடியோசை கேட்கிறது. அதே ஆர்வம்; அதே எதிர்பார்ப்பு; ஏமாற்றம். அம்மா! அப்பா எப்ப வருவாங்க!

வருவாங்க அப்பா!

தெருவோரம் வந்துநின்று பார்க்கத் தொடங்கினர். எல்லார் வீட்டுக் குதிரையும் வந்தன. ஆனுல்....மாலை வந்து இருள் கவ்விற்று. இரவில் பையனும் கண் அயர்ந்து போனுன். குதிரை வந்ததா? அவளது மனநிலை என்ன? அத்துயர நிலையை, உணர்வுப் போராட்டத்தைப் படம்பிடித்துக் காட்ட வேண்டும். புறநானூற்றில் அக்காட்சி ஒரு கவிதையாக மாறுகிறது.

மா வாராதே மா வாராதே
எல்லார் மாவும் வந்தன; எம் இல்
புல்லுளைக் குடுமிப் புதல்வன் தந்த
செல்வன் ஊரும் மா வாராதே.
இருபேர் யாற்ற ஒருபெருங் கூடல்
விலங்கிடு பெருமரம் போல
உலந்தன்று கொல் அவன் மலைந்த
மாவே. (புறம்-273)

இது அவலப்பாடலா? இன்பப் பாடலா? எப்படிச் சொல்வது. தலைவன் வருவதாயின் இன்பம்! வரவில்லையாயின் துன்பம். பாடல் என்ன சொல்கிறது. உள்ளத்துடிப்பை உணர்த்துவதோடு மௌனமாகி விடுகிறது. இருபெரு ஆறுகள் எதிர்ப்படும் இடத்தில் பெருமரம் போல் குதிரை வீழ்ந்திருக்குமோ. நினைத்துப் பார்க்க இயலவில்லை. இதயம் கனக்கிறது. இதன் முடிவென்ன? முடிவின்றி இருப்பதுதான் கவிதையா? அகநானூறு இக்கவிதையை முடித்துக் காட்டுகிறது

அகப்பாடல் வேறு புறப்பாடல் வேறு என்று கருதிவருகின்றேம். அவை தம்முள் இணைந்து முழுமைபெற முடியுமா? நம்ப முடியவில்லை.

இரவு எதிர்பாரா நிலையில் போர்வீரன் வந்துநிற்கிறுன். கதவு திறக்கிறது. வியப்பு, அதிர்ச்சி, அழுகை, ஆனந்தம் அனைத்தும் அவளை ஊமையாக்கி விடுகின்றன. பேச முடியவில்லை. எவ்வளவு உணர்வுப் போராட்டம். கவிஞன் அவளை ஊமையாக நிறுத்திவைக்கிருன்.

தோழி முன்வந்து பேசுகிறுள். கடவுள் கற்பு தலைவன் உயிரைக் காத்துவிட்டது என்று திடமாக நம்புகிறுள். உனக்கோர் புதல்வனைப் பெற்றுத் தந்து உன் குலம் தழைக்கவேண்டும் என்று தவம் இருப்பவள். எத்தனையோ தலைமுறையாக ஏற்றிவைத்த குடும்பவிளக்கு அணையாமல் காப்பவன் நின் புதல்வன். அப்புதல்வனைப் பெற்றெடுத்த நன்னராட்டிக்கும் எனக்கும் எவ்வளவோ நிம்மதி, உனது வரவு எமக்கு இனிமையளிக்கிறது, சிறக்க நின் ஆயுள் என்று பாடுகிறுள்.

கடவுள் கற்பொடு குடிக்கு விளக்காகிய
புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின்
நன்னராட்டிக்கு அன்றியும் எனக்கும்
இனிது ஆகின்றுல்; சிறக்க நின் ஆயுள்
....
....
(அகம்-184)

அகப்பாடலும் புறப்பாடலும் இணைந்தபோது ஒரு கதை நடந்து முடிந்ததுபோல் ஆயிற்று. இவ்வாறு இணையும் பாடல்கள் வேறுண்டா என்று பார்ப்பது நல்லது. அதனுல் கவிதைச் சுவை எனும் நலம் வளரும்.

காத்திடுவோம் எந்நாளும்.

பி. குமரேசன்

ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து ஐந்தில்
அறிவாளர் நெஞ்சத்தே உருவான சபையாம்
தூயகலைத் தமிழுடனே தொன்மையுறு சைவநெறி
துலங்கிடவே வளர்ந்தோங்கத் தொண்டாற்றும் சபையாம்
நாயகனுய்ச் சுந்தரரும் நாஞ்சிலருள் கவிமணியும்
நாமகளின் உறவினராம் நல்லோர்கள் எல்லோரும்
நேயமிகு கோயிலென நிதம்ஆய்வு பலசெய்த
ஞானஒளி அருட்சபையே! நலந்தழைக்க நீவாழ்க!

செந்தமிழும் சிவநெறியும் செழுமை கொள்ள
சிவராஜர் இலக்குமணர் வையா புரியார்
சிந்தைமகிழ் இலக்கியமும் சிறந்த சமயச்
சீரறமும் ஆராய்ந்து திகழ்ந்து மிளிர
வந்தினிய சொல்லமுதால் அறிவை ஈந்த
வளர்ஞான சபைநூறு ஆண்டு கண்டு
முந்தையவர் தந்தவழி நிற்கக் கண்டோம்
முருகருளால் காத்திடுவோம் நாளும் நன்றே!

உள்ளத்தில் உள்ளானடி

N. ராஜகோபாலன்

கடவுள் என்ற தமிழ்ச் சொல்லுக்கு நிகரான சொல் வேறு எந்த மொழியிலும் இல்லை என் பர். இச்சொல் பொருட்செறிவு உடையதாகும். ''இறைவன் எல்லா உயிர்களிலும் இருக்கிறுன். எல்லா உயிர்களுக்கும் அப்பாற்பட்ட கடந்த நிலையும் அவனுக்கே உரியதாகும். கடந்திருப்ப தாலும் உள்ளிருப்பதாலும் கடவுள் எனப் பட் டான். (கட+உள்=கடவுள்) எல்லா உயிர்க் ளுக்குள்ளேயுமிருந்து அவற்றைக் கடவுவதால் கடவுள் என்ற பெயர் ஏற்பட்டது என்றும் சொல்வர். (கடவுதல்=செலுத்துதல்)

இறைவன் மிகமிக விரும்பி உறையும் இடம் உண்மையான பக்தனின் உள்ளமேயாகும். ''உண்மையான அன்புடன் நினைக்கும் அன்பர்க ளின் இதயமாகிய தாமரையில் ஊறக் கூடிய தேனுகத் தேவன் திகழ்கிறுன்'' என்கிறுர் அப் பர். ''வானவன் காண்'' என்று தொடங்கும் அப்பர் தேவாரப் பாடலில் ''கருதுவார் இதய கமலத்து ஊறும் தேன் அவன் காண்'' என வரும் அடிகளைக் காண்க. ''திருமால் பன்றி வடி வெடுத்துப்பாதலம் எங்கும் தேடிக்காணுத பர மனை நான்முகன் அன்னமாகிப் பறந்து ஆகாயம் எங்கும் தேடிக் காணுத கடவுளை நான்என் இத யம் தன்னில் தேடிக் கண்டு கொண்டேன்'' என் கிறுர் அப்பர். ''தேடிக் கண்டுகொண்டேன்''. திரு மாலொடு நான்முகனுக் தேடித்தேடொணுத் தே வனை என்னுளே தேடிக்கண்டு கொண்டேன்'' எனும் அடிகளில் அப்பரின் அனுபவம் அமைந் துள்ளது.

திருமூலர் நெடுங்காலமாக உடல் இழிவா னது என்று எண்ணி இருந்தார். காலப் போக் கில் உடல் இறைவனின் ஆலயமாகும் என்பதை உணர்ந்தார். அதனை நன்கு பேணத் தொடங்கி ஞர்.

''உடம்பினை முன்னம் இழுக்கு
என்று இருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள்
கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான்
என்று
உடம்பினையான் இருந்து ஓம்புகின்றேனே''

என்கிறுர் திருமூலர்....''உடலே தேவாலயம் உள்ளம் என்பது தெய்வ சந்நிதி. வாயே கோ புரவாசல் உயிரே சிவலிங்கம், ஐம்புலன்களும் தீபங்களாகும்'' என்ற விளக்கத்தையும் திரு மூலர் அளித்துள்ளார்.

''உள்ளம் பெருங்கோயில்
ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானுர்க்கு
வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச்
சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும்
காளா மணிவிளக்கே''

எனும் பாடல் நம் உள்ளத்தை அள்ளும் உயர்ந்த பாடலாகும்.

இராமலிங்க அடிகளாரின் பாடல்களிலும் மனக் கோயிற் கருத்து உளது. ''எத்துணை யும் பேற முருது'' என்று தொடங்கும் பாட லில் மன்னுயிரைத் தன்னுயிர் போல் மதிக்கும் அன்பர்களின் உள்ளங்களில் இறைவன் களி நடம்புரிகின்றதை எடுத்து விளக்குகிறுர். தன் மனக்கோயிலில் நடைபெறும் பூசனையை ஏற்றுக் கொள்ள விரைந்து வரும்படி இறை வனைத் தாயுமானவர் அழைக்கும் பாடல் நாட றிந்த நல்ல பாடலாகும். ''நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம்; அன்பே மஞ்சனநீர், பூசை கொள்ள வாராய் பராபரமே'' என்ற பாடல் மறக்க முடியாத மாண்புமிகு பாடலாகும். பக்தி இலக்கியத்தில் தோய்ந்தவர்களுக்கு இப்பாடல் ''காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக, நேயமே நெய்யும் பாலா, நிறைய நீர் அமைய ஆட்டிப், பூசனை ஈசனுர்க்குப் போற்றவிக் காட் டினுேமே'' எனும் அப்பர் தேவாரத்தை நினை வூட்டும்.

வைணவப் பக்தி நூற்களிலும் மனக்கோ யிற் கருத்து அமைந்துள்ளது. ''மார்வம் என்ப தோர் கோயில் அமைந்து மாதவன் என்பதோர் தெய்வத்தை நாட்டி'' என்றும் ''உன்னைக் கொண்டு என்னுள் இட்டேன் என்னையும் உன் னுள் வைத்தேன்'' என்றும் ''பணிக் கடலில் பள்ளிக் கோளை பழகவிட்டு ஓடி வந்து என்

மனக்கடலுள் வாழவல்ல மாயமணாள நம்பீ'' என்றும் பெரியாழ்வார் அனுபவித்துப் பாடியுள்ளார். ''அன்று நான் பிறந்திலேன். பிறந்த பின் மறந்திலேன் நின்றதும் கிடந்ததும் இருந்ததும் என்நெஞ்சுளே'' எனும் திருமழிசையாழ்வாரின் பாடல் நம் நெஞ்சிருக்கும்வரை நினைவிருக்கும்.

பல்லவ மன்னன் கட்டிய மாபெரும் கற்கோயிலில் எழுந்தருளுவதற்கு முன்னரே பூசலார் நாயனாரின் மனக் கோயிலில் குடிகொள்ள மகேசன் விரைந்து வந்த செய்தியைப் பெரிய புராணம் விவரிக்கின்றது.

பக்திப் பாரம்பரியத்தில் ஊறிய கவிமணி அவர்களின் ''கோவில் வழிபாடு'' எனும் கவிதை உள்ளக் கோவில் தத்துவத்தை அழகாக விளக்குகிறது.

''உள்ளத்தில் உள்ளானடி அதை நீ
உணர வேண்டுமடி
உள்ளத்தில் காண்பாயாகில் கோயில்
உள்ளேயும் காண்பாயடி''

எனும் அடிகளைக் காண்க.

இறைவன் விரும்புமலர் எது? என்ற வினாவை எழுப்பும் விபுலானந்த அடிகள் ''உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது'' என்று விடை அளிக்கிறார்.

எனவே இத்தகைய நூற்கள் கற்று, அதற்குத்தக நின்று இறையருள் பெற்று உய்வோமாக:

❋

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவம் என்பதாரும் அறிகிலார்
அன்பே சிவம் என்பதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே'
திருமந்திரம் -திருமூலர்

சிவஞான உண்மை

ஆர். வீரபத்திரன் M. A., L. T

முன்னைத் தமிழ்ப் பேராசிரியர், கேரளப் பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்.

பரதகண்டத்தில் நிலவும் பல்வேறு சமயங்களுள் 'சனாதன தருமம்' எனப்படும் இந்து சமயமே மிகப் பழமையானது. 'சனாதனம்' என்பதற்கு எப்பொழுதும் இருப்பது, புராதனமானது என்பது பொருள். வேதத்தை ஆதாரமாகக்கொண்டுள்ளமையால், அது வைதிக சமயம் எனவும் வழங்கும். சனாதன தருமம் வெறும் பழமையைப் பற்றி நில்லாமல், காலந்தோறும் தோன்றுகின்ற புதுமைக் கருத்துக்களை ஏற்று, அவற்றைத் தன் மயமாக்கி, உரம்பெற்று வளர்ந்துள்ள உயிர்த்தத்துவம் நிரம்பிய ஓர் உயர்ந்த சமயமாகும். வரலாற்று முறையாக நோக்கும்போது, கால இடவேறுபாடுகளுக்கேற்ப, அதன் கொள்கைகளிலும் தத்துவங்களிலும்சிற்சில வேற்றுமைகள் காணப்படுவது இயற்கையேயாம். சைவ சமயம் பற்றி, வடநாட்டிற்கும் தென்னாட்டிற்குமிடையே சில கொள்கை வேறுபாடுகள் இருப்பது, இக்காரணம்பற்றி அமைந்ததாகும். சைவ சமயம் பற்றித் தென்னாட்டார் கொண்டுள்ள கருத்துக்களே சைவ சித்தாந்தம் எனப் பெயர் பெறுகின்றன. சிலர் வடநாட்டு வேதாந்தக் கருத்துக்களுக்கும், தென்னாட்டுச் சிந்தாந்தக் கருத்துக்களுக்கும் வேற்றுமையில்லை என்றும், வேதாந்தத்தின் தெளிவே சித்தாந்தம் என்றும் சாதிப்பர்.

தமிழ் நாட்டில் நிலவும் சைவ சமயத்தின் இரு கண்களாகப் போற்றத் தக்கன ''தோத்திரங்கள்'' என்றும் ''சாத்திரங்கள்'' என்றும் கூறப்படும் இருவகை நூற்றொகுதிகளாகும். 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப் பதிகங்கள் முதலாக 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் பெருமான் பாடிய பெரிய புராணம் ஈறாகவுள்ள பன்னிரு திருமுறைகளும் தோத்திரங்கள் எனப்படும். தோத்திரங்கள், மக்களின் பக்தியை வளர்த்து, அந்நெறியில் அவர்கள் முத்தியை எய்துவதற்கு உதவுவதால், பக்திநூல்கள் எனப்போற்றப்படுகின்றன. இனி, சாத்திரங்கள் என்ற பகுப்பினுள் 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருவிய நல்லூர் உய்யவந்த தேவநாயனார் இயற்றிய 'திருவுந்தியார்' முதலாக, 13-ஆம் நூற்றாண்டில் அவதரித்த மெய்கண்ட தேவநாயனார் அருளிய 'சிவஞானபோதம்' உள்ளிட்ட, 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உமாபதி சிவச்சாரியார் பாடிய 'சித்தாந்த அஷ்டகம்' எனப்படும் எட்டு நூல்கள் ஈறாகவுள்ள பதினான்கு நூல்களும் அடங்குவனவாம்.

தோத்திரங்களான பன்னிருதிருமுறைகளிலும் பரக்கக்கூறப்படும் சைவ சமய உண்மைகளையே பதினான்கு சாத்திரங்களும் வடித்தெடுத்துக் கூறுவதால், திருமுறைகளை இலக்கியங்களாகவும், சாத்திரங்களை இலக்கணங்களாகவும் கூறுவது மரபு.

சாத்திர நூல்கள் பதினான்கனுள் மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் என்ற நூலே சித்தாந்த சாத்திரங்கள் அனைத்திலும் முடிமணியாகத் திகழ்கிறது. இந்நூலின் அரிய உண்மைகளை விளக்கத்தோன்றியது அருணந்தி சிவாசாரியார் இயற்றிய 'சிவஞான சித்தியார்' ஆகும். இவ்விரு நூல்களின் கருத்துக்களை மேலும் விளக்க எழுந்ததே உமாபதி சிவாசாரியார் இயற்றிய 'சிவப்பிரகாசம்.' இதனால் சிவஞான போதத்தை முதனூல் என்றும், சிவஞான சித்தியாரை வழிநூல் என்றும், சிவப்பிரகாசத்தைச் சார்பு நூல் என்றும் கூறும் வழக்குத் தோன்றுவதாயிற்று.

உலகில் உடம்பெடுத்துப் பிறவிகளில் கிடந்து, கடலலைபோல் ஓயாது உழலும் ஆன்மாக்கள், பரம்பொருளைச் சார்ந்து உயர்ந்து கடைத்தேறுவதாகிய வரலாற்றைக்கூறுவதே சிவஞானபோதம் முதலிய சித்தாந்த சாத்திரங்களின் உட்பொருளாகும். அப்பொருளின் சுருக்கத்தை இங்கு அறிய முயல்வோம்.

சைவ சித்தாந்தம் விளக்கும் பொருள்கள் மூன்றும். அவை. வடமொழியில் பதி, பசு, பாசம் எனப்படும். தமிழில் அவற்றை முறையே இறை. உயிர், தளை என்பர். பதியை, முதல்வன் இறைவன், சிவன் முதலிய பெயர்களாலும்,

பசுவை, ஆன்மா, உயிர், சீவன், உள்ளம் முதலிய பெயர்களாலும், பாசத்தை, மலம் பந்தம் தளை முதலிய பெயர்களாலும் குறிப்பிடுவர். உயிரும் ஆன்மாவும் தம்மில் வேறாயினும் அவற்றை ஒரு பொருளவாகக் கூறுவது மரபு.

சித்தாந்தம் உலகப்பொருள்களை அவன், அவள், அது என மூவகையாகப்பகுத்துக் கூறும். அவன் என்பதில் உயர்திணை ஆண்பாற்பொருள்களும், அவள், என்பதில் உயர்திணை பெண்பாற்பொருள்களும், அது என்பதில் உயிருள்ளனவும் இல்லனவுமாகிய அஃறிணைப்பொருள்கள் அனைத்தும் அடங்கும்.

இம் மூவகைப் பொருள்களும், தோன்றுதல், நிலைபெறுதல், அழிதல் ஆகிய முத்தொழில்களும் நிகழ்வதற்கு இடமாக உள்ளன. இத்தொழில்கள் ஆன்மாவின் உடல்பற்றி நிகழ்வனவே என்பதை நாம் மனங்கொள்ளவேண்டும். உலகில் ஒரு பொருள் தோன்றவேண்டுமாயின் அதற்கோர் கருத்தா தேவை. குயவன் இன்றிக் குடம் தோன்றாது. இது யாவரும் அறிந்த சாதாரண உண்மை. எனவே உலகத்தையும் அதிலுள்ள பொருள்களையும் படைத்த முதல்வன் ஒருவன் உண்டு என்பது உறுதியாகிறது. பசுக்கள் பதியைப் போன்று அநாதி என்றும், பதியுள்ள போதே பசுக்களும் உள்ளன என்றும் பசுக்கள் பதியால் உண்டு பண்ணப்பட்டவையல்ல என்றும் கூறுவது சித்தாந்தத்தின் சிறப்பியலாகும்.

உயிர்கள் ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களால் பிணிப்புண்டிருக்கின்றன. இம்மலங்கள் செம்பில் களிம்புபோல உயிர்களைப் பற்றியிருப்பனவாகும். இம்மலங்களும் பதி, பசுக்களைப்போல் அநாதியானவை. அறிவும் செயலும் இயல்பாக அமைந்த ஆன்மாக்கள், இம்மலங்களின் மறைப்பால் விளக்கம் பெறாமல், ஒளி மங்கிக் கிடக்கின்றன. இறைவன் தன் அளப்பரிய கருணையால் காரிருளில் கிடந்த ஆன்மாக்களைக் கரையேற்றி, ஒளிபெறச் செய்வதற்கு முன்வந்தார். உயிர்களைப்பற்றியிருக்கும் மாயாமலத்தைக் காரியப்படுத்தி ஆன்மாக்களின் உடல், கரணம் (பொறிபுலன்கள்) உலகு, அதிலுள்ள நுகர்பொருள்கள் ஆகியவற்றைப் படைத்து, ஆன்மாக்களை உலகில் வாழும்படி செய்தார். ஆன்மாக்கள் தாம் செய்யும் வினையின்மூலமாகவே, தம்மைப் பிணித்திருக்கும் மலங்களைப் போக்கித் தூய்மையுற்றுப் பின் தன்னை வந்தடைந்து உய்யவேண்டும் என்பதே இறைவனின் திருவுள்ளக் குறிப்பு. ஆதலால், ஆன்மாக்கள் வினைசெய்வதற்குத் தேவையான உடலையும், கரணங்களையும், வினை நிகழ்வதற்கு இடமான உலகையும் இறைவன் படைத்து ஆன்மாக்களை அதில் புகுத்தியுள்ளார்.

உடம்பு பெற்ற ஆன்மா, தனக்கு இயல்பாகவுள்ள அறிவு செயல்களால் வினைகளைப் புரிகிறது. பொறிபுலன்களின் வழியாக வருகிற இன்பத்தில் இச்சை வைத்து, அதனை நாடி, வினைகளில் தீவிரமாக ஈடுபடுகிறது. அப்போது ஆணவமலம் 'நான்' 'எனது' என்னும் உணர்வுகளை எழுப்பி, ஆன்மா தன் வினைகளை, ஊக்கமுடன் செய்து இன்பத்தை ஆரநுகருமாறு தூண்டுகிறது. இறைவன் ஆன்மாக்களின் கன்ம மலத்தை, நல்வினை தீவினைகளாகவும், அவற்றின் விளைவுகளான புண்ணிய பாவங்களாகவும், பயன்களான இன்ப துன்பங்களாகவும் காரியப்படுத்தி ஆன்மாவைத்தன் வினைகளில் ஆழ்ந்து அனுபவிக்கும்படி செய்கிறார். ஆன்மா மலங்களால் கட்டுண்டிருக்கும் இந்த நிலையைப் 'பந்தநிலை' அல்லது 'பெத்த நிலை' என்று கூறுவர்.

ஆன்மா தான் பெற்ற உலகவாழ்வில் தனது செயல்களின் பயனால் மும் மலங்களையும் களைந்தும், வினைகளை ஈட்டாதும் இருந்தால், வாழ்வின் இறுதியில் இறைவனோடு கலந்து ஐக்கியமாக முடியும். இறைவனுடன் ஒன்றி ஐக்கியமாகும் நிலையை 'முத்திநிலை' என்பர்.

ஆன்மா இங்ஙனம் முத்திநெறியில் முயலாமல், இன்பத்தில் வைத்த அவாவால் நல்வினைகளையும் தீவினைகளையும் இயற்றினால், அவற்றின் பயன்களை அனுபவிக்க வேண்டிய இன்றியமையாமை அதற்கு ஏற்படுகிறது. ஆனால் அவற்றை, எடுத்த அப்பிறவியிலேயே அனுபவித்துத்தீர்ப்பதற்குள், பஞ்சபூதங்களின் சேர்க்கையாலான அதன் உடம்பு முதிர்ந்து, தளர்ச்சியடைந்து விடுகிறது. இதனால் இறைவன் அவ் ஆன்மாக்களுக்கு அதன் பழைய உடலைக் களைந்து புதிய உடலை அளிக்கிறான். ஆன்மா பழைய உடலைக் களைவதை 'இறப்பு' என்றும், புதிய உடலை எடுப்பதைப் 'பிறப்பு' என்றும் நாம் கூறுகிறோம். முதிய உடலை விட்டுப் புதிய உடலை எடுப்பதற்கு ஒருவன் தன் பழைய உடையைக் களைந்து புதிய உடையைத்தரிப்பதை உவமையாகக் கூறுவர். ஒரு பிறப்பு நீங்கி மறுபிறப்பு வந்தமையும்போது முந்திய பிறப்பிலுள்ள அனுபவங்கள் முற்றிலுமாக மறக்கப்படுகின்றன. உயிர்தான் ஒடுங்கிய இறைவனிடமிருந்தே மீண்டும் தோன்றுகிறது. அந்தத்தைச் செய்யும் இறைவனே ஆன்மாவுக்கு ஆதியாகவும் இருப்பதால் இறைவனை 'அந்தம் ஆதி' என்று சித்தாந்த நூல் கூறும்.

தூலவுடல் அழியும்போது ஆன்மாவின் சூக்குமவுடல் மட்டும் எஞ்சுகிறது. அப்போது, அவ்வான்மா முற்பிறப்பில் செய்த இருவினைகளில் அனுபவித்ததுபோக எஞ்சிய வினைப்பகுதி அச்சூக்குமவுடலைச் சார்ந்து நிற்கும். அவ்வினைகளுக்குச் 'சஞ்சிதம்' என்று பெயர். அவ்வான்மா மீண்டும் பிறப்பெடுக்கும்போது அதன் சூக்குமவுடலுடன் புதிய தூலவுடல் வந்து பொருந்துகிறது. புதிய உடலுடன் உலகிற்கு வரும்போது, முன்புள்ள சஞ்சிதவினையின் ஒரு பகுதி இப்பிறவியில் அனுபவிப்பதற்கென ஒதுக்கப்படும். அதனைப 'பிராரத்தவினை' என்பர். பின்னர் எடுத்தபிறவியிலும் ஆன்மா முன்போலவே, மலங்களை அகற்றாமலும், இறைவன் அருள்வழி நின்று பிராரத்தவினையை அனுபவித்துத் தீர்க்காமலும் ஐம்புலவழியே சென்று மேலும் வினைகள் ஈட்டுமாயின், புதிதாக ஈட்டப்பட்ட இவ் 'ஆகாமியவினை' பிராரத்தவினையின் எஞ்சிய பகுதியுடன் சேர்ந்து, இப்பிறவியின் இறுதியில் முன்னைய சஞ்சித வினையுடன்கூடிநிற்கும். இச்சஞ்சிதவினை முழுவதையும் அனுபவித்துத் தீர்ப்பதுவரையிலும் ஆன்மாவுக்குப் பிறப்பானது சங்கிலித் தொடர்போலத் தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கும்.

நல்வினைகளும்'' தீவினைகளும் பிறப்புக்குக காரணமாகின்றன. எனவே. தீவினைகளைப் போல நல்வினைகளும் ஆன்மாவைப் பிறப்பினுள் பிணிக்கும் விலங்குபோன்றனவே என்ற உண்மைமையை நாம் உணர்தல்வேண்டும். நல்வினை பொன்விலங்கு; தீவினை இரும்புவிலங்கு என்னும் வேற்றுமை ஒன்றே அவற்றில் உள்ளது. எனவே, ஆன்மா தீவினைகளைத் தவிர்த்து, பாவத்திலிருந்து ஒருவுதல்வேண்டும் என்பதில் கருத்துவேற்றுமையில்லை. ஆனால, நல்வினைகளைச் செய்தல் கூடாதோ? என்று வினவின், அவற்றைத் தவிராது செயதல் வேண்டும் என்பதே அதற்குரிய விடையாகும். ஆனல் பயனில் பற்றுவைக்காமலும், பயனை இறைவனுக்கு உரிமையாக்கியும், 'என்கடன் பணி இறைவனுக்கு செய்துகிடப்பதே' என்ற உணர்வோடு அவற்றைப் புரிதல்வேண்டும். அப்போது வினைப்பயன்கள் செய்தவனைச் சார்தல் இல்லை.

இறைவன் தனது கருணையால் ஆன்மாக்கள் கடைத்தேறுவதற்கான அருளைச் செய்துகொண்டிருக்கிறன். இறைவனின் அருளுடன் ஆன்மாக்களின் முயற்சியும் ஒன்றுபடுமாயின், ஆன்மாக்கள் இறைவனைச் சார்ந்து முத்தியடைதலாகிய குறிக்கோள் எளிதாகவும், விரைவாகவும் நிறைவேறும். ஆன்மாக்கள் அதன்பொருட்டு மெய்ஞ்ஞானிகள் வகுத்த நெறிகளில் ஒன்றைப் பின்பற்றுதல்வேண்டும். அவை கருமநெறி. பக்திநெறி. யோகநெறி, ஞானநெறி என நால்வகைப்படும். ஆன்மா தன் கடமைகளை வழுவாது புரிந்துகொண்டே இறைவனிடம் அன்பு செய்வது கருமநெறியாகும், இறைவனிடம் மெய்யன்பு பூண்டு ஆடிப்பாடி அகங்குழைந்து உருகுவது பக்திநெறியின் பாற்பாடும். அதிசூக்கும வடிவுடைய இறைவனை அகத்தான் வழிபடுவது யோக முறை என்பர். ஞானநூல்களில் இறைவனைப் பற்றிக் கூறப்பட்டுள்ள செய்திகளைக் கற்றும் கேட்டும் உணர்ந்து. அதன்படி அவனை அறிவால் வழிபடுவது ஞானநெறியாகும். இந்நான்கு நெறிகளுள்ளும் பக்திநெறி எளிதானது என்பர். இறைவன் பக்திவலையில் எளிதில் பட்டுவிடுகிறன். பக்திநெறியில் சரியை. கிரியை முதலிய துறைகள் உள்ளன. அவற்றுள் சரியையாவது, பூப்பறித்தல், மாலை கட்டுதல், திருக்கோயிலை அலகிடுதல் போன்ற இறைவன். தொண்டுகளைப் புரிவதாகும். கிரியையாவது ஆகமமுறைப்படி இறைவனைப் பூசித்து வழிபடுதல், கருமம், பக்தி, யோகம் ஆகிய மூவகை நெறிகளும் இறுதியில் சாதகனுக்கு (அந்நெறிகளில் முயல்பவனுக்கு) ஞானத்தை நல்குவதால், அவன் பிறப்பின் இறுதியில் இறைவனைக் கலந்து முத்தியடைதல் உறுதியாகிறது.

மேற்கூறிய நெறிகள் ஒன்றில் முயலும் ஆன்மாவுக்குப் படிப்படியாக உண்டாகும் உள்ள முதிர்ச்சியின் காரணமாக, இன்பத்தில் குதிகொள்ளாமலும், துன்பத்தில் உள்ளம் துடியாமலும் இருக்கும் மனநிலை உருவாகிறது. அப்போது அவன் இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக எண்ணுகிறன். இது 'இருவினையொப்பு' என்னும் நிலையாகும், அதன்பின் வினைப்பயன்கள் தன்னைச் சாராத வகையில் வினைகளைப் புரியும் எண்ணம் அவனுக்கு உண்டாகிறது. மலங்களின் தொடக்கு இங்கு நிகழ்வதில்லை. உள்ளம் பரிபக்குவம் அடைந்து விடுகிறது. இந்நிலையை 'மலபரிபாகம்' என்பர்.

இதுகாறும் தன்னை வெளிக்காட்டாது ஆன்மாவின் உள்நின்று உணர்த்திய இறைவன் இப்பொழுது குருவடிவாக வந்து காட்சி தந்து, தீட்சை அளித்து, திருவருட்பார்வை செலுத்தி, சிவஞானத்தை அவனுக்கு உணர்த்துகிறன். அப்போது இறைவனின் திருவருள் ஆன்மாவிடம் பதிகிறது. இதனைச் 'சத்திநிபாதம்' என்பர். (சத்தி-உண்மை உணர்வு; நிபாதம்-பதிதல்) இறைவனது திருவருட்பார்வையால் ஆன்மாவின் மும்மலங்களும், சஞ்சிதம் முதலிய வினைகளும் முற்றினும் இல்லையாய்த் தீர்கின்றன. சத்திநிபாதம் பெற்ற ஆன்மா முத்தி நிலைக்குத் தகுதியுடையதாகிறது.

இந்நிலையில் ஆன்மா தனது உடல், அதிலுள்ள பொறிகள், அவை சென்று பற்றும் பொருட்கள் அனைத்தையும் இறைவன் உடைமையாகவே எண்ணுகிறான். தான் அறிவதும் செயல்படுவதும் இறைவன் செயல் என்றே மதிக்கிறான். உள்ளத்தால் ஒன்றுபட்டு இறைவனைக் காணும்போது, 'காண்பான்,' 'காட்சி,' 'காட்சிப் பொருள்' என்றுகூறப்படும் 'திரிபுடி' யுள், காண்பான், காட்சி என்னும் இருகூறுகளும் காட்சிப்பொருளில் கலந்து ஒன்றாய்விட, அவன் அனைத்தையும் இறைவடிவாகவே காண்கிறான். அவனுக்குத் 'தான்' என்று ஒரு பொருளில்லை; எல்லாம் அவனுக்குச் சிவமயம். அவன் எப்பொழும் சிவனையே சிந்தித்துக் கொண்டிருக்கிறான். அதனைச் 'சிவோகம் பாவனை' என்பர். சிவனின் நாமமாகிய திருவைந்தெழுத்தையும், அவ்வெழுத்துக்கள் ஒவ்வொன்றும் உணர்த்தும் தத்துவப் பொருளையும் சிந்தித்துத் தெளிகிறான். 'ந'-என்பது மலங்கள் நீங்குமட்டும், ஆன்மாக்களை வினைகளில் ஈடுபடுத்துவதற்காக மெய்ப்பொருளை அவை உணராதபடி மறைக்கிற, இறைவனின் 'திரோதானம்' என்னும் அருட்சத்தியைக் குறிக்கிறது. 'ம.' என்பது மலத்தையும், 'சி,' சிவத்தையும், 'வ'-சிவத்தின் அருளையும், 'ய', உயிரையும் குறிக்கும். 'ய'கரமாகிய உயிர், 'ந' என்னும் மறைப்பையும், 'ம' என்னும் மலத்தையும், நீக்கி, 'வ' என்னும் திருவருளின் துணையால் 'சி' கரமாகிய சிவனை அடைகிறது என்னும் தத்துவப் பொருளையே 'நமசிவாய' மந்திரம் உணர்த்துகிறது என்பர்.

இந்நிலை எய்திய ஆன்மா சிலகாலம் உலகில் வாழ நேர்ந்தால் அவனை 'சீவன் முக்தன், என்ற புனிதமான பெயரால் அழைப்பர். அவன் இவ்வுலகில் இருந்தாலும் இறைவனிடமாக வாழ்பவனுவான். அவன் செயலெல்லாம் சிவன் செயலேயாம். இறைவன் அவன் வாயிலாக அரிய ஆன்மீக உண்மைகளையும் அருட்செயல்களையும் வெளிப்படுத்துகிறான். சீவன் முக்தன் மாயா காரியமாகிய உலகில் இருந்துவருவதால், குளத்துப்பாசி தொட்டவழி நீங்கி, விட்டவழி மீண்டும் கூடிக்கொள்வதைப்போல. மலங்கள் தன்னை வந்து அணுகாதபடி மிக்க விழிப்புடன் இருந்துவருவான். அதன் பொருட்டுச் சிவனடியார்களின் தொடர்பையும், சிவாலய வழிபாட்டையும் கைக்கொண்டு ஒழுகுவான். உலக வாழ்க்கையை நீக்கும் வேளையில் அவன் தன் உடலைவிட்டு, இறைவனோடு கலந்து ஐக்கியமாகும் முத்தியை 'விதேகமுத்தி' என்பர். அப்போது சீவன் சிவனாகிற பெருநிலை கைகூடுகிறது.

இறைவன் உள்ளத்துள் உள்ளான்

உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம் விட்டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறி யாதே'

—திருமூலர்

சைவப்பிரகாச சபையின்
பழைய கட்டடம்
தோற்றம்: 1885

புதிய கட்டடத் திறப்பு: 1971

புதிய கட்டடம்

சைவப்பிரகாச சபை ஆதரவில்
திருவாவடுதுறை ஆதீன சைவசமய மாநாடு—1958

சித்திரைத்திருநாள்
மேதகு: இராஜப்பிரமுகர் ஸ்ரீ பாலராமவர்மா
துவக்கவுரை



விழாவின்போது
சபைக்கு வருகை

துணை ஜனாதிபதி மேதகு.
டாக்டர். இராதாகிருஷ்ணன்]

மேதகு: ஜோதி வெங்கிடாச்சலம்
(கேரள ஆளுநர்)



மாண்புமிகு:
K. காமராஜ்



அரசு ஆலோசகர் திரு. இராகவாச்சாரியர் I.C S.

மாண்புமிகு: சுந்தரம் — அமைச்சர்
ஊராட்சித்துறை, கேரளம்



டாக்டர்
ப. நடராஜன்



தமிழ்வேள்: திரு: பி. டி. இராஜன்



டாக்டர். V. I. சுப்பிரமணியம்
துணைவேந்தர். தஞ்சைப் பல்கலைக்கழகம்

சபை முன்னாள் தலைவர் டாக்டர். மா. இளையபெருமாள்
படத்திறப்பு



திரு. ஹபீப்முகமது I. A. S.
(கேரளப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்)



மாண்புமிகு; ம. பொ. சிவஞானம்
தலைமையில்
திரு. கி. வ. ஜகந்நாதன்
சைவப்பேருரை

திருக்குறள்: திரு. முனிசாமி

தவத்திரு. குன்றக்குடி அடிகளார்

அருள்திரு. முருக
கிருபானந்த வாரியார்



ஔவை: டி. கே. சண்முகம்

இசை நிகழ்ச்சிகள்

திரு. தண்டபாணி தேசிகர்



திரு. வீரமணி குழுவினர்

திருமதி இராதா—ஜெயலட்சுமி

பித்துக்குளி திரு. முருகதாஸ்



குமாரி அருந்ததி



இசைமணி
சீர்காழி திரு. கோவிந்தராசன்

மதுரை: திரு. S. சோமசுந்தரம்

சுந்தரனுர் தந்த மடல்

''மனேன்மணீயம்'' ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் காலத்தில் கோட்டாற்றில் கணபதி ஆச்சாரி என்னும் பெரியார் வாழ்ந்து வந்தார். இவர் சிறந்த தமிழறிஞர். பாரகாவியம் எனத்தக்க இரு பெரிய காவியங்கள் படைத்த பெரும் புலவர். இவர் படைப்புக்களுள் ஒன்று 4500 பாடல்கள் கொண்ட 'சாணக்கிய சூத்திரம்'. இன்னென்று, ஏறத்தாழ 3000 பாடல்களடங்கிய 'திருச்செந்தூர் திருவிளையாடற்புராணம். இவ்விரு படைப்புக்களையும் அச்சூர்தி ஏற்றும் நோக்கம் கொண்டு, தம் நண்பரான பேராசிரியர் அவர்களை அணுக நினைந்தார். அவரை நேரில் காண்பதற்கு மேற்கொண்ட முயற்சி ஈடேறவில்லை. ஆகவே, திருமுகம் ஒன்று எழுதினர். அத்திருமுகத்துக்கு எதிர்முகமாகப் பிள்ளை அவர்கள் விடுத்த பாடல் இது—

ஆசிரியம்

வந்தனம் வந்தனம் செந்தமிழ்ச் செல்வ!
சந்ததம் வாழ்கநும் நேயம்; தயையா
விடுத்தநும் பத்திரம் அடுத்தநாள் நெறியே
சேர்ந்தும் இதுகால் நேர்ந்தபல் தடையால்
தகும்விடை தாழ்த்தலில் தமியே னுள்ளம்
மிகுதுயர் அடையா நின்றது; மேனுள்
பிணியிலா உடலும் பீடையில் நெஞ்சும்
பெற்றிட நோற்றிலன்; குற்றமற் றஃதே;
நும் பெரும் புலமையும் நும்பெரும் உழைப்பும்
எங்கணும் பற்பலர் இயம்பக் கேட்டுளேன்;
கடல்சூழ் புவிக்குக் கருது நான் கெல்லேயில்
இடம்பெறு தென்றிசைக் கெல்லேயா விருந்த
நுமது நாட்டுக் குமரிக் கோடிபோல்
நீவிரும் தமிழ்க்கோர் நிலேபெறும் எல்லேயே
ஆவீர் என்ப; ஆயினும் குமரிக்
கோடி கோடியே; நீயிரோ, கோட்டமில் ஏகர்;

முன்னோர் புகழும் மும்முடிச் சோழ
நல்லூர் என்னும் நும்மூர் மான
முத்தமிழ்க் குரிய மும்முடி நுமக்கே
ஒத்ததாம் என்ப; ஆயினும் நும்மூர்
குணபால் செல்லும் கோட்டா றுடைத்து;
நீரோ,

குணபால் செல்லும் கோடா ஆற்றர்
என்றிப் படியே பற்பலர் எங்கணும்
ஒன்றிய நும்புகழ் ஓதல்கேட் டுவந்து
கண்டு பழகயான் காதலுற் றிருந்தும்
பண்டை வினையால் நீவிரிவண் அடைந்தகால்
கலந்துரை யாடும் நலம்தரா தொழித்த
இடவேற் றுமையால் படருழல் வேற்கு
சொற்சுவை பொருட்சுவை துளும்பி விம்மி
பற்பல புதிய கற்பனை யமைந்து
பத்தியின் நறுமணம் ஒத்துக் கமழ்கநீர்
இயம்பிய காப்பியம் இரண்டையும் கடைந்து
தெளித்தெடுத் தளித்துச் செவியொடு மனனும்
களிப்புறச் செய்தநும் கரையறு நேசம்
சந்ததம் தழைத்து வாழ்க; தளரும்
செந்தமிழ்க் கொடிக்குச் செழுங்கொழு கொம்பாம்
நும்தகைப் புலவோர் முந்துரு திருந்த
பெருங்குறை யெண்ணிப் பேதுறு வோர்க்கெலாம்
அருங்களிப் புதவும் அடைந்தநும் அழகார்
இருகா வியமும் பெருகா நிற்க
எழுதா எழுத்தில் இயைவித் திடினே
இவ்வழிக் கென்னுல் இயன்றசிற் றுதவி
செய்வதிற் றடையிலே, சிறக்கநும் உழைப்பே.

தங்கள்
இஷ்டன்

சுந்தரம் பிள்ளை

திருவனந்தபுரம்.

இதில், முன்னுள்ள சில அடிகளில் தம் நண்பருக்கு வணக்கம் கூறி, நண்பர் கடிதத்துக்கு உடனே பதிலெழுத முடியாமற் போன தம் இயலாமையைத் தெரிவித்து விட்டுப் பின், கணபதி ஆச்சாரி அவர்களின் புலமையைப் பாராட்டுகின்றார். இது ''கடல் சூழ் புவிக்கு .... என்பது முதல் பன்னிரண்டு அடிகளில் அமைகின்றது-

''நீவிர், தமிழுக்கு ஓர் நிலை பெறும் எல்லை; எது போல என்றால், நுமது நாஞ்சில் நாட்டின் தென் எல்லையாக இருக்கும் குமரிக் கோடி தமிழகத்தின் தென்னெல்லையாக இருப்பதுபோல.ஆனால்குமரி எல்லை (கோடி) ஒரு கோடியாக (கோணலாக) இருக்கின்றது; நீவிரோ கோட்டம் இல் ஏகர்; அஃதாவது கோடுதல் இல்லாத ஒப்பற்ற பெரியீர்'' என்கின்றார்.

''இன்னும்'' நும் ஊரான கோட்டாறு, மும்முடிச் சோழ நல்லூர் என்னும் பெயருடையது. அது போல நீயிரும் மும்முடிக்கும் உரியீர். அஃதாவது, இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுக்கும் ஒவ்வொரு முடி சூட்டுவதாயின் அம் முத்தமிழறிவும் ஒருங்கே அமைவதால் மூன்று முடியும் உமக்கே பொருந்துவனவாகும்; எனினும் நும்மூராய மும்முடிச்சோழ நல்லூரினும் நீவிர் சிறப்புடையீர்; எவ்வாறெனில் அது, குணபால் அஃதாவது கிழக்குத்திசையில் செல்லும் கோட்டாற்றினை உடையது; (இன்றைய பழையாற்றுக்குக் கோட்டாறு என்பது ஒரு பெயர்.) நீவிரோ, குணபால் செல்லும் கோடா ஆற்றர்; அஃதாவது- நற்குணமாகிய பால் வழிந்து ஒடுகின்ற கோணுதலில்லாத நெறியினை உடையீர்'' என்று மிக்க நயம்படக் கூறுகின்றார். பேராசிரியரின் கல்வி மாட்சியையும், கவிபுனையும் ஆற்றலையும் கவின் பெறக் காட்டவல்லதாயுள்ளது இப்பகுதி.

இனி, பிற்பகுதியில் கணபதி ஆச்சாரி அவர்களின் புகழ் கேட்டு நேரில் கண்டு மகிழ விருப்புற்றிருந்தும் அது நிறைவேறாமையால் தமக்கு ஏற்பட்டுள்ள வருத்தத்தையும், செந்தமிழ்ப் புலவரெவரும் துணியாதிருந்த இடங்களில் புகுந்து, பொருள் தேர்ந்தெடுத்துச். சொற்சுவை பொருட்சுவைகளோடு பக்திச்சுவை கனிந்த பாமாலைகள் பாடித் தமிழ்த்தாய்- திருவடிகளுக்குச் சார்த்திய பேராற்றலையும், இருபெரும் ஏடுகளையும் தம் பார்வைக்கு அனுப்பியதால் எழுந்த மகிழ்ச்சியையும் தெரிவிப்பதோடு, இவைஎழுதா எழுத்தாகிய அச்சுவடிவில் மாறும் காலத்தில் தம்மால் இயன்ற உதவி செய்ய முந்தி நிற்கும் ஆர்வமுடைமையையும் தெரியப்படுத்துகின்றார், நம் பேராசிரியர்.

இம்முடங்கல், சிறந்ததோர் இலக்கிய இன்பப் பேழையாக அமைந்திருப்பதோடு, இன்னொரு பேருண்மைமையை விளக்க வல்லதாகவும் உள்ளது. மனோன்மணீய நாடகத்தின் பொருளமைதிக்கு முழுக்க முழுக்க உரிமைப்பட்டவர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களே என்றாலும், அதன் சொல்லமைதி அஃதாவது செய்யுள் நடையில் பெரும் பங்கு வகித்தவர், சாசன ஆராய்ச்சித் துறையில் பேராசிரியருக்கு உதவியாளராக இருந்த திரு. கணேச பிள்ளை என்பவராவார் என்று சிலர் கூறக் கேட்டுள்ளேன். இன்னொருவர் துணையின்றிப் பேராசிரியர் தாமேதம் நண்பருக்கெழுதிய இம்முடங்கலைப் படித்துப் பார்ப்பார்களானால் அன்னார் தம் எண்ணத்தை அறவே விட்டு விடுவார்கள் என்பது திண்ணம். (செய்யுள் நடையில் இரண்டுக்குமுள்ள ஒற்றுமையை எடுத்து விவரிக்க வேண்டிய தேவையில்லை) பேராசிரியர் மீது அப்படி ஒரு மாசு கற்பிக்கப்படுமாயின் அதனை மாய்க்க வல்ல மாணிக்க மணியின் ஒளியாகத் திகழ்வது இம்மடல் என்று கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

—செ. சதாசிவம்

குறிப்பு:

இம்மடல், கோட்டாறு கணபதி ஆச்சாரி அவர்கள் மகனார் திரு. சுவாமிநாத ஆச்சாரி அவர்கள் தம் கைப்பட எழுதிய படியையும், 'சாணக்கிய சூத்திரம்' கையெழுத்துப்படியையும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களிடம் கொடுக்க, கவிமணி அவர்கள் சில காலத்துக்கு முன் எனக்கு உதவினார்கள்.

சைவமும் வீரசைவமும்

டாக்டர். எஸ். கேசவமூர்த்தி M. A; MEd. PhD. NCERT

சைவ மதம் நம் நாட்டில் 6000 ஆண்டுகளுக்கு முன்பே தோன்றி வளர்ந்த போதிலும் அதன் வளர்ச்சியை வெளிப்படையாக தமிழ் இலக்கியத்தில் நாம் காண்பது 6-ம் நூற்றுண்டில்தான். அது போலவே வீரசைவ மதமானது பிறந்தது 12-ம் நூற்றுண்டில் கர்நாடகத்தில்தான். இவ்விரண்டு மதங்களுக்கும் இடையே அனேக ஒற்றுமைகள் கண்டு வருகின்றன. ஈண்டு அவைகளைக்காண்போம்.

63 நாயன் மார்களின் வாழ்க்கை வரலாற்றை வீரசைவ சித்தாந்தமானது ஏற்று அதைக் கன்னட மொழியில் காவியமாக இயற்றியுள்ளது. தமிழ் சைவ மதமானது பன்னிரண்டு திருமுறைகளில் திரட்டப் பட்டுள்ளது. வீரசைவ பாக்கள், ''வசன''சாகித்யம் என அழைக்கப்பட்டு ''ஷரண சாகித்யம்'' என்ற தலைப் பில் திரட்டப்பட்டுள்ளது. தமிழ் சைவ மதத்தில் பக்தர்கள் நாயன்மார்கள் என அழைக்கப்படுகிறுர் கள். வீரசைவ மதத்தில் சிவசரணர் அதாவது சிவனடியார்கள் என அழைக்கப்படுகிறுர்கள்.

1. இரு மதத்து அடியார்களும் சிவனை தந்தையாக வும் தாயாகவும் சகோதரனுகவும், சுடும்ப பந்துவாக வும், காதலனுகவும் வழிபடுகின்றனர். ஆனுல், காதலனுக வழிபடுவதே மிக வலிமை பெற்றுள்ளது. இதனை 'மாதுர்ய பக்தி' என்பர். பொதுவாக சிவனை நெருங்க பல வகை நட்புக்களில் காதலனுக நெருங்கு வது மிக எளிதாகவும், இனிமை உடையதாகவும் கருதப்பட்டுள்ளது.

2. இரு மதத்தினரும் குருவுக்கு முதல் இடத்தை கொடுத்துள்ளனர். குருவே ஜீவனுக்கு ஆன்மீக சக்தியின் பலத்தை கொடுப்பவனுகக் கருதப்படு கிறது. மாயையைக் கட்டுப்படுத்தி மனதை, நிலை நிறுத்த வழிகோலுபவன் குருவே. ஆன்மீக வழியில் குருவேவழிகாட்டி. அவனே சிவனை அறிமுகப்படுத்து பவன். அவன் இல்லை எனில் சிவனை நெருங்க முடியாது, அதை சிவதீட்சை மூலம் குருவே நிறை வேற்றுகிருன்.

3. இரு மதத்தினரும் மாயையை நம்புகின்றனர். இந்த மாயையே காம, குரோத, மத, மோக, மாத்சர்ய, லோபங்கள் ஆகியவற்றின் மூலம் ஜீவனை பரமனிடம் அணுக தடை செய்கின்றன. அதனை முதலில் வென்றுல் மனம் ஒருமுகப்பட்டு சிவனைக் காண முடியும் என்று கூறுகின்றனர்.

4. இரு மதத்தினரும் சிவன் கோயில் லிங்க வழி பாட்டை ஏற்கின்றனர். ஆனுல் வீர சைவமதத்தில் லிங்க வழிபாட்டிலிருந்து முன்னேறி நிராகார அநாதி அனந்த, பரமனை அணுக முற்படுகின்றனர். இது உருவமற்ற வழிபாட்டில் முடிவடைகின்றது. பக்தனின் உடலிலேயே லிங்கத்தின் கற்பனை, கடவுளை வெளியே வழிபட வேண்டியதில்லை, அவன் உடலிலேயே உள்ளான் என்பதனை உறுதிப்படுத்து கிறது.

5. இரு மதத்தினரும் அகங்காரத்தை வென்று ஆணவ மலத்தினை அப்புறப்படுத்தி, நல்லொழுக்க மும் அடக்கமும் தேவை என வலியுறுத்துகின்றனர். தம்மை அடியார்க்கு அடியாருடைய தொண்டன் என்று கூறித் தமிழ் நாயன்மார்கள் அடக்கத்தை வெளிப்படுத்தினுல். தொண்டர்களின் வீட்டு நாயாக என்னைப் படைத்து விடு என்று வீர சைவ மதத்தினர் தம் அடக்கத்தை தெரிவித்துள்ளார்கள். ஏழை எளியவர்களின் சேவை மூலம் கடவுளைக் காணலாம் என இரு மதத்தினரும் வலியுறுத்துகின்றனர்.

6. இரு மதத்தினரும் தன்னைத் தான் அறிந்தால் சிவனை அறிந்தது போல் ஆகும் என்று தன்னுடைய வலிமையை, தன்னுடைய குறையை எடுத்து உரைக் கின்றனர். தன்னைத் தகுதி உடையவனுக ஆக்கு பவன் சிவனே. சிவனுடைய கருணையால் தான் நல்ல குரு கிடைப்பான் என இருவரும் ஏற்கின்றனர்.

7. இரு மதத்தினரும் சிவனைப் பரமனென்றும், ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்றினையும் செய்பவன் சிவனே என்றும் ஏற்று வழிபடுகின்றனர். அவனிலிருந்தே உலகம் பிறந்தது, பின் ஊழிக்காலத்தில் அவனுள்ளேயே அடங்கும். அவனுடன் ஒன்றறக் கலப்பதுவே முத்தி என்றும், சிவன் ஒருவனே கடைசியில் நிற்பது என்பது இரு மதத்தினரும் ஏற்கும் கருத்துக்கள் ஆகும்.

8. இரு மதத்தினரும் விசிஷ்டாத்வைதத்தில் தொடங்கி அத்வைதத்தில் முடிக்கின்றனர். கடவுள் லீலை புரிவதற்காக இரண்டானான். லீலை முடிந்ததும் ஒன்றாக நிற்பவன் என்பது அவர்கள் கருத்து. பழமும் பழத்தின் இனிமையும், ஒளியும் இருட்டும் போல் கண்ணும் இமையும் போல், இசையும் கவிதையும் போல் ஜீவனும் சிவனும் இணை பிரியாதவர்கள். அவர்களை வேறாகக் காண்பது மிகக்கடினம். ஒன்றாகக் கலந்தே நிற்கின்றனர்.

9. இரு மதத்தினரும் சக்தியும் சிவனும் சேர்ந்துதான் சிவன் பூரணனாகிறான். சிவனின் சக்தியே மாயையாக வருகிறது. மாயையின் திரை விலகியதும் இருவரையும் ஒருவனாகக் காண்கின்றான் எனக் கூறுகின்றனர்.

10. இரு மதத்தினரும் இரகசிய வாதத்தை மேற்கொண்டு, மதுவுண்ட மயக்கம் போல் சிவனின் காதல் மயக்கத்தில் ஆழ்ந்து கிடக்க விரும்புகின்றனர் அவர்களுடைய மயக்கம் காணற்கரியது. தன்னை மறந்து அவனாகும் மயக்கமாகும்.

11. சைவ சித்தாந்தத்தின் அடிப்படை தத்துவமான சர்யா, கிரியா, யோகம், ஞானம் என்பதை இரு மதத்தினரும் ஏற்கின்றனர். சர்யா, பக்தியின் வெளிச்சடங்குகளாகிய— கோவிலை சுத்தம் செய்தல், பூக்களைப் பறித்து வருதல் ஆகியவை அடங்கும். இதனை தாசமார்க்கம் அதாவது சேவை என்று கூறுவர். இது சாலோக்கியப் பதவியைக் கொடுப்பது என்பர். கிரியை பரமனுக்கு செய்யும் அந்தரங்க சேவை எனலாம். ஒரு தனயன் தகப்பனுக்குச் செய்யும் சேவை எனலாம். இதனை 'சத்புத்திர மார்க்கம்' என்பர். இதன் குறிக்கோள் பரமனின் சாமிப்பியத்தை அடைவது என்பர். யோகம் என்பது பரமனைத் தன்னுள் காணும் வித்தை. இதனை உள் வழிபாடு என்றும் கூறுவர். இதை சகமார்க்கம் என்பர். இதன் குறிக்கோள் 'தான் அவனே ஆதல்' அதாவது தானே கடவுளாதல் என்று பொருள். இதனை சாரூப்ய பதவி என்பர். ஞானம் என்பது அறிவு அல்லது ஞானத்தைப்பெறுவது. இதனை 'சன்மார்க்கம்' என்பர். இதன் குறிக்கோள் கடவுளுடன் ஒன்றறக் கலத்தல், சாயுஜ்ய பதவி என்பர். இந்த நான்கு சர்யைகளும், சமய சர்யைகளும் சைவ சித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவங்களாகும். இதனை இரு மதத்தினரும் ஏற்கின்றனர்.

11. இரு மதத்தினரும் சிவனின் உக்கிர ருபத்தை தவிர்த்து அன்பும் கருணையும் உருவான சாந்தி ரூபத்தை மேன்மைப் படுத்தி அவனுடைய சத்தியம், சிவம், சுந்தரம் ரூபத்தைப்பாடி வழிபட்டனர்.

12. இரு மதத்தினர்களிடையே சைவ சித்தாந்த நூல்கள் இயற்றப்பட்டன. இருவரும் பரமனை பாடி தேவாரம் — வசனங்களை இயற்றி மதத்தைப் பரப்பினர்.

13. இரு மதத்தாரும் மதப்பாடல்கள் வாயிலாக சமூக சீர்திருத்தம், அமைதி வழி கிளர்ச்சி, அறப் போராட்டம், மறப் போராட்டம் நடத்தினர்.

14. இரு மதத்தினரும் 36 சிவத் தத்துவங்களை ஏற்று உலகப் படைப்புக்கு அவைகளே காரணம் எனக் கூறி, இவைகளே உலகத்திற்கு ரூபத்தை கொடுக்கின்றன என ஏற்றனர்.

15. இரு மதத்தினரும் ஜைன, பௌத்த மதங்களினால் பாதிக்கப்பட்டு அல்லற்பட்டு, பின் அம்மதத்தினரைத் தம் விடா முயற்சியால் வென்று, வெற்றிக் கொடியைப் பறக்க விட்டனர்.

16. இரு மதத்தாரும் பெண்களுக்கு உயர் இடத்தை தந்து, அவர்களைப் பராசக்தியின் ரூபமாகக் கருதி, அவர்களைத் துறந்து சன்னியாசத்தின் மூலம் பரமனைக் காண வேண்டிய அவசியம் இல்லை. இல்லறத்தில் இருந்து கொண்டே பரமனைக் காண முடியும் எனக் கூறி, அதை நடை முறையில் நடத்திக் காட்டினர். 63 நாயன்மார்கள் கதைகளும் அனுபவ மண்டபத்தில் வீரசைவ பெண்களின் மதசேவையும் காணற்கரியனவாகும்.

17. இரு மதத்தினரும் சமூகத்தில் பரவியிருந்த மூட நம்பிக்கைகளை கண்டனம் செய்து சமூக சீர்திருத்தங்களைச் செய்தனர்.

18. இரு மதத்தினரும் பல்வேறு கடவுள் வழிபாட்டைக் கண்டனம் செய்து கடவுள் ஒருவனே, ஒரே மதம், ஒரே சாதி எனக் கூறி மானவ சமுதாயத்தை, நிறுவ முற்பட்டனர். அதில் வீரசைவ மதத்தினருக்கு வெற்றி கிட்டியது.

19. இரு மதத்தினரும் மக்கள் மனத்தைக் கவர, மற்றும் மக்களுடன் நெருங்கிய தொடர்பைப் பெற மக்கள் வழக்கிலிருந்த மொழியை தம் இலக்கிய மொழியாக்கி சீர்திருத்தங்களை, அவர்கள் மனம் தொடும்படி இட்டனர். ஆகையால், இவர்கள் பாக்களும் வசனங்களும் எளிமையும் கருத்தின் இனிமையும் தெளிவும் கொண்டதாக இருக்கின்றன.

20. இரு மதமும் மூலசைவ சித்தாந்த அடிப்படை தத்துவங்களை ஏற்கின்றன. உபநிடதம் மற்றும் ஆகம நூல்களை ஆதாரமாகக் கொண்டு தம் சித்தாந்தங்களை பலப்படுத்தி உள்ளனர்.

இவ்வாறு இரு மதத்திலும் பல ஒற்றுமைகள் கண்ட போதிலும், வீரசைவ மதத்தில் சில வேற்றுமைகள் தென்படுகின்றன. அவைகளை ஈண்டு காண்போம்—

வீரசைவ மதம் ''காயகவே கைலாச'' வேலையே கடவுள் எனக் கூறி, சன்யாசியும் கூட தன் வயிற்றை நிரப்ப வேலை செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறது. பிறந்த ஒவ்வொருவரும் வேலை செய்தே ஆக வேண்டும் என்று கூறி, நாட்டின் பொருளாதாரத்தை மற்றும் வேலையில்லா பிரச்சனையை தீர்க்க முயன்றுள்ளது.

ஷட்தைவ சிந்தாந்தம் வீரசைவ மதத்திற்கே உரிய, தனதே ஆன தனிப்பட்ட சித்தாந்தமாகும். இதற்கும் தமிழ் சித்தாந்தத்திற்கும் அதிக வேறுபாடுகள் உண்டு.

அஷ்டாவரணம் வீரசைவ சித்தாந்தத்தின் தனிப்பட்ட கருத்தாக இல்லாத போதிலும், இதனை எட்டுப் பிரிவாக பிரித்து, இதற்கு ஒரு முறையைக் கொடுத்து இதனை வேறு எந்த சைவ மதமும் வலியுறுத்த வில்லை. இதனை அஷ்டாவரணம் என்று சிறப்பித்து முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது வீரசைவ சித்தாந்தத்தில் மட்டுமே யாகும்.

பஞ்சாசாரம் வீரசைவ மதத்தின் சிறப்பம்சமாகும். இதனை வேறு எந்த சைவ மதப் பிரிவிலும் காண முடியாது.

இவ்வாறு வீரசைவ சித்தாந்தம் சைவ மத கிளைகளில் சிறப்பான ஒரு கிளையாக உள்ளது என்பது வெளிப்படை.

குலசேகரரின் உவமைகள்

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்

ஆழ்வார்கள் பன்னிருவரில் இவர் ஒருவர் ஆவர். ஆழ்வார்களில் திருமங்கையாழ்வாரும் இவரும் அரசர்களாக ஆண்டவர்கள் ஆவர். அதிலும் திருமங்கை மன்னர் குறும்பொறை நாட்டையாண்டவராயிருக்கக் குலசேகரர் பழந்தமிழ் நாடுகளாம் சேர சோழ பாண்டிய நாட்டில் மூன்றில் ஒன்றான சேர நாட்டில் செங்கோல் செலுத்தியவர் ஆவர்.

குலசேகரர் தம்முடைய பாடல்களில் தம்மை க்ஷத்திரிய வருணத்தைச் சார்ந்தவர்[1] எனவும், கொங்கு நாட்டின் அரசர்[2] எனவும், கொல்லி என்னும் தலைநகரையுடையவர்[3] எனவும் தாம் பிறந்த குலம், நாடு, நகர்களைக் கூறுவர். மேலும் இவர் தம் பாடல்களில்

'கூடலர் கோன் கோடைக்குலசேகரன்'[4]

என்றும்,

'கொல்லி காவலன் கடல் நாயகன்
கோழிக் கோனகுல சேகரன்'[5]

என்றும்,

'கொல்லி நகர்க்கிறை கடற் கோமான்'[6]

என்றும்.

'கூரார்ந்த வேல்வலவன் கோழியர் கோன்'[7]

என்றும்,

'கொல்லியலும் படைத்தானைக் கொற்ற
வொள்வாட்
கோழியர் கோன் குடைக்குலசேகரன்'[8]

என்றும் தம்மைத் தம் பாசுரங்களிற் கூறிக் கொள்வதால் சோழ, பாண்டிய நாடுகளுக்கும் இவர் ஒரு காலத்தில் இறையாயிருந்திருத்தல் கூடும் என ஊகிக்கலாம்.

சிலர் இவர் பாண்டிய வேந்தராகப் பிறந்தார் என்றும், சேர நாட்டில் மன்னர் கால் வழி அற்றுப் போக மருமக்கட் தாய் வழக்கும்படி இவர் சேர வேந்தராகத் தெரிந்தெடுக்கப்பட்டார் என்றும், சேர நாட்டில் இவர் பாண்டிய குலசேகரப் பெருமாள் என்றே வழங்கப்பெற்றார் என்றும் கூறுப. வேறு சிலர் இவ் ஆழ்வார் 'கூடல் நாயகன், கோழிக்கோன்' என்று கூறுகின்றவை, பாண்டிய சோழ நாட்டாட்சியில் தமக்குரிய தலைமை பற்றியன என்பதிலும், அவ்விருவர் மரபுடனும் தங்குலத்தவர்க்கிருந்த தொடர்பு பற்றியன என்று கொள்ளுதலே பெரிதும் பொருத்தமுடைத்து என்பர்[9]. இனி அவர்தம் உவமைகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

---

1 'எங்கள் குலத் தின்னமுதே யிராகவனே தாலேலோ' [பெருமாள் திருமொழி 8:3]

2 'கொங்கர் கோன் குலசேகரன்' [ஷி:3:9]

3 'கொல்லி நகர்க்கிறை (ஷி:6:10)
கொல்லி காவலன் (ஷி: 9.10)

4 பெருமாள் திருமொழி : 1:1

5 பெருமாள் திருமொழி : 2 : 10

6 பெருமாள் திருமொழி : 6 - 10

7 பெருமாள் திருமொழி : 9 : 11

8 பெருமாள் திருமொழி : 10 : 11

9 திரு மு. இராகவையங்கார் - ஆழ்வார்கள் காலநிலை

உவமைகள் :

''உவமையின் பொருளும்ஒத்தல் வேண்டும்''

—தொல்: 1229

என்றும்

''வினைபயன் மெய்யுரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்''

—தொல்: 1222

என்றும்

''உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை''

—தொல்: 1224

என்றும் தொல்காப்பியனார் உவமை பற்றிக் குறிப்பிடுவர். இவ் இலக்கணங்கள் குலசேகரர் திரு மொழிகளிற் பொருந்தியிருக்கக் காணலாம்.

ஆதிசேடன் உமிழ்ந்த செந்தீயானது, மலரால் அமைந்த விதானம் போன்றுள்ளது;

''...........அழல்நாக முமிழ்ந்த செந்தீ
வீயாத மலர்ச் சென்னி விதானமே போல்''

2:2

காயாம் பூவினாலே தொடுக்கப்பட்ட நீலமலர் மாலையைப் போன்றவன் என்று திருமால் குறிக்கப் பெறுகிறான்.

காயாம்பூ மலர்பிறங்க லன்ன மால்

- 2: 3

அரங்கத்தம்மான் திருக்கோயிலில் முழங்கும் முழவோசை கடலோசை போன்றிருக்கும்;

சீரார்ந்த முழவோசை பரவை காட்டும்

- 9: 3

கடல் போன்று கருநீல நிறங் கொண்டு விளங்கும் திருவரங்கத்தம்மான் என்பது,

கடல் விளங்கு கருமேனி யம்மான்

—11:2

எனக்குறிக்கப்பட்டுள்ளது.

நூலினை ஒத்த இடையுடைய மகளிர்
'நூலி னேரிடை யார்'

—29: 1

எனக் குறிக்கப்படுகின்றனர். இவ்வுவமை நூல் போன்று மெல்லிய இடையினை உடைய பெண் களைக் குறிக்கின்றது.

பெண்களின் நுண்ணிய இடை மின்னிலொடு ஒப்பிடப்பட்டுள்ளது;

மின்னனைய நுண்ணிடையார்

—36: 1

வெண் கொற்றக்குடை முழுநிலவுக்கு உவமை கூறப்பட்டுள்ளது:

வானாளும் மாமதிபோல் வெண்குடை

—37:1

ஐந்தாந் திருமொழி முற்றும் உவமையழகுக்குப் பெயர் போனது எனலாம். அரிய உவமைகள் அமைந்து உயர்த்த பொருளினை நமக்கு உணர்த்து கின்றன. ஒவ்வோர் பாடலும் ஓர் உவமையினை உள்ளடக்கி உள்ளன.

பெற்ற தாயானவள் மிக்க கோபங்கொண்டு அதனால் தனது குழந்தையை வெறுத்துத் தள்ளினாலும் பின்பும் அத்தாயினுடைய கருணையையே கருதி அழுகின்ற இளங் குழந்தையாகக் குலசேகரர் தமக்கு உவமை கூறுகின்றார்.

''அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும்
மற்றவள்தன்
அருள் நினைந்தே யழுங்குழவி யதுவே
போன்றிருந் தேனே''

— 42: 3. 4,

கணவன் காண்பார் அனைவரும் இகழத்தக்க செயல்களையே செய்தாலும் தன்னை மணஞ் செய்துகொண்ட கணவனையன்றி வேறு ஓர் ஆண்மகனையும் நினைக்கவுஞ் செய்யாத உயர் குலத்துப் பிறந்த கற்புடை மகள்போலக் குலசேகரர் திருமாலோடு தம்மைத் தொடர்புபடுத்திக் கொள்கிறார்.

கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை யல்லாலறியாக் குலமகள்
போல்''

— 43 ; 1, 2.

குடிமக்களைக் காக்கவேண்டிய அரசன் அவர்களைப் பாதுகாக்காமற் போய் மாறாக எப்படிப்பட்ட துன்பங்களைச் செய்தாலும் அவனுடைய செங்கோலையே எதிர்பார்த்து வாழ்கிற குடிமக்கள் போன்றிருந்தேன் என்கிறார் ஆழ்வார்:

''தான் நோக்காது எத்துயரஞ் செய்திடினும்
தார்வேந்தன்
கோல் நோக்கி வாழுங் குடிபோன்
றிருந்தேனே''
—44: 3, 4

மருத்துவன் நோயாளியின் நோய் தீர்தற் பொருட்டு, நோயாளியின் உடம்பைக் கத்தியைக் கொண்டு அறுத்தலும், சூடு போடுதலுஞ் செய்தாலும், அம் மருத்துவன் மாட்டு நீங்காத அன்பு செலுத்தும் பிணியாளனுக்குத் தம்மைக் குலசேகரர் ஒப்பிட்டுக் கொள்கின்றார்;

''வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்
பால்
மாளாத காதல் நோ யாளன்போல்''
—45: 1, 2

அலையெறிகிற கடலினிடையில் நான்கு திக்கிலும் போய்ப்பார்த்து எங்கும் கரையைக் காணாமல் திரும்பி வந்து தான் முன்பு பொருந்திய மரக்கலத்தினுடைய பாய்மரத்தின் மீது சேர்கிற பெரியதொரு பறவையை யொத்திருந்தேன் என்கிறார் ஆழ்வார்;

''எங்கும்போய்க் கரைகாணா தெறிகடல்
வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறு மாப்பறவை
போன்றேனே''
—46. 3.4

செந்நிறமுடைய நெருப்பு தானாக அருகில் வந்து வெப்பத்தைச் செய்தாலும் செந்தாமரை மலர் வானத்தில் தோன்றுகிற வெள்ளிய கதிர்களையுடைய கதிரவனுக்கன்றி நெருப்புக்கு மலரமாட்டா என்று கூறித் திருமாலன்றிப் பிறர்க்கு மனங்குழைய மாட்டேன் என்கிறார் ஆழ்வார்.

''செந்தழலே வந்தழலைச் செய்திடினுஞ்
செங்கமலம்
அந்தரஞ்சேர் செங்கதிரோற் கல்லால்
அலராவால்''
—47:1.2

மேகமானது எவ்வளவு காலம் மழைபெய்யாமல் இருந்தாலும் பசுமை தங்கிய பயிர்கள் கருநிறங்கொண்டு வானத்தில் தோன்றும் பெரிய மேகங்களையே எதிர்பார்த்திருக்கும். அது போன்று ஆழ்வார் துயரினை ஆண்டவன் வீட்டாளிடினும் அவனுடைய அருளையே எதிர்நோக்கியுள்ளார்.

''எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்
கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்''
—48: 1,2

நீர் திரண்டு வரும் ஆறுகளெல்லாம் கண்டவீடமெங்கும் பரவியோடி முடிவில் ஆழ்ந்த கடலிலே சென்று சேர்தவல்லது மற்றோரிடத்தே புகுந்து நிற்க மாட்டா; அதுபோல் நாராயணனையே சரண் புகுகிறார் ஆழ்வார்;

''தொக்கிலங்கி யாறெல்லாம் பரந்தோடித்
தொடுகடலே
புக்கன்றிப் புறநிற்க மாட்டாத''
—49: 1,2

உன்னையே (நாராயணனையே) மிக விரும்பி, மிக்க செல்வத்தை விரும்பாதவனையேதானாகவந்து செல்வம் சேர விரும்பும். அது போல் நின்னையே நான் வேண்டுவேன்; நீள் செல்வத்தை வேண்டேன் என்கிறார் ஆழ்வார்;

''நின்னையே தான் வேண்டி நீள் செல்வம்
வேண்டாதான்
தன்னையே தான்வேண்டுஞ் செல்வம்போல்''
—50: 1,2

யானையின் நடைக்கு எம்பெருமான் தன் நடையும், தாமரைக்கு முகமும் உவமையாகக் கூறப்பட்டுள்ளன:

''கைம்மாவின் நடையன்ன மென்னடையும்
கமலம் போல் முகமும்''
—89: 3

ஆக இவ்வாறு பெருமாள் திருமொழியில் குலசேகரரின் உவமை நலங் காணும் போது ஐந்தாம் திருமொழியின் ஒவ்வொரு பாடலும் பரமாத்மா ஜீவாத்மா முறை, நாயகன் நாயகி பாவம் ஆகியஇவ்வொன்றன் கூறாக அமைந்து அழகூட்டுகின்றன எனலாம். பிறவிடங்களில் எளிய உவமைகளே இடம் பெற்றிருக்கக் காணலாம். பிறவிடங்களில் வண்ண, வடிவு உவமைகள் அமைந்திருக்க, ஐந்தாம் திருமொழி வினையுவமை கொண்டிலங்குகின்றது.

துறவு

டாக்டர். சி. சுப்பிரமணியபிள்ளை

திருஞான சம்பந்தர், தில்லைச் சிற்றம்பலத்தில் நின்றாடும் இறைவனின் காட்சியைக் காண்பதற்கு இவ்வுலகில் மனிதப்பிறவி வேண்டும் என்று யாசிக்கின்றார்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில்
பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும்
காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
மாநிலத்தே

(தேவாரம் 4-81-4)

அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது என்பது ஔவை மொழி. மானிடராகப் பிறந்தாலும் துறத்தல் அரிது என்பது தாயுமானவர் பொன்மொழி. துறவு பற்றிப் பேசும் தாயுமான சுவாமிகள்,

பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப்
பிள்ளையைப் போல்
ஆருந் துறக்கை அரிது .. ..என்றார்.

முற்றும் துறந்த சிவனடியார் இன்னொரு அடியாரின் துறவைப் போற்றுமுகமாக இப்பாடல் வரிகள் அமைகின்றன எனில் அது மிகையாகாது.

இந்தியச் சமயங்கள் எல்லாம் துறவு நெறிக்கு முக்கியத்துவம் கொடுப்பனவே. பௌத்தம், சமணம் வைணவம், சைவம் இவற்றுள் துறவு பற்றிப் பேசப் படுவதோடு நிலையாமை பற்றியும் விளக்கப் பட்டுள்ளன அழிந்து ஒழியும் இவ்வுலகில், உலக வாழ்க்கையில் அழியா வாழ்வும் மீண்டும் மீண்டும் பிறப்பு இறப்பு அற்ற நிலைபெற்று இறையை அடையப் பேசப்படும் மார்க்கம் துறவு வாழ்வே ஐம்புல பொறி இன்பங்களை அடக்கி ஆள்வதன் மூலம் இவ்வுலக ஆசைகளைக் களைந்து ஒதுக்கி விட்டு மனம் மொழி மெய்களால் இறையுணர்வு உடையோராகி, கூடவே தானமும் தருமமும் சந்ததமும் செய்வோர் துறவு நெறியால் 'சிவஞானம்' தனை அடையும் நல்லோர்களாகின்றனர்.

இத்துறவு பற்றித் திருவள்ளுவரும் விதந்து கூறுகின்றார். பரிமேலழகர் 'துறவு' அதிகாரத்தின் முறைவைப்பைக் கூறுமிடத்து, 'புறமாகிய செல்வத்தின் கண்ணும், அகமாகிய யாக்கையின் கண்ணும் உள்ளதாம் பற்றினை, இவற்றது நிலையாமை நோக்கி விடுதல் '' என்பார். துறவு அதிகாரத்தின் முன் அதிகாரமாக நிலையாமையையும்', பின் அதிகாரமாக 'மெய் உணர்தலையும்' அமைத்திருப்பதும் பொருள் பயன் நோக்கியே. எனவே நிலையா உலகில் நிலையாக உள்ளது ஒன்றுண்டு; அதுவே வீடு பேறு. இதனை அடைய வேண்டின் நிலையாப் பொருட்களின் மீது ஆசை வைக்காது, மவுன நிலையில் ஒன்றி வாழ்க்கையைத் துறத்தலே உரிய சிறப்பான வழி என்பது தாயுமான சுவாமிகள் கருத்து.

இறைவன் அருட் செயலில் நின்றால் ''வீட்டறம் துறவறம் இரண்டும் மேன்மையே' எனக் கூறுகின்றார் சுவாமிகள். அருள்செயலே அறச் செயல். இல்வாழ்க்கையில் கடைப் பிடிக்க வேண்டியதும் இதுவே. வள்ளுவரும் வேறு நெறியில் பெறக்கூடிய பயன பெரிதும் இல்லை என்று மொழிகின்றார். தனக்கு நேரிடும் துன்பம் பொறுத்தல், பிறருக்குத் துன்பம செய்யாமல் இருத்தல் இவையிரண்டும் தவ வாழ்க்கையின் கொள்கைகள். இத்தகு கொள்கைகளையுடைய ஞானப்பக்குவம் வாய்க்கப் பெற்றவர் உலகில் செயல்களைச் செய்து கொண்டேயிருப்பினும் அவன துறவியே ஆவான.

உற்றநோய் நோன்றல் உயிர்க்கு
உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு (குறள் - 261)

ஆகவே கற்றைச் சடையும் காவி ஆடையும் உடைய புறத்தோற்றத் துறவினும் உலகம் பழிக்கும் செயலைச் செய்யாமையாகிய அகத்துறவே சிறந்த துறவு.

பகவத்கீதையும் துறவி எனப்படுபவன் 'பலனை எதிர்பாராமல் செய்ய வேண்டியவற்றைச் செய்பவனே' என்பதை,

அநாச்ரித கர்மபலம்
கார்யம் கர்ம கரோதிய' எனக் கூறுகின்றது.

மேலும், ஒன்றைச் செய்தால் பலனடையலாம். அல்லது பலனை அடைய இதனைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொள்ளாதவனே துறவி ஆவான். இதனை,

''நஹிஅ ஸந்யஸ்த ஸங்கல்ப
யோகி பகவதி கச்சந.,

என பகவத் கீதை
புலப்படுத்துகின்றது. பலன்களை விரும்பிச்செய்யப் படும் கருமங்களைத் துறப்பதே துறவு. எனவே இல் வாழ்க்கையில் சிறந்த வாழ்க்கையே வீட்டறம். இறைவாழ்க்கையில் சிறந்த வாழ்க்கையே துறவம். கீதையில் சொல்லப்பட்ட மார்க்கம் உலகச் செயல் களைச் செய்து கொண்டே உள்ளத்தைப் பற்றச் செய்து கொள்வதாகும். ஆகவே துறவு என்பது சமுதாயத்திலிருந்து நீங்கி, சமுதாயத்தால் தானும், தன்னால் சமுதாயமும் பாதிக்கப்படாமல் வாழ்தல் அன்று. சமுதாயத்தில் இருந்து கொண்டே சமுதாய நலன் கருதி தொழில் செய்து, தொண்டு செய்து வாழ்வதே. இதனைத்தான் நாராயண குருவும் மேற் கொண்டிருந்தார்.

துறவிலும் தலைசிறந்த துறவு உண்டு. அல்லதும் உண்டு. துறந்தோரிலும் நல்ல துறவோர் உண்டு. அல்லரும்உண்டு. இதனைத் தாயுமானவர் நயம்படக் கூறுகின்றார். அந்தக்கரணம் அடங்கத் துறப்பதுவே எந்தத்துறவினும் நன்று, அதாவது மனம் (*Mind*) புத்தி (*Resason, the organ of Conseious-ness*), ஆங்காரம் (*Energy, any one of the Passions*), சித்தம் (*Will or desire*) இவற்றை அடக்குதல் வேண்டும். அடக்காதவர் துறவி ஆகார். நல்ல துறவோர் யார்? எல்லாம் துறந்தோர் துறவோர் என்பதைவிட,

''நித்திரையில் செத்தபிணம் நேரும் உடற்கு
இச்சைவையாச்
சுத்தர்களே நல்ல துறவோர் பராபரமே.''

நிலையா உடல் மீதுள்ள பற்றினை விட்டவர்களே சுத்தத் துறவோர்.

நிலையாமையைக் கண்டு துறக்க வேண்டும். மதங்களும் ஒன்று சொன்னபடி ஒன்று சொல்லாது. இச்சசரவுக்குள் புகுந்து விடாமல் துறவில் ஈடுபட்டு நிருவிகற்ப நிலையில் ஈடுபடின் மோனநற்கதி கிடைக்கும். எனவே கள்ள மனத்துறவை விட்டுவிட்டு துறவுநெறியில் விருப்பம் உள்ளவர் போல் நடிக்கும் நடிப்பை விட்டுவிட்டு எல்லாம்துறந்த துறவோர்கள் கற்பித்த மொழிப்படி ஒழுகின் இன்பம் வாய்க்கப் பெறும். மனவலிமையால் துறவு மார்க்கம் சேராமல் வீணுகப் பாரத்தனம் (*Pride of Achievement*) பேசல் பண்போ? என்பார் சுவாமிகள். சைவ அடியார்களின் பண்பினை உணர்ந்தால் துறவு நிச்சயமே. இதனை,

ஒட்டுடன் பற்றின்றி உலகைத் துறந்த
செல்வப்
பட்டினத்தார் பத்ரகிரி பண்புணர்வது எந்நாளோ

என்பதால் உணரலாம். தாயுமான அடிகளாரும் இவ்வுலகியல் வாழ்க்கையிலிருந்து துறப்பது எப்போது? என ஏங்குகின்றார்.

மறக்கின்ற தன்மை இறத்தல் ஒப்பாகும்,
மனதுஒன்றின்
பிறக்கின்ற தன்மை மறத்தல் ஒப்பாகும்
இப்பேய்ப்பிறவி
இறக்கின்ற எல்லைக்களவில்லையே இந்தச்
சன்ம அல்லல்
துறக்கின்ற நாள் எந்த நாள் பரமேநின்
தொழும்பனுக்கே.''

இப்பிறவியால் உண்டாகும் துன்பத்தை நீங்கும் காலம் இறையடியணுகிய தொண்டனுக்கு எந்நாள். இவ்வுலகியல் வாழ்வில் எல்லாவற்றையும் கூர்ந்து நோக்கினால், மேலோராகக், கருதப் படுகின்றவர்கள் வாழ்க்கையைத் துறந்தவர்களே. அல்லாதவர் கீழோர். இவ்வாறு துறப்பது தான் 'விதி' இதனை

வாளாருங் கண்ணியர் மேகம்-யம
வாதைக் கனலை வளர்க்கும் மெய் என்றே
வேள் ஆனவனும் மெய் விட்டான்—என்னில்
மிக்கோர் துறக்கை விதியன்றோ? தோழி.

என்றார் சுவாமிகள்

இறைவன் படைத்த இவ்வுலகில் உடல், உலகம், வாழ்வு இவையாவும் பொய் எனக் கண்டு கொண்ட பின்பும் துறவு நெறியைச் சேராதவர்கள் பாவிகளே ஆவர். சிவன் செயலால் தான் எல்லாம் நடைபெறும் அவனன்றி ஓரணுவும் அசையாது. எனத் தெரிந்தும் உலக அல்லலில் உழன்று அலைகடலில் அகப்பட்ட துரும்பெனத் தவிக்கின்றேன். சிவன் அருட்பார்வை கிடைத்திடின்' உலகவாழ்வு வேண்டும், அன்பர்தம் பணி வேண்டும். பிறவியும் வேண்டும் என்றார் தாயுமானவர். அன்பர் பணியே சிறந்தபணி. என்கடன் பணி செய்து கிடப்பதே எனத் தாண்டக வேந்தரும், அன்பர்பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால் இன்பநிலை தானே வந்துசேரும் எனத் தவராசசிங்கமும் கூறியது கருதத்தக்கது.

TRINITY TRUST

TRINITY BUILDINGS, ARYASALAI JN.
